குறுக்குத்துறை ரகசியங்கள்

நெல்லை கண்ணன்



வேலுக்கண்ணன் பதிப்பகம்

குறுக்குத்துறை ரகசியங்கள்

நெல்லை கண்ணன்

வேலுக்கண்ணன் பதிப்பகம்
69, அம்மன் சந்நிதி தெரு.
திருநெல்வேலி நகரம் - 627 006.
தொலைபேசி : 0462 - 2337734

முதற் பதிப்பு - ஜனவரி, 2000
இரண்டாம் பதிப்பு - ஆகஸ்டு, 2002
மூன்றாம் பதிப்பு - ஜூன், 2005
நான்காம் பதிப்பு - ஜூன், 2010
ஐந்தாம் பதிப்பு - பிப்ரவரி, 2014
ஆறாம் பதிப்பு - சூலை, 2021

KURUKKUTHURAI RAKASIYANGAL
NADAI CHITHIRAM
Nellai Kannan
Tamil
First Edition: Jan 2000
Second Edition: Aug 2002
Third Edition: June 2005
Fourth Edition: June 2010
Fifth Edition : Feb 2014
Velukkannan Pathipagam,
69, Amman Sannathi Street, Tirunelveli - 627 006.
Ph : 0462 - 2337734

Laser & Printing :
Eluthukalaiyagam, Tirunelveli 9443484300

Rs. 140/-

நினைவில் வாழும் என் மனைவி
வேலம்மாளுக்கு

நன்றி இவர்களுக்கு...

தமிழன் எக்ஸ்பிரஸ்
விகடன்
தாமரை
சுதாங்கன்
நாஞ்சில் நாடன்
பழனிபாரதி

அன்புள்ள கண்ணன்

பொதுவாக உண்மைகளைவிட 'ரகசியங்கள்' அதிகம் விரும்பப்படுகின்றன. சொல்பவனுக்கும், கேட்பவனுக்குமிடையே அந்தரங்கமான நெருக்கம் வந்திருப்பதற்கான முதல் அறிகுறியே ரகசியம் பேசுவதுதானென்பது ஒரு காரணம். இந்த இரண்டு பொருத்தங்களும் நமக்கிடையே இருப்பதாலோ என்னவோ, குறுக்குத்துறை ரகசியங்களை மிகவும் நேசித்தேன்.

ஆதி மனிதர்கள், இயற்கையோடு இசைந்து வாழ்ந்ததை,'நாகரிகம்' என்று வரலாறு கூறுகிறது. இன்றைய மனிதர்கள் செயற்கையோடு பின்னிக் கொள்வதை 'நாகரிகம்' என்று அர்த்தப்பட்டுத்திக் கொண்டு விட்டனர். அதனால், நெல்லையின் பூச்சில்லாத அழகைப் பார்க்க வேண்டுமானால் 50 வருடங்களுக்கு முந்தைய கதைகளில் தேட வேண்டிய கட்டாயம். குறுக்குத்துறை ரகசியங்கள், இந்த அவதியை உடைத்து அரிதாரம் பூசாத நெல்லை மண்ணை அறிமுகப்படுத்தி நெகிழ வைத்திருக்கிறது.

இலைகள் உதிரலாம் உதிர்ந்தாலும் வேறு இலைகள் துளிர்விடும். கிளைகள் கூட முறியலாம்:முறிந்தாலும் புதிய கிளை முளைக்க வாய்ப்புண்டு. ஆனால் வேர்கள்...?

உங்களுக்கு வேராக மட்டுமே இருந்து, வேறாக இருக்கத் தெரியாத உங்கள் துணைவியாரின் பிரிவும், ராவன்னாவின் மறைவும் எத்தனை தூரம் உங்களை பாதித்திருக்கின்றன, என்பதற்கு கடைசி அத்தியாயமே சாட்சி.

'வேரென நீயிருந்தாய்: அதில் நான் வீழ்ந்து விடாதிருந்தேன்' என்ற பாடல் வரிகள் உங்களுக்கு மட்டுமே சொந்தமாகி நீங்கள் தளர்ந்துவிடுவதை ஒப்புக் கொள்ள முடியாது. ஏனென்றால், இதே பாடலை உங்களைப் பார்த்துப் பாட உங்கள் பிள்ளைகளுக்கும், ஏன் எனக்கும்கூட உரிமை இருக்கலாமல்லவா?

மற்றபடி மருத மரங்கள், நாவல் மரங்கள், ஆனைப்பாலம், மின்னடிப்படித்துறை புடைசூழக் கிடக்கும் அந்த குறுக்குத்துறை..! முருகன் கோயில் சாம்பலை நெற்றியில் பூச நினைக்காத எனக்கும், அந்த மண்ணில் சாதித்த பிறகு சாம்பலாய் மாறிவிடும் ரகசியமான ஆசை உண்டு...மறுபடியும் பிறப்பதற்காகத்தான்.

சுதாங்கன்

நாஞ்சில்நாடன் அணிந்துரை

ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஓடிக் கொண்டிருக்கும் நதி. கணக்கற்ற துறைகள், துறைக்கு எவ்வளவு ரகசியங்கள் இருக்கும்? அதில் மாதிரியாகக் 'குறுக்குத்துறை ரகசியங்கள்' என நமக்குத் திறந்து காட்டுகிறார் 'அண்ணாச்சி' திரு. நெல்லை கண்ணன் அவர்கள்.

அண்ணாச்சியின் ரகசியங்கள் சுரங்கம் போல் புதையுண்டு கிடக்கின்றன என்பது நேர்ப் பேச்சில் சில கணங்களில் எனக்குப் புலனாகி இருக்கிறது - பாலாழியில் மோதிரம் கட்டி நூல் விட்டுப் பார்ப்பது போல்தான்.

மனித மனங்களின் போக்குக்கு திக்கும் இல்லை, திசையும் இல்லை, என்றாலும் கூர்ந்து பார்த்தால் சில தென்படும். அண்ணாச்சிக்கு நிறையப் புலப்படுகிறது. ஓடும் நதி நீரில் ஒரு சிரங்கை போல்தான் சில நம்மிடம் பகிர்ந்து கொள்ளப்பட்டிருக்கின்றன என்பது தெரிகிறது.

வாழ்க்கை என்பது ஒரு நதி நீரின் கதி. வேகம் உண்டு. சுழற்சி உண்டு, வீழ்ச்சி உண்டு, தேக்கம் உண்டு. கட்டை போல் மிதந்து கடலிலும் சேரலாம், சற்றே கோல் கொண்டு நீக்கிவிட்டால் கரையும் ஏறலாம். இதைத்தான் '**குறுக்குத்துறை ரகசியங்கள்**' சொல்கிறது. சில கரையேறல்களையும் சில கரையேற்றங்களையும்.

சமூகத்தின் மீது அண்ணாச்சிக்கு இருக்கும் பரிவு எவ்வளவு நியாயமானது, நுணுக்கமானது என்பதற்கு நூலினுள்

ஏகப்பட்ட தடயங்கள் உண்டு. குறிப்பாய் பெண்கள் மீது அவர் காட்டும் அன்பு. அது தாய்க்குச்சமானம்.

நான் சிலமுறை அண்ணாச்சியின் அரசியல் சொற்பொழிவுகள் கேட்டதுண்டு. பலமுறை இலக்கியச் சொற்பொழிவுகள் கேட்டதுண்டு. பன்னாட்கள் நேர்ப்பேச்சில் ஆழ்ந்ததுண்டு. அவருடைய சமூக அக்கறைகள், மானுடம் மீதான பரிவு, வியப்பூட்டும் நேர்மை, எல்லாம் 'குறுக்குத்துறை ரகசியங்களில்' பதிவாகியுள்ளன.

அவருடைய மொழி மழை நாளில் பிடுங்கிய கீரைத்தண்டு போலச் சிலிர்த்து நிற்பது. அவருடைய பாத்திரங்கள் கற்பனைப் பொம்மைகள் அல்ல, நகத்தால் கீறினால் இரத்தம் துளிர்ப்பவர்கள். அருகில் போனால், செத்துப் போகாத நாசி இருக்குமானால், வியர்வையோ, சாராயமோ, வறுமையோ மணப்பவர்கள். அண்ணாச்சியின் உரையாடல் மேலோட்டமாகக் கிண்டல் போலத் தோன்றும். ஆனால் உள்ளே பழுக்கக்காய்ச்சிய கம்பி கனலும்.

குறுக்குத்துறை ரகசியங்களின் சம்பவங்கள் எல்லாம் நல்ல சிறுகதையின் கூறுகள் கொண்டவை. சற்று மேலும் விவரித்தால் முழு நீள நாவலாகக் கூட அமையும். ஆனால் அலங்காரங்கள் இன்றி, புனைவுகள் இன்றி, உரைநடை நிரவல்கள் இன்றி வாழ்க்கையின் குறுக்கு வெட்டுக்கள் அவை.

எந்த இலக்கிய வடிவம் ஆயினும் நோக்கம் மனித மேம்பாடு. 'குறுக்குத்துறை ரகசியங்கள்' பெயர் சூட்டப்படாததோர் புது வடிவம்.

நாஞ்சில் நாடன்

கோவை 641 009.

பழனிபாரதி புகழுரை

புதுமைப்பித்தனின் ஆழம், பாரதியின் நேர்மை, டி.கே.சியின் ரசனை மூன்றின் தொடர்ச்சியாக நெல்லையிலிருந்து நமக்குக் கிடைத்த தமிழ்ப்புதையல் அய்யா நெல்லை கண்ணன்.

சுவாசிப்பதைப் போல ஒவ்வொரு நாளும் வாசிப்பதை இயல்பாகக் கொண்டிருக்கிற கல்வியாளர்.

தொல்காப்பியத்திலிருந்து தினத்தந்தி வரை தமிழ்க்கடலுக்குள் ஒரு டால்ஃபினை போல துள்ளிக் குதித்து விளையாடி அந்த அற்புதத்தில்.. ஆச்சரியத்தில்... அதிசயத்தில்... நம்மையும் ஆர்ப்பரிக்க வைக்கிறவர்.

ஒரு காலத்தில் நயாகராவைப் பார்க்கப் போனவர்கள் வால்ட் விட்மனையும் பார்த்துவிட்டுத் திரும்பியதைப் போல தாமிரபரணியைப் பார்க்கப் போகிறவர்கள் இந்த தமிழாளரைத் தரிசிக்காமல் திரும்பினால் அந்த நெல்லைப் பயணம் முழுமையாகாது.

எஞ்சி நிற்கிற இவர் போன்ற ஒரு சில தமிழறிஞர்களை யாவது தமிழ்ச்சமூகம் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்.

"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் (அ)இவனை

இகல்வெல்லல் யார்க்கும் அரிது"

பழனிபாரதி

A3, பூபதி நகர், சென்னை - 600 024

ஆசிரியரின்
வா மீதமுலை எறி
நூல் குறித்து...

தமிழன் எக்ஸ்பிரஸ்

தனது வசீகரமான பேச்சால் மைக் செட் வைப்பவர் முதல், மதியூகிகள் வரை கவர்பவர் நெல்லை கண்ணன். அவரது புதுக்கவிதை 'வீச்சுகள்', 'வா மீத முலை எறி' என்ற தலைப்பில் வெளியாகி யுள்ளது.

வித்தியாசமான அமைப்பு, நேர்த்தியான வெளியீடு என்ற புத்தகத்தின் வடிவச் சிறப்பு ஒரு புறம்.. சுளீர், சுளீரென்று வீசுகின்ற கண்ணனின் கவிதை மறுபுறம்...! சரியான ஜுகல் பந்தி.

''சிலுவையில் இயேசு இரத்தம் வழிய!
போப்பாண்டவரோ புல்லட் புரூஃபில்."
''உலகத் தமிழர்காள் ஒன்றுபடுங்கள்!
உள்ளூர்த் தமிழர்கள் சாதி பேணுங்கள்."
போன்ற சின்னச் சின்ன 'சிலீர்' கள் புத்தகம் முழுவதும்.

'உண்ணாமுலையாள் பேரழகு காக்க கார்த்திகைப் பெண்கள் மார்பகம் தந்தனர்' என்று பராசக்தியை பாமரப் பார்வையால் பார்க்கும் கண்ணன், குட்டினை எங்களின் தலையிலும் அருளிடக் குமரனுக்கு உணர்த்து தாயே' என்று இன்னொரு கவிதைப் புத்தகத்தில் பக்திக் கண் கொள்கிறார்.

அது சரி, 'சக்ஸஸ் ஃபார்முலா' பத்திரிகைகளுக்கு மட்டும் தானா? படைப்பாளிகளுக்கும் உண்டே!

விகடன் புக் கிளப்

நெல்லை கண்ணன் சுவாரஸ்யமான பேச்சாளர், ஏராளமான துறைகளில் வேண்டியமட்டும் தெளிவை வைத்திருப்பவர். அவரின் நறுக்குக் கவிதைகள் கொண்ட தொகுப்பு வெளியாகியிருக்கிறது.

ஓலைச்சுவடி போன்ற நீள் செவ்வக புத்தக அமைப்பே கையிலெடுத்துப் புரட்ட வைக்கிறது. கஷ்டப்படாமல் துரிதமாக அடுத்தடுத்து படித்துப் போகலாம். ரசித்தும் வைக்கலாம். சில கவிதைகள் வேடிக்கை போலத் தோன்றினாலும், உள்ளே சற்று நின்று யோசிக்கத் தூண்டும். வலிக்காமல் படிக்கலாம்.

சாம்பிளுக்கு...

தோண்டிய
குழியில்
கொள்கைகள்
புதைத்தால்
காவலாய்
தலைவரே
சிலையாய்
நிற்பார்.

பொன்னீலன் 19.08.2003

“வடிவுடைக் காந்திமதி கவிதையின் எளிமை தாமிரபரணி ஆற்றொழுக்கு போல அதன் ஒழுக்கு என்னைக் கவர்ந்த முதல் அம்சம். காந்திமதி அன்னையை கடவுளாக நீங்கள் பாவிக்கவில்லை. சொந்த அன்னையாகவே நீங்கள் பாவித்திருக்கிறீர்கள். உங்கள் வருத்தங்களையெல்லாம் காலடியில் கொட்டி யிருக்கிறீர்கள். உங்கள் வருத்தங்கள் என்பவை தமிழ்ச் சமூகத்தின் வருத்தங்களாக இருப்பதை கண்டு கவிதையில் என் ஈடுபாடு மேலும் ஆழம் கொள்ளுகிறது.

முட்டாள்கள் மத்தியில்
முறையான விசயங்கள்

மொழிந்ததால் இழிவு பெற்றேன்..
முறையானோர் மத்தியில்
ஊமையாய் நின்றதால்
முதலாகும் புகழை விட்டேன்
உங்களையே பிழிந்து சாறெடுத்துத் தந்திருக்கிறீர்கள்.

உழுபவர் வாழ்க்கையில் அழுகையே என்றுமே சரித்திரம் ஆகினோர் வழிதனில் சென்றவர் தரித்திரம் ஆகினாரே

கறவாத பசுக்களுக்கு உதவாத காளைகள் காளைகளாகி என்ன? பெண்களின் வெற்றியைச் கண்டபின் அசிங்கமாய் கதைகள் சொல்வார். கள்ளிப்பால் தந்திங்கு குழந்தைகள் கொல்லுறார் காட்டுப்புறத்தார் என்பார். ஆய்ந்திடும் விஞ்ஞான வழியிலே கருவினை கலைத்து நிற்பார் என்றெல்லாம் அருமையான சமூக விமர்சனம். உயர்வான எண்ணங்கள் வழி நூறு காட்டிவிட உதவுக என்ற அன்பான வேண்டுகோளாய் மலர்வது அருமை.

மாறிட மாறிட மாறிட மாறிட மனிதருக்கு அச்சமில்லை. கூறிட கூறிட கூறிட கூறிட கொள்கைக்கு பஞ்சமில்லை. மொழியை நிரம்பவும் வசப்படுத்தி வைத்திருக்கிறீர்கள்.

அருமையான நூல். பயணங்கள் போது இனிமையாய் துணை வரும். பாராட்டுகிறேன்.

தமிழருவி மணியன்

அன்பிற்குரிய கண்ணன்...

வணங்கி மகிழ்கிறேன். வளமும், நலமும் சூழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நீங்கள் கொடுத்த "வடிவுடைக் காந்திமதியே" கவிதை நூலை நான் திரும்பத் திரும்பப் பன்முறை வாசித்து நெஞ்சம் மகிழ்ந்தேன்.

கவியரசர் கண்ணதாசனுக்குப் பின்பு சந்தம் இனிக்க, மரபில் மயக்கம் தருகின்றாற்போல் எழுதுவதற்கு நிகழ்காலத்

தமிழரிடையே இன்னொருவர் இல்லை என்ற என் திடமான முடிவை உங்கள் நூல் மாற்ற முயன்றது மறுக்க்முடியாத உண்மை..

பலவகையான யாப்பில் அமைந்த பாடல்களைப் படிக்கப் படிக்க வகைவகையான சந்தங்கள் வசப்படும். "குமரேசதகம்" கண்ணதாசனைப் பாதித்ததில் "அவிவேகசிந்தாமணி" கிடைத்தது. கவிஞரின் அவிவேகசிந்தாமணியின் பாதிப்பில் கண்ணனின் "வடிவுடைக்காந்திமதியே"கனிந்தது.

"Shelly exhaled verse as a flower exhales fragrance, Rhythm came as naturally to him as breathing" என்றான் டிரிலான். மலருக்கு நறுமணம் போல் கண்ணனுக்கு கவிதை இயல்பான மூச்சாய் கனிந்துவிட்டதையே "வடிவுடைக் காந்திமதி"காட்டுகிறது.

உங்கள் நூலில் எந்தப் பகுதி சிறப்பானது என்று சொல்ல முனைவது வெல்லப் பிள்ளையாரில் எந்தப் பக்கம் சுவையானது என்று ஆய்வதற்கு ஒப்பான பேதமையாகும்.

"பிள்ளைகள் மத்தியில் கட்சியைக் கொடியினைப்
பேடியர் திணிக்கின்றாரே
பெரியவர் மத்தியில் வெறிகளை மூட்டி பல
பேதங்கள் வகுக்கின்றாரே"

என்ற நேர்மையற்ற அரசியல் உலகத்தின் நெறியற்ற போக்கினை நெஞ்சுரத்துடன் நெருப்பு வார்த்தை களால் விமர்சிக்கும் போதும்...

"தாய்மையை வணங்கிடும் பண்புகள் கொண்டவர்
தாங்களே என்று சொல்வார்
தரித்திரப் பட்டிடும் தாய்க்குல உடல்களைத்
தாங்களே விலையும் கொள்வார்"

என்ற பொய்மையும், போலித்தனமும் கொண்ட மலினமான மனிதர்களின் மனவிகாரங்கள் நிர்த்தாட்சண்யமாய் நிர்வாணப்படுத்தும் போதும்...

"சத்தியம் காத்திடத் தங்களைத் தந்தவர்
சரித்திரம் ஆகினாரே
சரித்திரம் ஆகினோர் வழிதனில் சென்றவர்
தரித்திரம் ஆகினோரே

என்று காந்தியப் பண்புநலன்கள் முற்றாகப் பறிபோய் மூளியாகிவிட்ட பொதுவாழ்வின் போக்கைக் கண்டு நெஞ்சம் பொறாமல் கசிந்துருகும் போதும் தேவையற்ற, வாலிப வயோதிக அரிதார ஒப்பனைகள் ஏதுமின்றி வார்த்தைகள் உங்களிடம் இயல்பாய், எளிமையாய், வந்து விழுவதை எண்ணி வியக்காமல் இருக்க முடியவில்லை.

நண்பரே...நீங்கள் கயிறு பின்னிப் புலவன் இல்லை என்பதற்கும், காந்திமதியைக் கரித்துணியாலே மூடவில்லை என்பதற்கும் வார்த்தைகளை அணிநயங்களுக்காக வலிந்து கற்பழிக்காத உங்கள் மொழி ஆளுமையே வலிமையான சான்று.

"வடிவுடைக் காந்திமதியே" என்ற தலைப்பைப் பார்த்ததும் ஒரு புதிய பௌராணிகப் புலம்பலாக இருக்கக்கூடும் என்ற நினைவோடுதான் நான் நூலுக்குள் நுழைந்தேன். கடவுள் வாழ்த்திலேயே "மனிதகுலம் உயர்ந்திடவோர் வழியைக் காட்டு" என்று பொது நலச் சிறகடித்துப் பறக்கும் உங்கள் கவிச்சிந்தனை மீதமுள்ள முப்பது பாடல்களிலும் வாழ்காலச் சமூகத்தின் மேடு பள்ளங்களில் ஓடித் திரிவதைப் பார்த்துப் பரவசமுற்றேன். சமுதாயத்தையும் மக்களையும் பிரிந்து வாழ்க்கையுமில்லை: இலக்கியமும் இல்லை.

"உயர்வான எண்ணங்கள் வழி நூறு காட்டிட
உதவுக எந்தன் அம்மா"

என்று தொடங்கும் பாடலிலிருந்து (29)

"வெற்றிகள் அனைத்திற்கும் அடிப்படை அன்பென
விளங்கிட அருள்க அம்மா"

என்று தொடங்கும் பாடல்(31) அந்த மூன்று பாடல்களிலும் உங்களுடைய பண்பட்ட உள்ளத்தை, சகவுயிர்களின் நலன்நாடும் சமூகப் பொறுப்புணர்வை நான் தரிசித்து நெகிழ்ந்தது பொய்யின் நிழல் படாத நிஜம்.

நெல்லை கண்ணன் என்ற தேசியச் சிந்தனையாளனை, நக்கீர நேர்மையுடன் சமூகத் தீமைகளுக்கு எதிராக முற்றாகவம். மூர்த்தண்யமாகவும் மேடைதோறும் சொற்போர் நடத்தும் அரிதினும் அரிதான நாவன்மை மிக்க அரசியல்வாதியை, கம்பனிலும். பாரதியிலும், பட்டினத்தாரிலும், கண்ணதாசனிலும் ஆழங்காற்பட்ட

இலக்கியத் திறனாய்வாளனை முன்பே நான் அறிவேன். ஆனால் நெல்லை கண்ணனுக்குள் ஓர் அற்புதமான கவிஞனும் நேற்றுவரை மறைந்திருந்து இன்று விசுவரூபத்துடன் வெளிப்பட்டதைக் கண்டு வியந்து நிற்கிறேன்.

இறுதியாக ஒரு வார்த்தை...

கல்லறைக்குள் கண்மூடித் துயிலும் கவியரசர் கண்ணதாசன்

வடிவுடைக் காந்திமதியைப் பாட மீண்டும் நெல்லை கண்ணனில் உயிர்த்திருக்கிறார்.

சினேகன்

'தாமரை' - மாதஇதழ்

இன்றைய தமிழ்படைப்புச் சூழல் குறித்து...

தமிழ்ப்புலமை என்பது இலக்கணமறியாக் கொடுமையாகவும், இலக்கிய பாரம்பரியம் அறியா மடமையாகவும் மெல்ல மாற்றம் கொண்டிருப்பது ஒரு சூழல். நவீன இலக்கியச் சிந்தனையே கதி மோட்சம் என்ற சொந்த மூலதனங்களை அறியாத தறிகெட்ட போக்கு இன்னொரு சூழல். பழமையும் தெரியாது, புதுமையும் புரியாது இருட்டு வீட்டுக் கருப்புப் பூனைகளாய் மனப்பால் குடிப்போர் மற்றொரு சூழல், முறையான கல்விப் பயிற்சி இல்லாத முயற்சியால், பட்டறிவால், தேடுதலால் பூரண இலக்கிய ஞானம் கைவந்த தேர்ந்த வாசகர் வேறொரு சூழல் என படம் பிடித்துக் காட்டுவார் கவிஞர் சிற்பி. இச்சூழ்நிலைகளைப் புரிந்து கொள்வன கொண்டு அல்லன தள்ளி வினையாற்றுபவனே படைப்பாளியாய் மிளிர முடியும். அவ்வரிசையில் பேச்சாளராக அறியப்பட்டு நெல்லை கண்ணன் எழுத்தாளராகவும் பரிணமிக்கிறார்.

எழுத்து, பேச்சு இரண்டும் கைவரப் பெற்ற ஒரு சிலரில் நெல்லை கண்ணனும் ஒருவர். வசீகரமான திருநெல்வேலித் தமிழால், புதுமைச் சிந்தனைகளால் மேடைப் பேச்சை இலக்கிய கௌரவ மிக்கதாக மாற்றிக்

காட்டிச் சுடர்விட்டார். தன் வயதுக்கு மீறி புதுக்கவிதைகளில் முயன்று" 'வா மீத முலை எறி' என இவர் கூறும் போது இவரின் சீரிளமை திறம் வியந்து பார்க்கக் தான் வேண்டியிருக்கிறது.

இக்கவிதைகள் நிகழ் வாழ்வைப் பிரதி பலிக்கின்றன. தாயின் கருப்பைக் கிழித்து ஒழுகும் உதிரத்துளிகளோடு பிரபஞ்ச வெளிக்கு வருகிற குழந்தையாய் சூடாக சிந்தித்து மேடையேறி வந்த கவிதைகள் இவை.

இவர் பேச்சின் எள்ளலும் எகத்தாளமும் தாமிரபரணி நீர் குடித்த தினவும் இக்கவிதைகளை விட்டு வைக்கவில்லை.

கொள்கைகள்
இறந்ததை
அறியாக் கொடிகள்
தலைவர்கள்
இறந்ததும்
தாழப்பறந்தன

என கொள்கையற்ற இன்றைய அரசியலைச் சாடுவதும்,

வெண்மணிச்
சூட்டைத்
தணிப்பதற்காகவா
தாமிரபரணியில்
முக்கி
எடுத்தீர்கள்

என உழைப்பாலும், சாதியாலும் ஒதுக்கப்பட்டோரை நிலமும், நீரும், நெருப்பும் கொண்டழிக்கும் சக்திகளை இனம் காட்டுகிறார்.

எய்ட்சுக்கு உறைகண்டவர்கள் அதனிலும் கொடிய 'கையுறைகளுக்கு' மருந்து கண்டார் களில்லை. பல்கலைக்கழகத்தைப் பார்த்து காகம் வரமறுக்கிறது. டாக்டர் பட்டம் கொடுத்து விடுவார்கள் எனப்பயந்து, தாய் தந்தை அலுவலகம், குழந்தை பள்ளி, தாத்தா பாட்டி முதியோர் இல்லம், துணையின்றி விசனப்படுகிறது. வீட்டுப்பூட்டு, புத்தரின் பல், காந்தியின் கண்ணாடி, கைத்தடி கடிகாரம் பத்திரப்படுத்தினோம்...ஆனால்?..

கிளி எடுத்த அட்டையில் கருடன் பறக்கிறது. சிலுவையில் இயேசு இரத்தம் வழிய போப்பாண்டவரோ

புல்லட்புரூஃபில் போகிறார். இப்படி வித்தியாசமான சிந்தனைகள் நூல் முழுவதும் கவிதைகளாக வலம் வருகின்றன.

பெரியமகன் அமெரிக்காவில்
சின்னமகன் லண்டன் மாநகரில்
கடைசிமகனோ ஆஸ்திரேலியாவில்
அந்நியர் இந்தியாவை ஆள
அனுமதியோம்
இந்திய நாடு எங்களின் நாடு
ஜெய்ஹிந்த்

என்ற கவிதை நடிப்புச் சுதேசிகளின் முகத்தில் அறைகிறது.

ஓடிப்போன
சாமியைக் காட்டிலும்
உள்ளூர்ச் சாமி
ஒசத்திதான் வே.
வாஃபர்
அய்யப்பன்
வழிபாட்டுறவை
ராமர்
பாபருக்கும்
நீட்டித் தொலையுங்கள்.

என்ற கவிதை வரிகளில் இவரின் சமூக கரிசனம் வெளிப்படுகிறது.

“பாட்டிலே அறம்காட்ட வேண்டும். கூட்டி மானுடச் சாதியை ஒன்றெனக் கொண்டு வையம் முழுவதும் பயனுற வேண்டும்” என அணிந்துரையில் தோழர் தா. பாண்டியன் கூறியதை அப்படியே வழிமொழியலாம்.

அரசியல், ஆன்மீகம், காதல், வாழ்க்கை என பலவற்றையும் நுணுகிப் பார்த்து பார்த்ததை பார்த்தபடி சொல்லாமல் தன் அனுபவம், அறிவு, பார்வை வழி விசாரணை செய்து தீர்ப்புகளைப் பதிவு செய்கிறார். மேலோட்டமாக பார்த்தால் எளிய நேர்ப்பேச்சாய் தெரியவரும் இக்கவிதைகளுக்குள்ளும் ஒரு திட்டமிடாத அழகியல் தன்மைகள் கலை வெளிப்பாடுகள் காணக்கிடக்கின்றன. வெடிப்புற பேச விரும்பும் மக்களியக்கத்தின் கூறுகள் இவரின் கவிதைகள் இயக்குவதை உணரை உணரமுடிகிறது.

திங்கப் பொறந்தவன்
திருநெல்வேலிக்காரன்
எழுத்து கவிதை
எல்லாத்தையுந்தான்

என்கிறார் நெல்லை கண்ணன்.

திங்க மட்டுமல்ல விருந்தோம்பலிலும் திருநெல்வேலிக்கு சிறப்புண்டு இது நெல்லையின் இலக்கியப் படையல்.

அச்சும் அமைப்பும் அழகான இந்நூலை வாங்கிப் படிக்கலாம். திருநெல்வேலி அல்வா மாதிரி.

குறுக்குத்துறை ரகசியங்கள் குறித்து...

கி. ராஜநாராயணன் 10.11.2002

"குறுக்குத்துறை ரகசியங்கள் பின்னுரை, முன்னுரை இவைகளைத் தள்ளிவிட்டு எழுத்தை மட்டும் முழுப்படமாகப் பார்க்கிறவர்களுக்கு இது ஒருவகை குறுநாவல் என்று தெரியும். உண்மை அது தான். கேரளத்தில் நாவலும் நாடகமும் கலந்த ஒரு இலக்கிய வடிவத்தை படைப்பாளிகள் பரிசோதித்ததாக நண்பர் குறிஞ்சிவேலன் பேச்சினூடே ஒரு நாள் சொன்னார்.

உங்களை அறியாமலேயே இதில் சாத்தியமாகியிருக்கிறது. அத்தியாயங்களை காட்சி காட்சியாக கோர்த்துக் கொண்டே போய் முடிக்கிறீர்கள். குறிப்பிட்ட பாத்திரங்களை வைத்து மக்கள் மொழியிலேயே மக்களைப் பற்றிச் சொல்லுகிறீர்கள். இது தான் சரி, விசயத்தைச் சொல்லும் போது வடிவம் தானாகவே அமைந்து விடுகிறது. வேண்டியதெல்லாம் ருசியாக இருக்கணும் என்பது தான். உங்கள் எழுத்தில் இது இருக்கிறது. பலகாரம் செய்து தேர்ந்துவிட்டால் பிறகு விதம்விதமாக செய்யத்தோன்றும். பிறகு அவன் செய்வதெல்லாம் பலகாரந்தான். மக்கள் விசாரித்துத் தேடிவருவார்கள். "இருட்டுக்கடை" எங்கே இருக்கு என்று!! தொடர்ந்து நீங்கள் சொல்ல வேண்டும் என்று தோன்றுவதையெல்லாம் எழுத்தில் சொல்லலாம். எழுத்திலும் நீங்கள் வெற்றி பெற வாழ்த்துக்களுடன்.

முனைவர் தெ. ஞானசுந்தரம் 23.08.2003

“குறுக்குத்துறை ரகசியங்கள் உங்களுக்குள் புதைந்திருக்கும் நல்ல எழுத்தாளரை அம்பலப்படுத்துகிறது. இருமுறை படித்துவிட்டேன்! அடேயப்பா! உயிரோவியமாகத் திகழும் எத்தனை காட்சிகள்! நெல்லைத் தமிழ் கொஞ்சி விளையாடுகிறது.

இச்சித்திரங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு தலைப்பு தந்து வெளியிட்டிருந்தால் நூல் ஒரு நல்ல சிறுகதை தொகுப்பாக அமைந்திருக்கும். நல்ல முயற்சி என் பாராட்டுக்கள்!

வடிவுடைக் காந்திமதியே.. கவிதைகளைப் படித்தேன். கவிதைகள் ஓட்டமாக உள்ளன. “தந்ததிமி தோம் திமிதி திந்ததிமி என்று வரும் தன் பொருநை நாதம்” போலக் கவிதைகளும் நடைபோடுகின்றன. “தெளிவான மரணமும் உண்டென்று தெரிந்த பின் தினந்தோறும் ஆசையென்ன” என்னும் தொடர் ஒவ்வொருவர் நெஞ்சிலும் நிற்க வேண்டிய தொடர். “வறியவர் பசியிடைச் செய்கின்ற பிழைகளில் வானளவு குதிக்கும் அரசு வளமானோர் திருடிடச் சட்டத்தை துணையாக்கி வாழ்த்திடும் அழகு என்ன” என்னும் கவிதைப்பகுதி இன்றைய சமுதாய அவலத்தைத் தோலுரித்துக் காட்டுகிறது. “மண்வாழ்க்கை மடிகையில் மணமாக வாழ்ந்ததாய் மனங்களில் வாழவைப்பாய்” என்னும் பிரார்த்தனை உயர்வானது: உள்ளத்தைப் பிரதிபலிப்பது. திரு கிரகோரி நன்குபடித்து அணிந்துரை வழங்கியுள்ளார்.

அந்துமணி ஜன 5, 2003

நெல்லை கண்ணன் சிறந்த அரசியல் சொற்பொழிவாளர்: இலக்கியப் பேச்சாளர்: நகைச்சுவையை அள்ளி விடுவதில் சமர்த்தர் எல்லாவற்றுக்கும் மேலாக நல்ல நண்பர்!

சில தினங்களுக்கு முன் என்னை சந்தித்த போது, “குறுக்குத்துறை ரகசியங்கள்” என்ற தலைப்பில் தாம் எழுதிய புத்தகம் ஒன்றை பரிசளித்தார்.

“தமிழன் எக்ஸ்பிரஸ்” என்ற ஏட்டில், அதன் அப்போதைய ஆசிரியர் அன்பர் சுதாங்கன் கேட்டுக்

கொண்டதற்கு இணங்க அவர் எழுதிய தொடர், புத்தக வடிவம் பெற்று இருக்கிறது. சேர்ந்து கிடக்கும் புத்தகங்களைப் படிக்க எனக்கு தோதான இடம் ரயில்! இரண்டு டிக்கெட்டுகளை வாங்கி, ஒரு "கூபே"யில் அடைந்து கொண்டால் எந்த தொந்தரவும் இல்லாமல் ஆனந்தமாக படித்துக் கொண்டே பயணிக்கலாம்! மேல் பர்த்தில் கவிழ்ந்து படுத்து, "ரீடிங் லைட்" டைப் போட்டு, நெல்லை கண்ணனின் புத்தகத்தில் ஆழ்ந்தேன்.

ஒவ்வொரு அத்தியாயமும் அடக்க முடியாத சிரிப்பைத் தரும் அதே நேரத்தில், வாழ்க்கைப் பாடத்தையும் போதிக்கிறது. நெல்லைத் தமிழ் தெரிந்தவர்கள் சந்தோஷித்துப் படிப்பார்கள்.

நாயகர் அண்ணாச்சி அது. நெல்லை கண்ணனாகத் தான் இருக்க வேண்டும். அடுத்து அவரது உதவியாளராக "ராவன்னா", "அம்பி" எனப்படும் வேலை வெட்டி இல்லாத ஊர் வம்பிழுக்கும் பிராமண கேரக்டர் இந்த அம்பி அண்ணாச்சியின் அன்பைப் பெற்றவன்.

மற்ற கேரக்டர்கள் ஊர் ஜனங்கள், அண்ணாச்சி ஊர் பெரியவர், தனவந்தர் என்பதால் ஊர்பஞ்சாயத்து, குடும்ப பிரச்னை, கொடுக்கல் வாங்கல் தகராறு என அனைத்து விஷயங்களும் அண்ணாச்சியிடம் வரும். அவற்றை சுமுகமாக தீர்த்து வைப்பார் அண்ணாச்சி.

சுஜாதா ஆனந்த விகடன் 27.7. 2003

நெல்லை கண்ணன் அவர்களின் "குறுக்குத்துறை ரகசியங்கள்" நடை சித்திரங்கள் மட்டுமல்ல. நல்ல சிறுகதைகளே..

திருநெல்வேலித் தமிழின் உண்மையான வடிவத்தை இந்த "அண்ணாச்சி ராவன்னா "கதைகளில் பார்க்க முடிகிறது.

புலவர் க. சண்முகம் 06.07.03

“அம்மன் சந்நதித் தெரு, பெரிய வீட்டு வாசலில் சில மணி நேரம் நின்றேன். அண்ணாச்சி இருக்கையில் இருந்தார்கள். ராவன்னா திண்ணையிலிருந்தார். ரவி, சுப்புலெஷ்மி, கமிஷன் கடைமாமா, மாக்காளை மாமா, கட்டையன், முருகன், சுப்பையா, சங்கீத சார்வாள், நெல்லையப்பன், மீனாட்சி இப்படி நிறைய பேர் வந்து அவுங்க அவுங்க பிரச்சனைய பேசினாங்க. தராதரம், பந்தா ஏதுவுமில்லாமல் எல்லாக் காயத்துக்கும் அண்ணாச்சி மருந்து தடவி அனுப்பினாவ. தென்றலும், திருநெல்வேலித் தமிழும் சுகமாக இருந்தன.

அடடா! புதுமைப்பித்தன் பார்த்தா புரண்டிருப்பாரு.

கடைசிப் பக்கம் கண்கலங்கச் செய்தது. நேரு தன் இறுதி விருப்பத்தில் என் சாம்பல் கங்கையிலும் யமுனையிலும் கலக்க வேண்டுமென்றார்.

அந்த மகானைப் போற்றும் தங்களுக்கு குறுக்குத்துறை தாமிரவருணி மேல் எவ்வளவு பற்று?

“வடிவுடைக் காந்திமதியை” வணங்குவதோடு நிற்கவில்லை.

வாட்டம் காட்டி கேட்ட வினாக்களால் விழித்திருப்பாள்.

நெல்லை ஜெயந்தா 31.08.2003

அண்ணாச்சிக்கு!

தம்பி ஜெயந்தா வணங்குகிறேன். இதெப்படி சாத்தியமாயிற்று...?

கலப்படமே இல்லாமல் கைகள் வார்க்கும் மண்பானையாய் நிஜமான நெல்லை தமிழை தாள்களில் பொதிந்து தந்துவிட முடியுமா...?

முடிந்திருக்கிறது. நீங்கள் என்பதால்...?

திருநெல்வேலி என்றால் தாமிரபரணி, ஆனிப்பொருட்காட்சி, நெல்லையப்பர் கோவில், இருட்டுக்கடை அல்வா, ஈரடுக்கு மேம்பாலம்.

இவற்றோடு இனி “குறுக்குத்துறை ரகசியங்கள்” தான்.

நெல்லைத்தமிழில் நெய்திருந்தாலும் இது

தமிழன்னை மேல் புரள்கிற ஆடையல்ல!
கமழ்கிற வாடை!

கே.கே. ராஜன் ஆனந்த விகடன் 05.08. 2003

(எட்டயபுரம் ராஜன்)

தாங்கள் அற்புதமாக எழுதியுள்ள "குறுக்குத்துறை ரகசியங்கள்" வாசிக்க நேர்ந்தது. என்ன நடை! என்ன சொல்லாற்றல்! இருட்டுக்கடை அல்வாவை இலையில் ஒரு துளி கூட இல்லாமல் வழித்துத் தின்பது போல ஒரே மூச்சில் நூலைப் படித்து முடித்தேன்.

"அலோ..யாரு...அண்ணாச்சியா?"

"ஆமா நாந்தான். என்னடேய் திடீர்னு?"

"ஒண்ணுமில்ல. தமிழன் எக்ஸ்பிரஸ்ல விளம்பரம் பார்த்தேன். அதான்".

"மெட்ராஸ்லேருந்தால பேசுதே?"

"ஊர்ல இருந்துதாண்ணாச்சி. அண்ணாச்சி போட்டோ ரொம்ப லெச்சணமா இருக்கு".

"கூப்பிடும்போதே நெனச்சேன். எதாவது கிண்டலடிக்கத்தான் கூப்பிட்டிருப்பேன்னு".

"அண்ணாச்சி வாயத் தொறக்கவுடமாட்டேளே. நாஞ் சொல்லலே. ஒங்க கொழுந்தியா சொன்னா".

"யாருல கல்லிடைக்குறிச்சிக்காரியா? நமக்கு முன்னால தாம்பிரபரணியைக் குடிச்சு வளந்தவ சொல்லுவாதான்".

"அது என்னண்ணாச்சி "குறுக்குத்துறை ரகசியங்கள்" பக்கத்திலே கொலுசுக்காலோட ஒரு பொம்பளப்புள்ள படம் வேற..என்ன எழுதப்போறிய அண்ணாச்சி".

"வாங்கிப் படிடேய்".

"வாங்கப் போய்தானே போன் பண்ணுதேன். சுதாங்கன் சாருக்கு நன்றி சொல்லணும். ஒங்களயும் மடக்கிப் பிடிச்சு எழுத வச்சிருக்கார்னா".

ஆமாம்

சுதாங்கனுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். தினமணி அலுவலகம் சுதாங்கன் அறை. நெல்லையில் என்னிடம் வருகின்ற வழக்குகள், மனிதர்கள் என்று பேசிக்கொண்டிருக்கும் நேரம்.

"அண்ணாச்சி இருக்காகளா?" என்று என்னிடம் வந்து பிரச்சினைகளைச்

01

சொல்லித் தீர்வு காண்கிறார்கள். விவரங்களை ரசித்த சுதாங்கன், „அண்ணாச்சி இருக்காகளா" என்ற தலைப்பில் இதையே ஒரு தொடராக எழுதுங்கள் என்றார். அதுவே இன்றைக்கு நான் எழுதக் காரணம். அன்று கை கூடாதது, இன்று அவரே ஆசிரியர் பொறுப்பேற்றிருக்கும் தமிழன் எக்ஸ்பிரஸில் வருகின்றது.

புதிய தலைப்புகள் சிலவற்றை சுதாங்கள் சொன்ன பொழுது "குறுக்குத்துறை ரகசியங்கள்" எனக்குப் பிடித்துப் போயிற்று.

திருநெல்வேலியில் பிறந்தவன் எப்படி குறுக்குத்துறையோடு தொடர்பில்லாமல் இருக்க முடியும்? இரண்டு புறமும் ஓங்கி வளர்ந்த மருத மரங்கள், பசிய வயல்கள், இடையிடையே ஒன்றிரண்டு நாவல் மரங்கள், லெவல் கிராஸிங், புத்திசாலி கேட் கீப்பர், எவரோ பதித்த சுவர் சூரிய நிழல் கடிகாரம், இசக்கி அம்மன் கோயில், ஆனைப் பாலம், நந்தவனம், படித்துறை, நாவல் பழம் பொறுக்கும் சிறுமிகளுக்கிடையில் இசக்கி அம்மன், வெள்ள அளவைக்குறித்துப் பேசும் அடையாளமாக பைரவர், காவடி மண்டபம், மின்னடிப் படித்துறை, வட்டப்பாறை, நொண்டிப்பாலம், வருடந்தோறும் ஆற்றில் மூழ்குகின்ற முருகன், ஒரு வயதிற்கு மேல் குறுக்குத்துறைக்குப் போவதென்பது யாராவது மண்டையைப் போட்டால் தான் என்றாலும் குறுக்குத்துறையை தினசரி வீட்டிலிருந்தே தரிசிக்கும் வாய்ப்பு. ஆமாம் காந்திமதி அம்மாளுக்கும், நெல்லையப்பருக்கும் வெள்ளி திருமஞ்சனக் குடங்களில் குறுக்குத் துறையிலிருந்து தாமிரபரணி வரும். வாங்கா, நாகசுரம், யானை என்று காலையில் அந்த ஊர்வல அழகு, அம்மன் சந்நிதித் தெருவிலேயே பிறந்து வளர்ந்ததால் தொடர்பாயிற்று.

பிள்ளை, அய்யர், கோனார், தேவர், ஆசாரி என்று பிரிந்து கிடக்கின்ற அனைவரும் கூடிக் குளித்ததும், சாம்பலாய்க் கரைந்ததும் குறுக்குத் துறையில் தான். சுடுகாடு வரை மனிதர்கள் சாதியை விடுவதில்லை என்பதனை எனக்கு உணர்த்தியதும் குறுக்குத்துறை தான். வாழ்க்கையை சிரித்துக் களிப்பதற்காக ஏற்றுக் கொண்டவர்களையும், என்னைச் சிந்திக்க வைத்தவர்களைப் பற்றியும் இந்த தொடரில் எழுதியிருக்கிறேன்.

இவர்கள் எல்லாருமே குறுக்குத்துறையில் காலையில்

தாமிரபரணியில் கால் வைத்து, குளிருக்கு வெட வெடத்து, இடுப்பளவுக்குச் சென்று பளிரென்று ஒரு முங்கு போட்டதற்குப் பிறகு சுகம் கண்டு, ஆற்றுக்குள்ளேயே அமிழ்ந்து கிடந்தவர்கள்தாம்.

ஒற்றை வேட்டியையும், சிட்டுத் துண்டையும் செல்லம் சோப்பில் துவைத்து, துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டு வேட்டியைத் தலைக்கு மேல் உயர்த்தி மேற்கு நோக்கி நடக்கும் போது, கிளிண்டன் முதல் கவுடா வரை, புதுமைப்பித்தனிலிருந்து வண்ணதாசன் வரை சிவகவியிலிருந்து பாரதி கண்ணம்மா வரை விமரிசித்து, லெவல் கிராஸிங்கில் காய்த்த வேட்டியை இடுப்பில் சுற்றி, உடம்புச் சூட்டில் பாதி காய்ந்த துண்டை தோளில் போட்டுக் கொண்டு திருப்பணிமுக்கில் பிரிந்து தினசரி வாழ்க்கைக்குள் போனவர்கள். போகின்றவர்கள்... குறுக்குத்துறைக்கென்று ரகசியங்கள் கிடையாது. அதிலே குளித்து அதிலேயே சாம்பலாய்க் கரைகின்ற இவர்களின் ரகசியங்களுக்கு என்றும் உயிரோடு இருக்கும் குறுக்குத்துறைதானே வாரிசு.

"அண்ணாச்சி இருக்காகளா?"

"யாரது! காலையிலேயே அண்ணாச்சியைத் தேடி வந்திருக்கது?"

"யாரு ராவன்னா அண்ணனா?"

"ஒண்ணுமில்ல சும்மா அண்ணாச்சியை பார்த்திட்டுப் போக வந்தேன்"

"ஒண்ணுமில்லேன்னா இங்க ஏன் வரப்போறே? சும்மா காது குத்தாதலே!"

"அண்ணாச்சிகிட்டே சொல்லிட்டு போலாம்னு வந்தேன்"

"எங்கடே ரொம்ப தொலைவா போறீயோ?"

"இல்லே. ராவன்னா! நான் சாகப்போறேன். அதான் அண்ணாச்சிட்ட சொல்லிட்டுப் போகலாம்னு வந்தேன்".

"அப்படிப் போடு. என்னமோ திருவனந்தபுரத்திற்கு போயிட்டு வர்றேங்கிற மாரியில்ல சொல்லுதே. கோட்டி பிடிச்சிருக்கா? சாகுதாராம்லே...வெளங்காதவனே!"

"ராமய்யாண்ணே! ஒங்கள கையெடுத்து கும்பிடுதேன். தயவு செஞ்சு அண்ணாச்சியை கொஞ்சம் கூப்பிடுதேளா".

"ஆமடே! நாங்கள்லாம் எல்லாத்தையும் காலெடுத்துக் கும்பிடுவோம். இவரு ஒருத்தர்தான் கையெடுத்துக் கும்பிடுதாரு! சரிடே, எனக்கென்ன அவாளயே கூப்பிடுதேன். சொல்லிக்கிட்டு ஜாம்ஜாம்னு போய்ச்சேரும்".

"அய்யா! மெக்கானிக் ரவி பய வந்திருக்கான். மூதேவி குளிச்சு சிவப்பழமா இருக்கான். பழவாடை வேற தூக்குது. இவனுகளுக்கு காலையிலேயே எங்க தான் கிடைக்குமோ? வீட்டிலயே சொந்தமா கொடி அடுப்பில காச்சுரானுவளோன்னு எனக்கு சந்தேகம்".

02

"எனக்கே ரொம் நாளா அந்த சந்தேகம் தான்

என்னவாம்? பய காலையிலேயே வந்திருக்கான்"

"அவரு சாகப் போறாராம். அதாம் ஒங்ககிட்ட சொல்லிட்டு போக வந்திருக்கான்".

"யோவ் ஒம்ம கிண்டல் இருக்கே! அதான் ஒம்ம கண்டாலே எல்லாரும் ஓடுதான்....."

"எலேய்! என்ன காலையிலேயே சித்தர் மாதிரி வந்து சாகப்போறேன்னிட்டு நிக்கியாம்? யாருல சாகாம இருக்கப்போறா? என்னலே பிரச்சினை".

"இல்லே அண்ணாச்சி! இனிமே நான் உயிரோட இருக்கிறதுல அர்த்தமில்ல!"

"ஏலேய்! ஏலேய்! முட்டாப் பயலே! அதுக்கு ஏம்லே அழுத.. கண்ணீர் எப்பிடி பொசுக்குன்னு வருது பாருங்களேன்?"

"தண்ணியும் பொசுக்கின்னு கெடைக்குதே இவனுகளுக்கெல்லாம்". இது ராவன்னா.

"யோவ் ராவன்னா! கொஞ்ச நேரம்தாம் சும்மா இரிமே. நீ சொல்லுலே".

"செத்தாதான் அண்ணாச்சி எனக்கு நிம்மதி. இந்த ஊருல ஒங்களவிட்டா எனக்கு யாரிருக்கா! அதாம் சொல்லிட்டு போலாம்னு வந்தேன்".

"சுத்தபத்தமாக் குளிச்சுப் போட்டு சாகணும்னு வந்திருக்கானே? எப்பேர்ப்பட்ட ஆளு! சாகுத மூஞ்சியைப் பாருங்களேன். போலே மூதேவி. போயி ஒர்க்ஷாப்ல வேலையைப்பாரு போ. போ".

"என்ன நம்பமாட்டிங்க அண்ணாச்சி! எப்பவும் என்ன கொறவா நெனக்கறதே ஒங்க வழக்கமாப் போச்சு. நெசம்மா சாகுறேனா இல்லியான்னு பாருங்க"

"கழுதப்பயகிட்ட என்னய்யா பேச்சு. சரிடே எப்படி, எந்த இடத்தில் சாகப்போறே வெவரம் சொல்லுன்னு கேப்பேளா.. அத விட்டுட்டு"

"யோவ் ராவன்னா"

"பொறவு என்னய்யா கீறல் விழுந்த கிராமபோன் ப்ளேட்டு மாதிரி சாகப் போறேன் சாகப்

போறேன்னிட்டிருக்கான். அவன் ஒரு முடிவோடு தான் வந்திருக்கான்னு தெரியுது. இந்தாப்பா சங்கரன் கோவில் டானிக் பாட்டில் ரெண்டு இருக்கு. அடிச்சிட்டு இங்கயே நீட்டி நிமிந்திட்டன்னு வச்சுக்க, போலீஸ், போஸ்ட்மார்ட்டம் ஒண்ணும் கிடையாது. இரு பாட்டிலை எடுத்திட்டு வாறேன். பொறகு ஜாம்ஜாம்னு நாங்க கொண்டு போயி கருப்பந்துறையில் வச்சி எரிச்சிடமாட்டோம்".

"அண்ணாச்சி! நானே நொந்து போயி ஒங்ககிட்ட வந்து அழுதுகிட்டு நிக்கேம். இந்த ராவன்னாவைப் பாருங்கண்ணாச்சி".

"பெறகு என்னலே? நீரு மண்டயப் போட்டா இனிமே திருநவேலியில இருக்க மோட்டார் சைக்கிள்ளாம் ஓடாதுங்கிற மாரி பேசிட்டே போனா? சாகப்போறன். சாகப்போறன்னுட்டுப் பொறகு ராவன்னாவை ஏம்ல மொறைக்க? கிண்டல்தானே அவருக்கு சாப்பாடே. சொல்லுடே! எதுக்கு சாகப்போற?

"என்னய ஒருத்தரும் மதிக்க மாட்டேங்காக்க அண்ணாச்சி"

"யாருல மதிக்க மாட்டேங்காங்க?"

"அவதாம் அண்ணாச்சி"

"யாருடே நக்மாவா?"ராவன்னா...

"சுப்புலெச்சுமி"

"யாருல ஓம்பொண்டாட்டியா? எல அது தங்கமான புள்ளயாச்சே. இவன செருப்பால அடிக்கணும்யா. இந்த குடிகார மட்டையோட குடித்தனம் பண்ணி, ரெண்டு புள்ளகளயும் பெத்து, வேளாவேளைக்கு சோறுதண்ணி ஊத்தி... எல நாக்கு அழுகிப்போகும். வெளங்கமாட்டே. கடவுளும் இந்த மாரிப் பயலுவளுக்கு சூப்பர் புள்ளகள பொண்டாட்டியா ஆக்கிப் போடுதாரு! போலே! போயிச்சாகு! காலேல தண்ணியப் போட்டுட்டு பொம்பளப்புள்ளய கொற சொல்ல வந்திட்டாம். அவ ஒன்னய வாரியலாலே அடிச்சி, வடக் கனக்கிப் பத்தாம இருக்கா பாரு; அவளச்சொல்லனும்லே".

"அதெல்லாம் இல்லன்னு யாரு சொன்னா ராவன்னா? நான் குடிகாரப் பயதாம். ஆனா அவளயோ, புள்ளகளையோ எப்பிடி வெச்சிருக்கேன்? மகாராணி மாரில்ல

வெச்சிருக்கேன்? ஆனா கொஞ்சநாளாவே அவ என்னய மனுசனா மதிக்கல்ல. பிறகு எதுக்குண்ணாச்சி உசிரோட இருக்கணும்? செத்தொழிஞ்சு போறேன். ஒங்ககிட்ட சொல்லாம இதுவர ஏதாவது செஞ்சிருக்கேனா? அதாம் சொல்லிட்டுப் போலாம்ன்னு வந்தேன். இப்பிடி ஒரு பய இருந்தான்னு நீங்க நெனச்சிக்கிட்டா சரி".

"அதென்னடே சாதாரணமா சொல்லிட்டே? ஸ்பேனரு கையோட செல வச்சிரமாட்டோம். அவ என்ன பண்ணிட்டான்னு இப்ப சாகணும்ன்னு நிக்கே".

"காலேல எழுமணிக்குப் போனா ராத்திரி பத்து மணிக்கு வாறேன். ஒரு மாசமா பேச்சு வார்த்தை ஒண்ணும் கெடயாது. சாப்பாட்டைத் தூக்கி செவனேன்னு வெக்கா. நானும் மண்ணுமாரிதிங்கேன். அந்தாலே போயி படுத்துக்கிடுதா. என்னா, ஏது, ஒர்க்ஷாப்பில் என்ன நடந்தது? ஒரு கேள்வி கிடையாது".

"பாட்டுக்கீட்டுப் பாடணுங்கானா கண்ணாளனேன்னு, எல! பொண்டாட்டி எங்கேருக்கா, புள்ளக எங்கருக்குங்கற நிதானத்திலேயா நீங்கள்ளாம் வீட்டுக்கு வாறீய? ஒங்கிட்டப் பேசினா ஒனக்கு புரியுமாலே?"

"பேச்சுக்கு வழியில்லேன்னு அழுதேன். இதுலே பாட்டு வேற. நான் குடிச்சிட்டு வந்து என்னிக்காவது வீட்டுல தகராறு பண்ணியிருக்கேனா? ஒங்ககிட்ட ஆவலாதி என்னிக்காவது வந்திருக்கா?"

"யோவ் ராவன்னா ஒங்களுக்கு சில நேரம் மண்ட வேல செய்யாது. அந்தப் பய சொல்லுறது புரியல்லியா?"

"ஏய் சரியான ஆளுடே. இதுக்குப் போயி எந்த கிறுக்குப் பயலாவது சாவானாடே?"

"கூமுட்டை! காலேல விஷயம் கொண்டாந்திருக்கறதப் பாரேன். எப்பேர்ப்பட்ட விஷயம்? நீங்க கொடுத்த செல்லம்ய்யா இந்தப் பயலுவ என்னத்தெல்லாம் ஒங்ககிட்ட வந்து சொல்லுதானுவ"

"ராவன்னா! எனக்கு இது பெரிய விஷயம் தான். நான் குடிகாரப் பயலே ஒழியே ஒருத்தர மாதிரி ஒட்டல்லே சாப்பிடுத பய இல்லயாக்கும்"

"என்னது ஓட்டலா? ஏய்! ஓங்கொழுப்பு எம்புட்டு

இருக்கும்? ஓட்டலுக்கு ஒருத்தர மாதிரி போ மாட்டீரா? நாங்கள்ளாம் ஓட்டல், ஓட்டலா அலயுதோமோடேய்? அய்யா நாயி சாடை மாடையாய் என்ன சொல்லுதாம் பாத்தேளா? ஒன்னயெல்லாம் கட்டி வச்சு உரிக்கணும்டே. ஓட்டலுக்குல்லா போமாட்டாராம்".

"அண்ணாச்சி நா என்னையப் பத்தி மட்டுந்தான் சொன்னேன். இவருக்கு வம்புக்கு இழுத்து விடறதே வேல. பகலெல்லாம் ஒழச்சிட்டு அசதி தெரியாம இருக்கத்தாம் குடிக்கேன்".

"நாங்க என்னல செய்ய? அவளக்கூப்பிட்டு விடுவோமாலே".

"கூப்பிடறது என்ன? அந்தா அவளே வாரா".

"சுப்புலெச்சிமியா?"

"ஆமய்யா. இவம் இங்கதாம் வந்திருப்பான்னு அவளுக்கு என்ன சொல்லியா தரணும்?"

"அண்ணாச்சி! அவ பொய்யும், புலயுமா சொல்லி என்னய மதிக்கமாட்டா. நீங்க எடங்கொடுத்து பேசிராதிய"

"எல! எனக்குப் பேசச் சொல்லிக் கொடுக்கியா? இதுல்லாம் நேரம்ல".

"**வா!** வா! என்னம்மா நீயும் அழுதுக்கிட்டு? அவந்தாம் குடிகாரப்பய".

"இல்ல மாமா! இந்த மனுஷனோட ஒரே அசிங்கமா இருக்கு. அதும் வளவு சேந்த வீட்டிலே வாய்தொறக்க நீதமில்ல".

"நீயும் கொஞ்சம் அனுசரித்துப் போகணும்மா, மூதேவி குடிப் பழக்கமில்லைன்னுவையி, அந்தப் பயகிட்ட வேற என்ன கொற? மலயாளத்து மாப்பிள்ள மாரி".

"அப்பிடின்னா இன்னொரு பொண்ணப்பாத்துக் கட்டி வெக்க வேண்டியதுதானே".

"போடு அப்பிடி.. அவன் என்ன சொல்லுதாம் தெரியுமில்ல? ஒருத்தர மாதிரி ஓட்டல்ல சாப்பிடுதவன் இல்லேங்கான் அப்பிடிப்பட்ட பயல நீ எப்பிடி

வெச்சிகிடணும்மா?"

"என்ன மாமா நீங்களும்? பொம்பளப்புள்ள பெரிய மனுஷியாகி ஆறுமாசம் ஆச்சு. ரெண்டு தட்டு வீடு. ஒண்ணு அடுக்களை, இன்னொரு ரூம்லதாம் எல்லாம். இருக்க, கொள்ள, படுக்க ஒங்கள மாதிரி அரமனையிலயா இருக்கோம். ராத்திரில்லாம் ஒரே நரகம் தான்மாமா".

"சரி அப்பம் என்ன செய்ய? ஏய் பேசாம ஓட்டலுக்கு போடே! எங்கள வந்து இடஞ்சல் பண்ணாதீய"

"அப்பிடில்லாம் அவுக ஒருநாளும் போகக்கூடிய ஆளு கெடையாது. குடிப்பாகளே ஒழிய ஒருத்தர மாரி அலயுத ஆளில்ல".

"சரி சரி மத்தவம் பூரா இந்த ஊர்ல அலயுதவன்தாம். நீ போம்மா! நான் இந்தப் பயலுக்கு புத்தி சொல்லி அனுப்பி வைக்கேன்".

"ஏலே ஒனக்கு அறிவு இருக்காலே? புள்ளக பெரியவங்க ஆனப்புறம் கொஞ்சம் பார்த்துத்தான் நடக்கணும்"

"புள்ளக எத்தனை மணிக்குல பள்ளிக்கூடம் போகும்"

"பெரியவ எட்டுக்கே போயிருவா. சின்னப்பய ஓம்பது மணிக்குப் போவான். எதுக்கு அண்ணாச்சி கேக்கியோ".

"ஒனக்கு எல்லாம் புட்டுபுட்டு வெக்கணும்".

"புள்ளக பள்ளிக்கூடம் போனப்புறம் சாப்பிட்டுக்க வேண்டியது தான்"

"நான் ஒர்க்ஷாப்பிற்கு போக வேண்டாமா?"

"அப்பம் சாப்பாட்டை மறந்திர வேண்டியது தான்".

"ஒர்க்ஷாப்பிற்கு முன்னப் பின்ன போக வேண்டியதுதான். ஷிப்டுகள மாத்துங்கடே. இதுக்குப் போயி மண்டயப் போடுதேம்னு வந்து நிக்கறத பாருங்களேன் முட்டாப்பயலுவ."

"அது ஒரு பேச்சுக்கில்ல அண்ணாச்சி சொன்னேன்"

"இல்லேடே! நாங்க, நீங்க சொன்னதை நம்பி கலெக்டருக்கெல்லாம் தகவல் குடுத்திட்டோம்ல, போவியா!

காலேல வந்திட்டானுவ".

"ஏய் ஆனா ஒரு விஷயம் மறக்க மாட்டேன்டேய். அண்ணாச்சி இருக்காகளான்னு வந்திட்டு ஒருத்தர் மாதிரி ஓட்டல்ல சாப்பிடமாட்டேம்னு அடிச்சியே ஒரு அடி மறக்கவே மாட்டேம்ல."

“அய்யா! காலேலேலேயே ஒங்க கமிஷன் கடை மாமா வந்தீருப்பாகளே! வந்தாளா?”

“ஆமா ராவன்னா, ஏது கரெக்டா கேக்கீரு?”

“ஒண்ணும் இல்லே காலேலலயே ஒரு பொட்டி வெங்காயம் எங்க வீட்டுக்கு அவாளோட பெரிய பையன், அவந்தாம்ய்யா பயில்வான், கொண்டு வந்தான். பெரிய வீட்டு அத்தான் வீட்டுக்கும், ஒங்களுக்கும் கொடுக்கச் சொல்லி அப்பா சொன்னான்னு சொன்னான். அதாங்கேட்டேன்.”

“ஆமா, இங்க அரைமூடை இருக்கும்.”

“ஆளு தாரதம்மியம் பாத்துக் கொடுக்கதுலே அவாள யாரும் பீட் பண்ண முடியாது. நிச்சயம் ஏதோ ஒரு பெரிய சிபார்சு இல்லன்னா இப்படி வராது. எப்பவும். ஆளு வரலாம்.”

“என்ன ராவன்னா?”

“அவாள் சும்மா ஒரு நாளும் ஒரு பொருளும் யாருக்கும் கொடுக்கமாட்டா. வெங்காயம் வரும். திடிர்னு மொளகாவத்தல் வரும், பூண்டு வரும், இதெல்லாம் வந்தா பின்னாலே அவாள் ஏதாவது காரியத்துக்கு வரப்போறான்னு அர்த்தம். ஏய், வேண்டாம் கொண்டு போடேய்னு சொன்னாலும் அந்தப் பயில்வான் அதுல்லாம் ஒங்க பாடு, ஒங்க மாமா பாடுன்னு சொல்லிட்டு வெச்சிட்டுப் போய்ருவான்.”

“அவாள் வாரதிலேயே ஒரு ஸ்டைல் இருக்கும்.”

“எப்படி”

“என்னா மருமகனே....? ஒங்க மச்சினன் வந்தானாம்பா. நீங்க ஒடனே ஆமா மாமா வெங்காயம் கொண்டாந்து போட்டுட்டுப் போறாருன்னு சொல்லணும். ஒடனே அவாள் ஆமா நீங்க, அதுல்லாம் ஒண்ணும்

03

வேண்டான்னேளாமே. எம் மகளுக்கும் பேரப் புள்ளைகளுக்கும்ல்லா கொடுத்தேன்னு அவாளோட அந்நியோன்யத்தை அப்படியே குடும்பத்துக்குள்ள கொண்டு போயிருவா. அதுக்குப் பின்னாலே வாயத் தொறக்க முடியுமா?"

"அது சரி என் வீட்டிலே நடக்கதச் சொல்லிட்டீரு. ஒங்க வீட்டில என்னத்த கதை சொல்லுவா?"

"எங்க வீட்டுக்காரி அவாளுக்கு மருமக ஆயிட்டால்லா! மகனே ஒனக்காக இல்லவே, எம் மருமகளுக்காகவும் பேரப்புள்ளகளுக்காகவும்லா கொடுத்து விட்டேன்னு ஒரு டயலாக்."

"என்ன வில்லங்கம் இருக்கும்"

"கழுத ரொம்பப் பெரிய விஷயமால்லாம் இருக்காது. ரொம்பச் சாதாரணமான விஷயமாத்தான் இருக்கும். பயந்தாங்கொள்ளி மனுஷன். அந்தா வந்தாச்சு பாருங்க!"

ராவன்னா சொன்ன அதே டயலாக்...

"வேற எதும் விஷயம் இருக்கா மாமா?"

"ஒண்ணுமில்ல மருமகனே, அந்த கட்ட அம்பிப் பய இருக்காம்ல்லா, அவம் பரமசிவம் கழுத்துப் பாம்பால்லா இருக்கான்."

"ஒங்க மருமகனத்தானே பரமசிவம்ன்னு சொல்லுதீய...." இது ராவன்னா.

"மகனே கொஞ்சம் ஒம்ம குசும்பையெல்லாம் மூட்டை கட்டி வச்சிட்டு சும்மா இரிவே."

"சரி மாமா சொல்லுங்க அந்தக் கட்டப் பய என்னமும் சேட்டை பண்ணானா?

"ராத்திரி பன்னண்டு மணி இருக்கும் கதவப் போட்டு தட்டு தட்டுன்னு தட்டுதாம். என்னா ஏதுன்னு அழி வழியாப் பாக்கேன். இந்தப் பய. என்னடே அம்பி என்ன வெஷயம்னு கேட்டா இந்தியாவுக்கு சுதந்திரம் கெடச்சு எத்தனை வருஷம் ஆச்சு? ஒங்க புள்ளகளுக்கு எப்பந்தாம் சுதந்திரம் கொடுக்கப் போரீருங்காம்."

"கதவத் தொறந்துகிட்டு ரெண்டு சாத்து சாத்தி அனுப்பாம இத ஒரு விஷயம்ன்னு சொல்ல வந்திட்டீகளே ஆளப் பாருங்க..."இது ராவன்னா.

"மகனே ஒனக்குத் தெரியாதா? அந்தப் பய நெல கொள்ளாம குடிச்சிருக்கான். பிராம்மணப் பயலா லெச்சணமா இந்தத் தெருவுல எத்தனை புள்ளைக இருக்கு? இவம் எல்லார் பெயரையும் கெடுக்க வந்திருக்கான். மிதமிஞ்சிக் குடிக்கிற பயல நாம போயி கை வைச்சு ஒண்ணுகெடக்க ஒண்ணு ஆயிடுத்துன்னு வச்சிக்கிடுங்க அது பெரிய சீண்டரத்திலேல்ல கொண்டு விட்டுரும்."

"அதெல்லாம் ஒண்ணும் வராது. எதுன்னாலும்தாம் மருமகப்புள்ள இருக்காளே பொறவென்ன?"

"சரி மாமா, அந்தப் பயல கூப்பிட்டுச் சத்தம் போட்டு அனுப்புதேன். நீங்க கெளம்புங்க வேறொண்ணும் இல்லயே?"

"ஆமா மருமகனே, நான் எம்மகளப் பாத்திட்டுப் போயிடுதேன்".

"இவாள் அவனக் கைய வச்சு ஒண்ணு கெடக்க ஒண்ணு ஆயிரக்கூடாதுன்னு வெக்கலியாம்".

"அவங்கையைக் கிய்ய வச்சிருவாம்னு பயந்து போயி கதவக் தொறக்காம இருந்திட்டு இந்த விண்ணானம் வேற. நான் இன்னைக்கு அந்தப் பயலப் பாத்து விபரம் சொல்லிருதேன். இன்னிக்கு ராத்திரி போயி கைய வையும் பாப்போம்னு நிப்பான்."

"ஏன் ஒமக்கு வந்த வெங்காயம் போதாதோ?"

"அதுக்கில்லய்யா, அவனப் பாத்துப் பயம். நீங்க சொல்லுங்கங்கறத விட்டுட்டு கைய வச்சிருவாளாம்ல்லா. ஆட்களப் பாருங்களேன்."

"எல அவாள் வீட்டுல ராத்திரிப் போயி ஏம்ல கதவைத் தட்டின? கொழுப்பு கூடிப்போச்சோ?"

"இல்ல பாஸ்"

"எல! செருப்புப் பிஞ்சிரும். எத்தன தடவை சொல்லியிருக்கேன். பாஸ் கீஸன்னுல்லாம் கூப்பிடக்கூடான்னு..."

“இல்ல அண்ணாச்சி அவரு பையங்க ரெண்டு பேரும் சினிமாவுக்கு டிக்கெட் எடுத்து வக்கச் சொல்லியிருந்தானுக. எடுத்து வச்சிட்டுக் காத்திருந்தேன். ரெண்டு பயலும் வரல்ல; படம் போட்டுட்டான், டிக்கெட்டை விக்கவும் முடியல. நல்லசிவத்தை அங்கன பார்த்தேன். அவன் தான் சொன்னான். அவங்க அய்யா ரெண்டு பயலயும் போகக்கூடாதுன்னு சொல்லிட்டாருன்னு. வயசுக்கு வந்த பயலுகளுக்குச் சுதந்திரம் கொடுக்கணும்; அவனுகளப் போட்டு ரொம்பச் சங்கடப்படுத்தக்கூடாதுன்னு அன்னிக்கு நீங்கதானே அண்ணாச்சி சொல்லிட்டிந்தீய? ஒங்க கருத்த அவரு மதிக்கலயேன்னு கோபம் வந்தது. விநாயகர் ஒயின்ஸுலே போயி ஒரு குவார்ட்டரை வாங்கி சாத்தினேன். நேரே அவர்ட்ட போயி நியாயம் கேட்டேன். ஒங்க கருத்த யாரு இந்த ஊர்ல மதிக்கல்லேன்னாலும் எனக்கு தாங்க முடியாது....என்ன ராவன்னா?”

“அடி வாரியலாலே! நீங்க அவாள் கருத்துக்கு மதிப்பு தேட இப்பிடி அலயுதேளாக்கும். அது என்னடே விநாயகர் ஒயின்ஸ்? அய்யா எனக்குப் புரியாமத்தான் கெக்கேன். இந்து முன்னனின்னு சொல்லிக் கொடி புடிக்காங்களே? யாருமே இதப்போயி கேக்க மாட்டேங்கானே. சாமி பேரிலே சாராயக்கடை வெக்கானுவ.”

“ராவன்னா ! அது சாராயக்கடை ஒண்ணும் இல்ல, பிராந்திக் கடைய்யா. ஒங்களுக்குதாம் ஒரு ருசியும் தெரியாதே...”

“எல மூதேவி அவருக்கு வெளக்கம் சொல்லுதியோ, கட்டி வச்சு உரிக்கணும்ல ஒன்னையெல்லாம். இனிமே அங்க இங்க போயி ஏதாவது தகராறு பண்ணினேன்னு வையி தொலச்சு போடுவேன், என்னல...?”

“சரி அண்ணாச்சி. ஆனா ஒண்ணு அண்ணாச்சி, நாங்குடிக்கலேன்னு வையுங்க ஒரு பய என்ன மதிக்க மாட்டேங்காம். ஏய் கட்டையா கட்டையான்னு கூப்பிடுதானுக. தண்ணியப் போட்டுட்டேன்னு வையிங்க அம்பிங்கான், அம்பி சாருங்கான், டிபன் சாப்பிடு அம்பிங்கான், ஒங்களப் பொறுத்தவரை தான் சாராயம், பிராந்தில்லாம் கேவலம். ஆனா எனக்கு மரியாதையே அதுனாலத்தான் அண்ணாச்சி வருது.”

“ஒரு பாய் மரக்கப்பல் வேணும்”

“என்ன கேக்கான் ராவன்னா...”

“அவாளுக்கு பத்து ரூபா வேணுமாம். அவாள் கப்பல்ம்பான்; யானைம்பான்”

“ரூபா நோட்டுக்குப் பின்னால் இருக்க படத்த வச்சுத்தான் அவாள் ரூபா கேப்பாம். அடி சக்கேன்னானாம்’

“இன்னொன்னு தெரியுமா? டவுன் பஸ் ரூட்ட வச்சுல்லாம் அவாள் கேப்பா. பெருமாள்புரம்னா அஞ்சு, பொட்டல்னா பதினஞ்சு. அவாள் அறிவுல கூடுன ஆளுல்லா?”

“கழுதேட்ட ஒரு பத்து ரூபாயக் கொடுத்தனுப்பும்”

“நீங்க வேற ஒங்க சில்க் ஜிப்பாவேல்லாம் கொடுத்து அனுப்பிச்சிருக்கேளா! அவாள சாயங்காலம் பாக்கும்போது ஜமீன்தார் தோத்துட்டாரு போங்க”

“சரி சரி போல”

“வாரேன் பாஸ்”

“எல நீ அடிபடாம திருந்த மாட்டே! என்னல பாஸ்”

“அய்யா இருக்காரா?”

“என்ன மாமி, என்ன விஷயம்”

“அம்பியக் காணோம், எல்லா இடத்திலேயும் தேடியாச்சு. எல்லாரும் சொல்றா, போலீஸ் புடிச்சுண்டு போயிருக்குண்ணு. அதாம் மனசு கேக்கல்ல; ஓடி வந்தேன்.”

“போலீஸ் அவனப் புடிக்காதே. நம்மூரு போலீஸ்ல்லாமே அவனுக்கு ரசிகர்களில்லா. சரி டவுண் ஸ்டேஷனைக் கேப்போம்.”

“அலோ.. யாரு ரைட்டரா? நம்ம அம்பிப் பயலக் காணோமாம்; மாமி வந்து இங்க நிக்காங்க. யாரோ போலீஸ் புடிச்சிட்டுப் போயிருக்குன்னு சொன்னாங்களாம். போன் பண்ணினேன். அதாம் நீங்க எல்லோரும் அவனுக்கு பிரண்ட்ஸாச்சே. சரி, சரி விசாரிச்சுட்டு போன் பண்ணுங்க.”

ஒண்ணும் இல்ல மாமி. இங்க யாரு அம்பியப் புடிப்பாங்க? ஏதோ ஒரு கட்சி மறியல்ன்னு அறிவிச்சிருக்குல்லா, அதுக்கு நெறய பேர அரெஸ்ட் காட்டணும்னு தெருவில் போறவன், வாறவன், கோயில்ல படுத்திருக்கவன், இரண்டாவது ப்ளே சினிமா பாத்திட்டு டவுண் பஸ் கிடைக்காம பஸ் ஸ்டாண்டில படுத்திருந்தவன்னு கைது பண்ணிக்கிட்டுக் கெடக்காங்க. விசாரிச்சுட்டுச் சொல்லுதேம்னு ரைட்டர் சொல்லியிருக்காரு. நீங்க வீட்டுக்குப் போங்க. நான் இன்னும் அரை மணி நேரத்திலே பய எங்கயிருந்தாலும் கண்டுபிடிச்சு வீட்டுக்கு அனுப்பி வெக்கேன்.”

“அலோ அண்ணாச்சி வீடுதானே?”

“ஆமா”

“நான் மேலப்பாளையம் ஸ்டேஷன்லேர்ந்து ஏட்டு பேசுதேம்.”

“என்ன விஷயம்?”

“இங்க கட்டையா ஒரு பிராம்மணப் பையனை நேத்து எங்க ரவுண்ட்ஸ்ல பிடிச்சுக்கிட்டு வந்திட்டாங்க. அவன் ஒங்க

04

பேர சொல்லியிருக்காம். ராத்திரி ஓங்களத் தொந்தரவு செய்ய வேண்டாம்னு கூப்பிடல. இப்பத்தான் டவுன் ஸ்டேஷன்ல ரைட்டர் கூப்பிட்டுக் கேட்டாரு. இப்பம் அனுப்பிச்சிருதோம் அண்ணாச்சி."

"சரி, இப்பம் ஒடனே அனுப்பிச்சிருவேளா, இல்ல போலீஸ்காரங்க பேச்சா இருக்குமா?"

"ஒங்ககிட்ட அப்பிடி என்னைக்காவது நடந்திருக்கோமா அண்ணாச்சி? ஆனா ஆளு ரொம்ப தமாசான பேர்வழி. ராத்திரி பூராம் ஒரே பாட்டும், சினிமா வசனமும் தான். எங்க பாராக்காரங் களுக்கெல்லாம் இப்பம் அவாள் ரொம்ப பிரெண்டாயிட்டாரு."

"கொஞ்சம் விட்டேர்ன்னா அவன் ஐ.ஜியை மலத்திருவாம்வே. குடிமட்டும் இல்லேண்ணு வச்சுக்க, நம்பர் ஒன் அந்தப்பய. ஒடனே அனுப்புங்க."

"ஏல அவங்க கூப்பிட்ட உடனே ஏம்ல அவங்க கூடப் போனே? அப்பவே சொல்லி அழுதிருக்க வேண்டியது தானே?"

"பாஸ்....இல்ல, இல்ல அண்ணாச்சி! மேலப்பாளையம் தியேட்டர்ல ஒரு பழைய படம் ஓடுது பாப்போம்னு நான், காப்பித்தூள் பாவன்னா, இன்னும் ரெண்டு மூணு பேராப் போனோம். சினிமா முடிஞ்சு வந்துகிட்டு இருக்கோம். எதுக்க வேன் வந்தது. படார்னு வேன் நின்னுது. ரெண்டு மூணு பேரா போலீஸ்காரங்க இறங்கினாங்க. மொதல்ல காப்பித்தூள் பாவன்னாவைக் கூப்பிட்டு வண்டியில ஏறச் சொன்னாங்க. அவரு என்னா ஏதுன்னு வெவரம் கேட்டாரு. படார்ன்னு பொடதியிலே ஒண்ணு போட்டாங்க, பாருங்க. அதுக்கு பொறகும் நிக்க நான் என்ன முட்டாப்பயலுக்கா பொறந்திருக்கேன்? தொறந்திருந்த வேனுக்குள்ள நானாவே போயி ஒக்காந்துகிட்டேன். அதுலே ஒரு ஏட்டையா, என்னடே நீயாவே ஏறிட்டேன்னாரு. நாஞ் சொன்னேன், கூட ரெண்டு பேரப் புடிச்சுப் போட்டா ஒங்களுக்கு சர்க்கார்ல நல்ல பேரு கெடைக்கும். நம்மாலே காவல்துறைக்கு ஒரு ஒதவின்னு சொன்னேன். அவரு சிரிச்சுக்கிட்டு நல்ல ஆளுதாம்டே நீன்னாரு. எங்கெல்லாமோ சுத்தி இன்னும் நம்மமாரி கம்பெனிகள புடிச்சிட்டு மூணு மணிக்கு ஸ்டேஷனுக்கு கொண்டு போனாங்க. வெள்ளத்தாள்ல கையெழுத்து போடச்

சொன்னாங்க...காப்பித்தூள் கடை திரும்ப அடி வாங்கினாரு. நான் ஜோரா இங்கிலிஷ்ல கையெழுத்துப் போட்டேன். நமக்கு என்ன சொத்து இருக்கு, அத அவங்க வாங்கிக்கிட. இல்ல நம்ம கையெழுத்த வச்சு யாரையும் விடுதலை பண்ற உத்தரவைப் போட்டிறப் போறாங்களா? அவருக்கு... அதான் பாவன்னாவுக்கு அடிபட்ட தெல்லாம் அவமானமில்ல. எம்முன்னாலே அடிச்சிட்டாங்களேன்னு வருத்தம். என்ட்ட நைசாக் கேட்டாரு. என்னலே ஏறச் சொன்னா ஏறுதே. கையெழுத்துப் போடச் சொன்னா போடுதே. அடிக்கடி சர்வீஸோன்னாரு. அதுல்லாம் கேள்வி ஞானம்வே; தவிர சர்க்காருக்கு ஒதவி செய்யத்தானே நாம இங்க வந்திருக்கோம். நாளைக்கு சமூக விரோதிகள் பல்லாயிரக்கணக்கில் கைதுன்னு வந்தா நம்ம சர்க்காரு முழிப்பா இருக்கு, இத்தனைப் பேரக் கைது செஞ்சு வச்சிருக்குன்னு நம்ம சர்க்காருக்குதானவே பேருன்னேன். சர்க்காருக்கு ஒதவ ஒரு சந்தர்ப்பம் கொடுத்தாங்கன்னு சந்தோஷப்படுறத விட்டுட்டு சங்கடப் படுதீரேன்னேன். ஒரு போலீஸ்காரரு... எங்களுக்கு என்ன ஆசையாய்யா? ஒங்களயெல்லாம் புடிச்சுக் கொண்டு போடணும்னு! மேலதிகாரிங்க கட்டாயப் படுத்தினாங்க. சமூக விரோதிகள் எங்ககிட்ட எங்க சிக்குவாம்? அவந்தான் ஒவ்வொரு அரசியல் தலைவம்கூடயும் இருந்துக்கிடுதானே. இங்க என்னத்தையாவது கணக்குக் கொடுக்கணும்ல்லான்னாரு. காலேல எட்டு மணிக்கு சப்இன்ஸ்பெக்டர் வந்தாரு. விசாரிச்சாரு. அப்பம் ஒங்க பேரச் சொன்னேன். ராத்திரியே சொன்னா என்னான்னாரு. சரி நீங்க போங்க அம்பின்னாரு. நான் பாவன்னாவையும் விடச் சொன்னேன். சரிகூட்டிகிட்டுப் போன்னாரு. பாவன்னாவுக்கு இன்னொரு அடி வாங்கணும்னு ஆசை போல இருக்கு. கையெழுத்துப் போட்ட பேப்பருன்னாரு. அது ஏட்டையா காதில விழுந்திட்டுதா? அவாள் சும்மா விடுவாளா? யோ, ரெண்டுகுயர் பேப்பர் வாங்கிக் கொடுத்திட்டுப் போய்யான்னாரு. அவரு எதுத்தகடையிலே போயி பேப்பர் வாங்கி கொண்டாந்து கொடுத்தாரு. பொறவு ரெண்டு பேருமா வந்து படித்துறையில குளிச்சிட்டு, மீசைப் போத்தி கடையில டிபன்சாப்பிட்டுட்டு வந்தோம்."

"அவன் எங்கல காப்பித்தூள் கடைக்காரன்? கடையத் தொறக்கப்போய்ட்டானா?"

"அழுதிட்டே போறான் அண்ணாச்சி"

"எதுக்குல?"

"அய்யரே! இது தாம் சாக்குன்னு அண்ணாச்சிகிட்டப் போயி போலீஸ்காரன் தூக்கி போட்டு மிதிச்சாம், வச்சாம்ன்னுல்லாம் வண்டிய விட்டுராதவே, ரெண்டு தட்டு தட்டினாம்ன்னு மட்டும் சொல்லுங்காம்."

"நீ என்னலே சொன்னே!"

"டில்லில நடக்கது அங்க தெரிஞ்சிரும்வே. இந்த மேலப்பாளையம் விஷயமா தெரியாது. போதாக்குறைக்கு அண்ணாச்சிகூடயே ஒரு தெனாலிராமன் வேற இருக்காரு. அவரு விசாரிக்காமலா இருப்பாரு? அண்ணாச்சிக்கு அவர்தான் சி.பி.ஐன்னேன்."

"என்னைய தெனாலிராமன்ங்கான் பாத்தேளாய்யா?"

"சி.பி.ஐ ண்ணும் தாம் சொல்லி இருக்கேன்."

"ராவன்னா! விடும்ய்யா. எல முதல்ல வீட்டுக்குப் போல, அம்மைதேடி வந்தா."

"கா வேலல அங்க என்னலே சத்தம்?"

"அய்யா இந்த அம்பியப் பாருங்கய்யா?"

"எல! வேல செஞ்சுக்கிட்டிருக்கிற பொம்பளைகிட்டப் போயி என்னலே வெவகாரம்? என்னம்மா செஞ்சான்?"

"ஒண்ணும் இல்ல அண்ணாச்சி! இந்தம்மா பாடிக்கிட்டே தூத்துக்கிட்டிருந்தது. நான் வந்தவுடனே பாட்டை நிறுத்திட்டாங்க."

"அதுக்கு என்னலே?"

"அய்யா இவருக்கு ரொம்ப திமிருய்யா. வந்து எங்கிட்ட நின்னுக்கிட்டு சற்றுமுன் இங்கே ஒரு தேவகானம் கேட்டதே யார் பாடியதுங்காருய்யா. இவரு கிருத்ருவம் தெரிஞ்சுதான் நான் நிறுத்திட்டேன். இந்த தாஸூம் இவர் கூட சேர்ந்துகிட்டு அம்பி இந்த அம்மா தான் பாடுனாங்கங்காரு. இவரு ஒடனே உன் இசை என்ற இன்ப வெள்ளத்தில் நீந்த ஓடிவந்த என்னை ஏமாத்தாதே வள்ளி, பாடு வள்ளி பாடுங்காரு."

"சரி, சரி அழாதேம்மா? எல காலயில ஏம்ல. கொஞ்ச. நேரம் சும்மா இருக்க முடியாதா? வோய், தாஸ் ஒமக்கும் மண்டைல சரக்கு கிரக்கு கிடையாதா? நீ வேலயப் பாரும்மா?"

"அய்யா நானும் சொல்லிப் பாத்திட்டேம்ய்யா. அம்பி! ஒமக்கு அய்யா எவ்வளவு சொதந்திரம் கொடுத்திருக்காங்கன்னு. அதுக்கு பதில் சொல்லுதாருய்யா. அண்ணாச்சி மாடு வளத்தாரு, ஆடு வளத்தாரு, நாய வளக்கல்லியே என்னயத்தானே வளத்தாருங்காருய்யா"... இது தாஸ்.

05

"எல ஊருக்குப் பூராவும் தொண்டூழியம் பாக்கே, ஒரு இடத்திலே போயி உக்காந்து இருந்து வேல பாத்தா என்னலே. நான் அந்த மோட்டார் கம்பெனியில

சொல்லியிருக்கேன். போயி அந்த மொதலாளிய நாளைக்குக் காலேல பாரு, என்னலே, வேல கீல பாத்தாத்தானல ஒரு தாலிய சீலயக்கட்டலாம்."

"அங்க என்ன வேல அண்ணாச்சி?"

"மேனேஜர் வேல காலியா இருக்காம். போலே நாயி. ஆபீஸ்பாய் வேலைதான், காலேல போயிரு. அவரு சிரட்டைப் புள்ளையார் கோயில்ல போயி சாமி கும்பிட்டுட்டு கம்பெனிக்குள்ள நுழைவாரு. போயிக் காலுல விழுந்திரு, என்னா?"

"ராவன்னா, எங்க போயிட்டீரு காலேல? இவம் வந்து வேலக்காரப் புள்ளட்ட எழவுக்கு நிக்கான்."

"அவன ஏதோ மோட்டார் கம்பெனில சேத்துவிடப் போறேம்ன்னு சொன்னீய. ஒடனே அனுப்புங்கய்யா, இவன் சேட்டை ரொம்ப அதிகமாப் போய்ட்டே இருக்கு. எல்லாரும் நம்ம மூஞ்சிக்காகப் பாக்கான். எங்க போங்க, இவன் ஆவலாதிதான். நேத்துப் பாருங்க சினிமா தியேட்டர்ல போயி நான் போலீஸ், உள்ள விடுங்கன்னிருக்கான். அங்க ஒருத்தன், இவ்வளவு கட்டையா எந்த ஊருலேருக்கான் போலீஸுன்னிருக்கான். இந்தப் பய என்ன சொல்லிருக்கான் தெரியுமா? கட்டையா பிரதம மந்திரில்லாம் வச்சிக்கிடுவீக, போலீஸ் கூடாதான்னிருக்காம். மோட்டார் கம்பெனியிலயும் போயி இந்த வாயக்காட்டாம இருக்கணும்."

"ஏம்ல இப்படி பண்ணிக்கிட்டு அலயுத."

"அய்யா!"

"என்ன தாஸ்?"

"அவாள் டெய்லர் வந்திருக்கா?"

"என்ன விஷயமாம்?"

"ஒங்களத்தான் பாக்கணுமாம்."

"ஏய் சிவன், என்னடேய்?"

"அண்ணாச்சி! இந்த அம்பி தும்பம் பெரிசா இருக்கு அண்ணாச்சி."

"என்ன இப்பத்தாம் ஒவ்வொருத்தரா ஒவ்வொண்ணு

சொல்லிக்கிட்டிருக்காக... நீ வேற வந்து என்னலே?"

"அண்ணாச்சி நேத்துக் காலேல அப்பந்தான் வந்து கடையத் தொறந்துகிட்டு இருக்கேன். அவசரமா வந்தான். அண்ணாச்சி டேப்பை எடுத்துக்கிடுங்க; ஒரு பெரிய ஆர்டரு. வாங்க சைக்கிள்ல போயிரலாம்ன்னு கூப்பிட்டான். நானும் கூமுட்டைத்தனமா கடையைத் தொறந்த ஒடனேயே அடைச்சிட்டு சைக்கிள்ல ஏறிப்போனேன். வழியிலேயே, பாய் கடையில ரெண்டு வடை, டீ, பொறகு வில்ஸ் சிகரெட் எல்லாம் முடிச்சிட்டு, நெல்லையப்பர் கோயில் கிட்ட சைக்கிள்ல போயி எறங்கி, கோயிலுக்குள்ள கூட்டிக்கிட்டுப் போறாம்.

ஏய் என்னடே அம்பி, கோயிலுக்குள்ளே கூட்டிக்கிட்டுகிட்டுப் போறேன்னேன்? இவம் சொல்லுதாம் அண்ணாச்சி, நாலு கோபுரத்தையும் அளவெடுத்து நாலுக்கும் உறை தைக்கணுமாம். ஏன்னா, கடவுள் கோபுரம் மழையிலயும், வெயில்லயும் நனையறதும் காயுறதும் பாத்து இவனுக்கு மனசு ரொம்பச் சங்கடப்படுதாம். அதான் என்னயக் கூட்டிக்கிட்டு வந்தானாம். அதுக்கும் மேல திமிரப் பாருங்கண்ணாச்சி. அந்த உறை, மெஷின் தையல்ல கூடாதாம். ஏன்னா, சாமி காரியமாம் மனுஷனுகளுக்குத் தைக்கிற மிஷின்ல்ல தைக்கக் கூடாதாம். முழுவதும் கைத்தையல் போடணுமாம். கோபுரத்தை யெல்லாம் அளவெடுத்ததுக்கு பொறகு. யானைக்கு அளவெடுத்து நல்ல ஒரு சட்டையும் பேண்ட்டும் தச்சுக் கொடுக்கணும்ங்கான் அண்ணாச்சி. கத்திரியாலேயே இவனக் குத்தி கொன்னுரலாம்ன்னு தோணுச்சு. வெளியில சொல்லவும் வெக்கமா இருந்தது. சத்தம் காட்டாம வந்திட்டேன். ஒங்க தைரியத்திலே தான் அண்ணாச்சி இவம் இத்தனையும் செய்தான்."

"ஏய் நீ கூமுட்டைத்தனமா அவம்பின்னாலே போயிட்டு அவாள் தைரியத்திலேன்னு அவாளஏண்டேய் கொற சொல்லுத. வந்து கூப்பிடுற பய யாரு எவன்னு அறிவுகூட இல்லாம நீ எல்லாம் என்னடேய் தொழில் பாக்கே."

"டெய்லர் சிவன் தொடர்ந்து, காவடி எடுத்துக்கிட்டு பிச்சைக்கு வாறானுவ, அவனுககிட்டப் போயி பக்தி சிரத்தையா இவாள் ஒரு நாலணாவைப் போட்டுட்டு, அவங்ககிட்ட திருநீறும் பூசிக்கிட்டு, அவங்க தட்டிலேருந்து ஒருகுத்துத் திருநீறை எடுத்து வாயிலே போட்டுக்கிட்டு

வந்தாம். மூதேவி என்ன பக்தி முத்திருச்சேன்னு பாக்கேன். வாய்க்குள்ளேருந்து முழுசா ஒரு ரெண்டு ரூபாய் நாணயத்தை வெளியிலே எடுத்துக் கழுவுதாம். எல இப்படிச் செய்யலாமாலே, சாமி காரியம்ல்லான்னா அவங்க என்ன பழனிக்கா போகப் போறானுவ? அவங்க மட்டும் எப்படி ஏமாத்தாலாம்ங்கான்"

"பாருங்க அண்ணாச்சி. என்ன குறை சொல்லணும்னே ஒரு மாநாடு மாரி கூட்டம் போட்டுப் பேசுதாங்க அண்ணாச்சி. தீபாவளிக்கு நீங்க சட்டை எடுத்துக் கொடுத்தீங்களா அண்ணாச்சி. கமிஷன் கடை தாத்தா ஒரு சட்டைத்துணி எடுத்துக் கொடுத்தாக. அதைக் கொண்டு தைக்கத் கொடுத்தா ஒனக்குல்லாம் தைக்கவாடே நாங்க டெய்லர் கடை வச்சிருக்கோம்ன்னாரு. அதான் பெரிய ஆளு கோபுரத்துக்கும், ஆனைக்கும் தைக்கட்டும்னு கூட்டிட்டுப் போனேன்."

"சரில அதுக்கு துணி எடுத்துக் கொடுக்கணுமே நாயே. ஒங்கிட்டதான் வாய்க்கரிசி கெடயாதே. என்னலே பண்ணுவே. துணி எடுத்துக் குடுல. தைக்கச் சொல்லிருவோம். போக்கத்த மூதேவி."

"யாரு போக்கத்தவன்? அதுக்கெல்லாம் ஊருல ஆளில்லைன்னா நெனக்கீங்க. ஒடனே துணியெடுத்துத் தந்து தையக்கூலியும் தாறதுக்கெல்லாம் ஆள் வச்சிருக்கேனாக்கும்."

"அது யாருல, இந்த ஊருல எங்களுக்குத் தெரியாமலே அப்படி ஒரு ஆளு?"

"அதுவெல்லாம் இல்ல அண்ணாச்சி, பாங்கிலே லோன் போட்டுக்கிட்டு பெரிய. பெரிய காரெல்லாம் வச்சுக்கிட்டுப் புதுசு புதுசா ஆளுங்க வந்திருக்காங்க. அவங்களுக்கு எங்க பார்த்தாலும் அவங்க பேரு இருக்கணும். அப்படி ஒரு ஆளு இருக்காரு. என்னா அந்த உறையிலே உபயம்ன்னு அவரு பேரு போடணும், அவ்வளவுதான்."

எல்லோரும் சிரித்தார்கள். டெய்லர் உட்படத்தான்.

"யோவ் ராவன்னா, என்ன இப்படி ஓடியாறீரு?"

"ஒங்க நன்மைக்குத்தான்."

"ஆமய்யா, நம்ம வெண்டைக்காய் சாம்பார் அய்யங்கார் இருக்காரே. அவரு மேக்கேருந்து வாறாரு. என்னயப் பாத்தாரு. ஏதோ ராமாயணத்திலே சந்தேகம் கேட்கணுமாம். ஒரு வாரமா ஒங்களப் பாக்கணும்னு துடிச்சிக்கிட்டு இருக்காரு. இப்பம் என்னயப் பாத்தாரு. நீங்க வீட்டிலே இருக்கது தெரிஞ்சு போகும்."

"யோவ் இப்பம் அந்தாளு பாத்திருக்க மாட்டார்ன்னு என்ன நிச்சயம்."

"ஒங்க பலசரக்குக்கடை தாத்தா அவர்கிட்ட மாட்டிக்கிட்டிருக்கா. எப்படியும் கட பூட்டும்போது தான் அவாள கடைக்கு விடுவான். யார் கெடச்சாலும் கொடல அக்காம விட மாட்டார்ய்யா அந்த ஆளு. அந்தாளு பொண்டாட்டி புள்ளைகளே அவரக் கண்டா பயப்படுதுக. நல்லவேள அவரு பெண்டாட்டிக்கு காது கேக்காது. ஆனா பயலுவளும், பொம்பளப் புள்ளகளும்தான் ரொம்பப் பாடாப்படுதுவ. பேச ஆரம்பிச்சிட்டார்னா நிறுத்தவே மாட்டாம். ஏதோ கிருஷ்ணமேனன்னு நெனப்பு. சரி என்ன அய்யாவும், புள்ளயுமா ஒக்காந்திருக்கியோ."

"யாரு?முருகனச் சொல்லுதீரா. அவன் அப்பாவுக்கும் அவனுக்கும் ஏதோ பிரச்சினை போலத் தெரியுது. அதான் வந்திருக்காம். கூப்பிட்டுப் பேசலாம்னு பாத்தா அவன் செங்கோட்டைக்கு மக வீட்டுக்குப் போயிருக்காம்போல இருக்கு. சரி நாளைக்கு பேசிக்கிடுவோம்ன்னு சொன்னேன்."

"கதயக் கேட்டீகளா? எந்தப்பயதான் மால போடுறதுன்னு இல்ல. எல்லாப் பயலுவளும் போட்டுக்கிட்டிருக்கானுக. ஆனா அய்யப்பன் அங்கன இருக்காரா இல்ல வேற மலைக்குக்கண்டா

06

போயிருக்காரான்னு சர்க்கார்லே ஒரு தடவைப் பார்க்க ஏற்பாடு பண்ணனும். ஒரு வெவஸ்தையே இல்லாமப் போச்சு. சாராயம் விக்க பயல்ல இருந்து மூணு சீட்டு போடுத பய வரையும் ஒரு வரமுறை இல்லாமப் போச்சு, என்னடே முருகன் சிரிக்க?"

"இல்ல மாமா, ஒரு வருஷம்... அவரெ அய்யப்பனைக் கொண்டு போயி வல்வெட்டித்துறையில வச்சிரணும். வச்சிட்டு இவனுவளயெல்லாம் போகச் சொல்லணும். எவம் போவாம்னு சொல்லுங்க பாப்பம். போன வருஷத்தோட பத்து வருஷமாச்சு. அய்யப்பனே உத்தரவு கொடுத்துட்டாரு. இனிமே வரவேண்டாம். அப்பிடி, இப்பிடின்னு கத சொல்ல ஆரம்பிச்சிருவானுக. ஒருத்தம் போவானா"

"யோவ், இவன் எப்படி ஆளு பாத்தீங்களா?"

"நீரு ஒண்ணு! அந்தப் பய சொல்ற பல வெஷயங்கள் சிரிக்கிற மாரித்தான் இருக்கும். ஆனா, சிந்தித்துப் பார்த்தோம்னா வெவரம் புரியும்."

"அப்படி என்னத்தத்தான் சொல்லிட்டாருய்யா ஒங்க அண்ணன் மகன்? நாங்களுந்தான் கேட்டுக்கிடுதோமே."

"அய்யப்பன் கோவிலுக்குப் போறவங்களையெல்லாம் சர்க்காரிலேருந்து மூணு மாசத்துக்கு முன்னமே அப்ளிகேஷன் போடச் சொல்லணுமாம். அப்புறம் சர்க்கார் அவங்களையெல்லாம் தேர்ந்தெடுத்து மாஞ்சோலை எஸ்டேட்டு அல்லது பாபனாசம், இல்லேன்னா குத்தாலத்து மலைன்னு இடங்கள ஒதுக்கி அங்கன ஒவ்வொரு இடத்துக்கும் இத்தனை பேருன்னு பிரிச்சு நாப்பத்தியோரு நாளும் தங்க வைக்கணுமாம். காலைல குளிச்சிட்டு சரணகோஷம், பொறவு டிபன், பொறகு சரணகோஷம்ன்னு ஏற்பாடு பண்ணி அங்கேருந்து சர்க்காரே பொறுப்பையெல்லாம் எடுத்துக்கிட்டு அவங்கட்டேயே வசூல் பண்ணி நேரே மலைக்குப் கொண்டு போகணும். அப்பம் எத்தனை பேரு வாராம்ன்னு பார்ப்போம்ங்கான். நீரு என்ன நெனக்கீரு?"

"ஏய் முருகா நீ எப்பிடி ஆளு?"

"பொறவு என்ன மாமா? பொண்டாட்டிய ஸ்கூட்டர்லே வச்சுக்கிட்டுக் கூட்டிட்டுப் போறான். மாலயப் போட்டுக்கிட்டு சினிமாப் பாக்க வாறானுவ. பீடி, சிகரெட்,

எதயும் விடுறதில்லே. சரண கோஷம்ங்கிற பேரிலே, இதுலே பக்கத்து வீட்டுக்காரன் வேற தூங்க முடியாது. அதாம் இப்படி வல்வெட்டித்துறை பக்கம் வச்சிட்டானுவன்னா எத்தனை பேரு பக்தன்னு கண்டுபுடிச்சிரலாம்."

"சரியான ஆளுடே நீ"

"நம்ம கட்டை அம்பிப்பய தும்பம் பெரிசா இருக்குய்யா?"

என்ன ராவன்னா?"

"அந்த சைக்கிள் கடைக்காரன் மூக்கால அழுதான். சைக்கிள் எடுக்கானாம். துட்டுக் கொடுக்கது கெடயாது. அண்ணாச்சி மூஞ்சிக்காகப் பாக்கேங்கான். அரைமணி நேரம் ஒரு மணி நேரம் எடுப்பானாம். கொடுக்க மாட்டானாம். ஏன்னா அண்ணாச்சி வீட்டிலே நாயிமாரிக் கெடக்கானே. போறான்னுட்டு அவனும் கேக்கறது கெடயாது. இப்பம் நாலு நாளா ஒரு சைக்கிள் எடுத்திட்டுப் போயிக் கொடுக்கவும் இல்லியாம். கேட்டா, வரும்டே, என்னா ஏரோப்பிளேனாக் கொண்டு போயிட்டேங்கானாம்!"

"அந்த மூதேவிய நீரு செருப்பால அடிக்க வேண்டியதுதானே?"

"அடிக்க எங்க முடியுது. மூதேவி கிட்ட போனா ஏதாவது ஒரு சினிமா வசனம், பாட்டுன்னு இடத்துக்கு தகுந்த மாரி எடுத்து விட்டு நம்மச் சிரிக்க வச்சுப் போடுதான்."

"சரி வரட்டும். நான் சத்தம் போடுதேன். நீரும் சைக்கிள் கடைக்காரப் பயட்டே அவனுக்கு சைக்கிள் இனிமே கொடுக்கக்கூடாதுன்னு கண்டிசனாச் சொல்லிரும். என்னா?"

"சரிய்யா,"

"யாரு அது எட்டிப் பாக்கறது, யாருடே?"

"அண்ணாச்சி நாந்தான். இ.பி. சாம்பசிவம்ல்லா"

"ஏய், என்ன விசயம்?"

"இல்லண்ணாச்சி நம்ம லச்சிமி, இங்ஙன வந்தாளான்னு பாக்க வந்தேன்."

"இங்க, என்னிக்குடே வந்திருக்கா? எப்பவோ ஒரு

தடவை நீ ஒம்பொண்டாட்டி எல்லாருமா வந்திருந்திய. அப்பந்தான் வந்திருந்தா. அப்புறம் உந்தம்பி கல்யாண வீட்டிலே பாத்தது. பெரியப்பான்னுட்டு ஓடி வந்தா. ஒன் வீட்டுக்காரி, பெரியப்பாவ மாரி புள்ளயும் பேச்சுப் போட்டிலேல்லாம் பரிசா வாங்கிக் குவிக்கான்னா, அப்புறம் அவ காலேஜுக்கு பேசப் போயிருந்தபோது அவ பேராசிரியர்களெல்லாம் ரொம்பப் புகழும் போது பெருமையா இருந்தது. அதுக்கப்புறம் அவள நான் பாத்ததே கெடயாதே. என்ன விஷயம்?”

“ஒண்ணும் இல்லண்ணாச்சி. காலேஜ்லேருந்து புள்ளகளோடு டவுணுக்குத்தான் வந்தான்னு சொன்னாங்க. அதாம் ஒருவேளை பெரியப்பாவப் பாக்க வந்திருப்பாளோன்னு வந்தேன். நான் வாரேன்.”

“ஏய் புள்ள வந்ததுக்கும், வராததுக்கும் போனிலே தகவல் சொல்லுடே. இப்பவும் குடிச்சிட்டுத்தான் வந்திருக்கியா. ஒங்களுக்குல்லாம் எதுக்குத்தான் பொண்டாட்டி புள்ளயோ? சரி, சரி, போ அழ ஆரம்பிச்சிராதே. எங்கயும் போயிருக்க மாட்டா. புத்திசாலிப்புள்ள. நீ போகும்போது வேணாப்பாரு. அவ வீட்டிலே இருப்பா. மறக்காமப் போன் பண்ணு. வீட்டுக்காரியப் போயி ஏதும் பிரச்சினை பண்ணிராதே. சொன்னாப் புரியுதில்லாடே?”

“அவாளுக்குப் புரியாமயா, அவாள் எவ்வளவு அடிச்சிருந்தாலும் திருக்குறளுக்கே தெளிவா அர்த்தம் சொல்லுவாளே” இது ராவன்னா

“ன்னய்யா ராவன்னா இவ்வளவு பதறிப் போயி வந்திருக்கானே, கூட பெரிய பயலும் வந்திருக்கான் பாத்தீங்களா? வேற எதும் பிரச்சினயா?”

“புள்ள தங்கமான புள்ளய்யா, ஏடாகூடமா நடக்கக்கூடிய புள்ளயில்லய்யா, சினிமாவுக்கு கினிமாவுக்குப் போயிருக்கும்ண்ணு நெனக்கேன் என்னா!”

“சர்க்காருல வேல பாக்காம்ன்னு பேருய்யா. ஆனா, இவம்ல்லாம் அரக்கன்யா. தெனம் குடிதான். பிரியாணி தான். கோழி தான். வீட்டில என்ன நடந்திருக்குன்னு தெரியாது. மெக்கானிக் ரவிப்பய குடிகாரன் தான், ஆனா அவன் என்ன குடிக்கட்டும், பொண்டாட்டி புள்ளகளுக்கு எல்லாம்

செஞ்சிட்டுத்தான் மத்ததுல்லாம்.”

“ஆனா இவன் அப்படியில்லய்யா, இவன் குடிகாம். இவன் சாப்பிடுதாம் அவ்வளவு தான். வீட்டிலய வச்சு வேறக்குடிக்கான்ய்யா. அதான் அவன் வீட்டுக்குப் போறதயே கொறச்சுக்கிட்டேன். கேட்டா அவனுக்கு சோகம்னு பொய் வேற சொல்லுதாம். சோகம் எந்த மனுஷப் பொறப்புக்குத்தான் இல்ல.”

“வயசுக்கொத்தவனுக கூடன்னாக்கூடப் பரவாயில்லை. சின்னப்பயலுவ தரம் இல்லாத பயலுவ கூடல்லாம் குடிக்கான்யா. மூதேவி பாடினான்னா இன்னைக்குப் பூராவும் கேட்டுக்கிட்டிருக்கலாம். இவ்வளவு திறமையை வச்சுக்கிட்டு நெறய பெரிய ஆளுங்க பழக்கத்தையும் வச்சிக்கிட்டு ஏன்தான் இப்படி கேவலப்படுதானோ தெரியல்ல.”

“ஆமாய்யா, நான் அன்னிக்கு மதுரை மாமாவ பஸ் ஏத்திட்டு கிராஜுவேட் கடயிலே ஒரு டீ குடிப்போம்னு பாத்தா இந்த ஆள், ராபர்ட், சுடலக்கண்ணு, இன்னொரு பய அடயாளம் தெரியல்ல. ஒரே கூத்துத்தான் போங்க. காணச் சகிக்கலே. இதுலே என்னய வேற பாத்தாச்சு. அண்ணாச்சி ஊர்ல இருக்காகளான்னு கேக்க நெனக்காரு. முடியல . மெட்ராஸுக்குப் போயிருக்காக; வர பத்து நாளாகும்னு நானாவே சொல்லிட்டு வந்திட்டேன். இவ்வளவும் பண்ணிட்டு மறுநா ஆபிசுக்கு எப்படித்தான் போறானுவளோ, அவ்வளவு தள்ளாடுதானுவ, ஆடுதானுவ! ஆனா போலீசைப் பார்த்ததும் ஸ்டெடியா ஆயிருதானுவ! அதாம் என்னன்னே புரியல்லே.”

“ஒரு வேள போலீசை பாத்தா மட்டும் புரியற மாதிரி அதுலய ஏதும் மருந்தைச் சேத்திருக்கானுகளோ என்னமோ.”

“என்ன இழவு தெரியுது. நம்ம கட்டை அம்பிப் பய இருக்கானே. இவம் அடிச்சிட்டான்னா ஒரே சிரிப்புத்தான். தெருவிலே யார் போனாலும் மாமாதான். நீங்க ஊர்ல இல்ல அன்னிக்கு ஒரு நா வந்து நம்ம டைகரைக் கட்டிக்கிட்டு அழுதாம்பாருங்க. அதுக்கே கொஞ்சம் குழப்பமாயிருக்கும். எல நாய அசிக்கப்படுத்தாதேன்னா, எனக்கும், டைகருக்கும் யாரிருக்கான்னு வேற அழுதாம். அப்புறம் தாஸ் தான் அவனைக் கொண்டு வீட்டுல விட்டுட்டு வந்தாரு. இதுலே வேற அன்னிக்கு கொஞ்சம் ஜலதோஷம். அவாள் இ.பி.சாம்பசிவம் சொல்லுதாரு; கொஞ்சம் பிராந்தி வாங்கி

வெந்நீர்ல கலந்து அடிச்சிட்டா, கப்புன்னு ஜலதோஷம் போயிரும்ங்காரு. ஒண்ணுக்கு ப்ரியாப் போனும்ன்னா பீர் ஒரு பாட்டில் அடிங்கன்னு உபதேசம் வேற."

"நீரு அடிச்சுப் பாத்தீரா?"

"கேலிய ஆரம்பிச்சிட்டீகளா, நான் எதுக்குய்யா அடிக்கேன். நான் என்ன வெபரம் புரியாத ஆளா?"

“அ ண்ணாச்சியா?”

“ஏய் என்னடே வந்திட்டாளா”

“இல்லண்ணாச்சி.”

“எங்கனடே போயிருப்பா? ஏதாவது கண்டிச்சியா? ஏதாவது தகராறா? திடீர்னு புள்ள காணாமப் போகணும்ன்னா அவ அம்மைக்காரி ஏதாவது சத்தம் போட்டாளாமா? என்னடேய்?”

“இல்லண்ணாச்சி என் மானம்ல்லாம் போச்சுண்ணாச்சி.”

“எல! சுவர்ல முட்டாதே, முட்டாப்பய. புள்ளயக் காணும். என்ன ஏதுன்னு விசாரிப்போம். கொஞ்சம் பொறுமையா என்ன நடந்ததுன்னு சொல்லு. காஜேஜுக்கு சாப்பாடு கொண்டு போனாளா?”

“ஆமாண்ணாச்சி, அவ அம்மைதான் பழயது வச்சுக் கொடுத்திருக்கா.”

“ஏன் டிபன் சாப்பிட மாட்டாளா?”

“இல்லண்ணாச்சி, அவளுக்கு பழயதும், ஊறுகாயும்தான் புடிக்கும்.”

“துணிமணி ஏதும் எடுத்திட்டுப் போயிருக்காளா?”

“இல்லண்ணாச்சி, உடுத்துன துணிமணியோடத்தான் போயிருக்கா?”

“அவ சிநேகிதிக வீட்டிலெல்லாம் கேட்டுட்டியாடே?”

“எல்லாப் பக்கமும் தேடிப் பாத்தாச்சண்ணாச்சி.”

“கோவில்பட்டி தம்பி வீட்டுல கேட்டியாடே?”

“இல்ல.”

“இரு! போன்ல கேட்டிருவோம்.”

07

"அண்ணாச்சி, எனக்கு ஒங்க கையாலேயே வெஷம் கொடுத்துருங்க. நான் போய் ஒழிஞ்சிருதேன்."

"எல இங்க என்ன சவக்கிடங்காலே வச்சு நடத்திக்கிட்டிருக்கேன். இல்ல மூட்டைப் பூச்சி மருந்துக்கடை வச்சிருக்கானுவன்னு நெனச்சியா? இவருக்கு நாங்க மருந்து கொடுக்கணுமாம். அவாள் இங்கனயே செத்து போவாளாம். நாங்க இவாளைத் தூக்கிக்கிட்டு, பெரிய வாஞ்சிநாதன் பாரு, அலயணுமாம். போங்கடா போக்கத்த பயலுவளா."

"பெரியப்பா"

"என்னய்யா?"

"நம்ம ராபர்ட் கூட காலேஜ்வாசல்ல காலேல பேசிட்டிருந்தாளாம். அவ பிரண்ட் ஒருத்தி சொன்னா."

"ஏய் சாம்பசிவம், அந்தப் பய சொல்லுறது உண்மை தானா? ஏண்டேய், நீ சொல்லல்லே, யாருல, ஒங்கய்யாவுக்கு மிலிட்டரிக் கோட்டாவுல தண்ணியெல்லாம் சப்ளை செய்வானே அந்தப் பயலா?"

"ஆமா பெரியப்பா."

"அவனுக்கு என்னலே அந்தப் புள்ளை காலேஜுல வேல?"

"இல்ல பெரியப்பா தெரியல்ல."

"அந்தப் புள்ள வேற ஏதாவது சொல்லுச்சாலே?"

"இல்ல பெரியப்பா."

"ஒனக்கு அந்தப் பிள்ள வீடு தெரியுமாலே?"

"யோ, ராவன்னா! நாயுடுவக் கூப்பிடும். கார எடுத்திட்டுப் போயி அந்தப் புள்ளகிட்ட வேற ஏதாவது விபரம் கெடைக்கான்னு பாரும்."

"அவாளைக் கூப்பிட்டுட்டுப் போகவா?"

"கூட்டிட்டுப் போரும். ஆனா இவனுகள வெளியிலே விட்டுட்டு நீரு மட்டும் போயி விசாரியும். வேற எதும் அவசரம்ன்னா உடனே என்னப் போனிலே கூப்பிடும். கௌம்பும்."

"அலோ!"

“என்ன ராவன்னா!”

“அய்யா, அந்த ராபர்ட் பயகூட புண்ணாக்கு கடைக்காரர் மகனும் இருந்திருக்கான்?”

“யாரு பலவேசம் மகனா?”

“ஆமாய்யா.”

“வேற எதுவும் அந்த புள்ள சொல்லுச்சா.”

“அது நேரில் வந்து சொல்லுதேன். இவங்களைக் கூப்பிட்டுக்கிடட்டு வரவா, இல்ல இவங்க வீட்டிலே விட்டுட்டு வரவா?”

“நீரு நெனைக்கப்படி செய்யும்.”

“என்ன ராவன்னா என்னாச்சு?”

“அய்யா, ஒங்க புண்ணாக்குக் கடைக்கார மருமகன் வந்திருக்காக”

“என்ன மருமகனே அப்பா நல்லா இருக்காளா? கடையாபாரம்ல்லாம் எப்படி?”

“எல்லாம் நல்லா இருக்கு மாமா, மாமா கூப்பிடுதாகன்னு ராவன்னா மாமா சொன்னாக, அதான் வந்தேன் என்ன மாமா?”

“ஒம்ம பிரண்ட் ராபர்ட் இருக்காம்லா. அவன கொஞ்சம் அவசரமாப் பார்க்கணும்.”

“நான் அவனப் பாத்து ஒரு வாரத்துக்கு மேல இருக்குமே மாமா.”

“வெடியக்காலம் பத்து மணிலேர்ந்து சாயங்காலம் ஏழு மணிக்குள்ள ஒரு வாரம்ங்கது மருமகன் சொல்லித்தான் நம்மளுக்கே தெரியுது. மருமகனே! எல்லாம் தெரியும். அந்தப் புள்ளய எங்ககொண்டு அந்தப் பய வச்சிருக்கான்னு சொல்லிருங்க போதும். மத்ததெல்லாம் நாங்க பாத்துக்கிடுவோம்.”

“எந்தப் புள்ளய மாமா?”

“டயானாவை”.... இது ராவன்னா.”

"மருமகனே! நீங்களும், ராபர்ட்டும் காலைல காலேஜுக்கு போனது, அந்தப் புள்ளயக் கூட்டிட்டுப் போனது எல்லா வெபரமும் எங்களுக்குத் தெரியும். வெபரத்தைச் சொல்லிட்டீங்கன்னா ஒங்க அப்பா வரை விபரம் போகாது. இல்லேன்னா ஒங்க அப்பா மூலமா தான் ஒங்கிட்ட கேக்கணும்னா சொல்லுங்க. ராவன்னா! பலவேசத்தைப் போன்ல கூப்பிடுங்க."

"மாமா, அப்பாகிட்டல்லாம் வேண்டாம். நானே சொல்லிருதேன்."

"தங்கமான புள்ளல்லா மருமகன்! சொல்லுங்க மருமகனே."

"தூத்துக்குடியிலே அவுக ஜேம்ஸ் அண்ணன் வீட்டிலே இருக்கான்."

"அங்க போன் நம்பர் இருக்கா மருமகனே."

"கடையிலே வச்சிருக்கேன் மாமா."

"ராவன்னா, கூடப் போயி மருமகன்கிட்ட நம்பரையும் வாங்கிக்கிட்டு மருமகனையும் கூட்டிட்டு வந்திடுங்க."

"அலோ யாரு, ஜேம்ஸா?"

"ஆம்மா"

"இங்க திருநவேலியிலேர்ந்து பேசுதோம் அண்ணாச்சி பேசணும்னாங்க."

"அண்ணாச்சியா? அண்ணாச்சி நான் ஜேம்ஸ்தான் பேசுதேன் இந்தப்பய இங்கதான் அண்ணாச்சி இருக்கான். அவளும் இங்கதான் இருக்கா. நாஞ் செருப்பைக் கழட்டீக்கிட்டு அடிச்சேன். அந்தப்புள்ள வந்து குறுக்கவிழுது. நாந்தான் ஓடி வந்தேன். அவரு மேல ஒரு தப்பும் கெடயாதுங்கு..நான் என்ன செய்யணும்னு சொல்லுங்க."

"அதுகள ஒண்ணும் ரொம்ப துன்பப்படுத்திராதே. நான் ராவன்னாவை எங்கார்ல அனுப்பி வைக்கேன் ரெண்டு பேரையும் அவங்களோட அனுப்பி வையி."

"சரி அண்ணாச்சி. அவ அப்பா வரலயா, அண்ணாச்சி?"

"அவன் எதுக்குடே? நான் ராவன்னாவ மட்டும்தான் அனுப்புவேன். வேணா நீயும் கூட வா."

"அலோ! பெரியப்பாவா?"

"ஆமா யாரு?"

"நான் லெச்சுமி பேசுதேன்."

"எங்கருந்து? அதான் நான் ராவன்னாவை அனுப்புதேன்னு சொன்னேனேல்லா. பதினோரு மணி வாக்கிலே வருவாரு. ரெண்டு பேரும் பொறப்பட்டு வாங்க."

"இல்ல பெரியப்பா. என்ன நீங்க என்ன செஞ்சாலும் பொறுத்துக்குவேன். ஆனா கொஞ்சம் நான் பேசுறதக் கேட்கணும் நீங்க."

"பெரியப்பா, நானாத்தான் வந்தேன். அவுக ஒண்ணும் என்னயக் கட்டாயப்படுத்திக் கூட்டிட்டு வரல்லே."

"சரி. அதப்பத்தி என்னா? நான் பெரியப்பாதானே கூப்பிடுதேன். ஒங்க அப்பா ஒண்ணும் செய்ய மாட்டாம்."

"அதப்பத்தியில்ல பெரியப்பா. நீங்க கூப்பிட்டா நாங்க எங்க வேணாலும் வருவோம். இன்னிக்குக்கூட முதல்ல அங்கதான் வரணும்னு நெனச்சேன். பிரச்னையின்னா என்னைப் பெத்தவரு அங்கே தான் வருவாருன்னு தெரியும். நானும் ஒங்ககிட்ட நேரில சில விஷயம் பேசமுடியாதுன்னு தெரியும். அதுதான் இங்க வந்தேன். நான் எங்க அப்பா முகத்திலே முழிக்கவே ஆசைப்படல்லே. எத்தனை தடவை நீங்க சொல்லியிருப்பீய. கேட்டிருப்பாரா? காலேஜுக்குப் போக ரெண்டே தாவணிதான். அதை துவைச்சு துவைச்சு போட்டுட்டுப்போவேன். புஸ்தகம் வாங்கப் பணம் கேட்டாக்க, நான் பணத்துக்கு எங்கே போவேம்பாரு. நாங்க பழயதுக்கும் ஊறுகாய்க்கும் சங்கடப் பட்டுக்கிட்டிருக்கும் போது தினசரி தண்ணி, கோழி, பிரியாணின்னு சாப்பாடு. வீட்டில பெரிய மனுஷியான பொண்ணு ஒண்ணு இருக்கேன்னு வெவஸ்தையில்லாம அம்மாவப் படுத்தர தொந்தரவு, இதெல்லாம் தாங்க முடியாமத்தான் நான் ராபர்ட்டோட வந்தேன். அங்கேயிருந்து எனக்கு படிக்கவும் முடியாது. அந்தாளு ஒரு கல்யாணம், காட்சின்னு ஒண்ணுக்கும் ஏற்பாடு பண்ண மாட்டாரு. எனக்கு வேற வழி

தெரியல. வெளியப் போயி பழகவும் தைரியமில்ல. அவர்கூட வந்த ராபர்ட் எனக்கு இருந்த மனத்துயரத்துக்கு ஆறுதலாப் பல சமயங்கள்லே இருந்தாரு. அதாம் வந்திட்டேன். தப்புன்னா சொல்லுங்க. நான் ராமையா மாமாகூடப் பொறப்பட்டு வந்திருதேன். நீங்க என்ன சொல்லுதீங்களோ அதுப்படி நடக்கேன். ஆனா வாழ்க்கை ராபர்ட்டோடத்தான்."

"சரிம்மா அந்தப் பயலுக்கு வேல வெட்டி ஒண்ணும் கெடயாதே. எப்படி ஒன்னய வச்சு காப்பாத்துவான்?"

"மூட்டை சுமந்தாவது காப்பாத்துவாரு. ஒங்கள மாதிரி உண்மையான அன்பானவங்க சொல்லியும் கேக்காத எங்க அப்பாவோட மூஞ்சியிலேகூட முழிக்க மாட்டேன்."

"சரி, சரி அழாதே. ஏதாவது உதவிண்ணா எனக்கு போன் பண்ணு. நான் பாத்துக்கிடுதேன். ஒரேயொரு உண்மையை மட்டும் எனக்கு சொல்லணும். ஒங்க அம்மைக்கு இது தெரியுமா?"

"அவதான் பெரியப்பா என்னய அனுப்பிச்சு வச்சதே. நாந்தான் வாழ்நாள் பூராம் இந்த குடிகாரமட்டயோட துன்பப்படுதேன். நீயாவது போயி நிம்மதியா வாழுன்னு அவதான் திருச்செந்தூரு இலைவிபூதி பிரசாதத்தை பூசி கையிலேயும் கொடுத்து அனுப்பிச்சா."

"ராபர்ட் கூட நல்லா இரும்மா. பெரியப்பா ஆசீர்வாதம் என்னைக்கும் உனக்கு உண்டு."

"நாயுடு, எங்க ராவன்னாவைக் காணோம்?"

"அண்ணாச்சி, தூத்துக்குடிக்குப் போணும்னு சொல்லியிருந்தேள்லா, அதான் ராத்திரிவர நேரமாகும்ன்னு வீட்டுலே சொல்லிட்டு வாரேன்னு போயிருக்காரு."

"ஏய் தூத்துக்குடிக்கெல்லாம் போக வேண்டாம். அவரு வந்தா என்னப் பார்க்கச் சொல்லு."

"என்னய்யா! திடீர்னு போக வேண்டாம்னு சொல்லிட்டீகன்னு நாயுடு சொல்லுதாரே, என்ன விஷயம்?"

"இல்லய்யா, அந்தப்புள்ள எங்கிட்ட போன்லே பேசிச்சு. அது கேட்ட கேள்வி எதுக்கும் என்கிட்ட பதில் இல்ல."

"அப்பிடி என்னய்யா கேட்டுது?"

"பெத்த புள்ளக என்ன சாப்பிட்டுது, என்ன செய்யுதுன்னு கூடக் கவனிக்காம தான் மட்டும் வெள்ளையும், சொள்ளையுமா உடுத்திக்கிட்டு, தினசரி குடிச்சிகிட்டு, கோழியும், பிரியாணியுமா தின்னுகிட்டு, பெத்த புள்ளகளுக்கு பழயதும் ஊறுகாயுமாவது இருக்கான்னு பாக்காத தகப்பன் கிட்ட எப்படி வாழறதுன்னு கேக்கு."

"அதுக்கு, அவ அப்பனுக்கே குடிக்க வாங்கிக் கொடுக்க பயகூடயாய்யா ஓடறது?"

"என்னாய்யா நீரே அப்படிக் கேக்கீரு! மனசு ஆறுதலுக்கு ஆளில்லாம இருந்த புள்ளைகிட்ட இந்தப் பய ஆறுதலா நாலு வார்த்தை பேசி சரிகட்டிட்டாம்போல, அப்பனுக்கு ரம், இதுகளுக்கு பண்டம் பலகாரம்ன்னு வாங்கிக் கொண்டு கொடுத்திருப்பான். அதவிட, ஆறுதலா நாலு வார்த்தை ஒரு ஆம்பள பேசினா எந்தப் பொம்பளப் புள்ளய்யா விழாது? பாரதியே சொல்லுதாம்லா, பேணும் ஒரு ஆண் மகனின் காதலினை வேண்டியன்றோ பெண் மக்கள் கற்பு நிலை பிறழுகின்றார்ன்னு."

"அந்தப் பய அந்தப் புள்ளய வச்சுக் காப்பாத்துவானாய்யா?"

"நாம பாத்து அந்தப் பயலுக்கு ஏதாவது ஒரு நல்ல வேல வாங்கிக் கொடுக்க வேண்டியது தான்."

"நீரு சொன்னதுதான் சரி."

"அம்மைக்காரியும் சேந்துதான் அனுப்பி வச்சிருக்கா. என்னோட இந்த தும்பம் போகட்டும், நீயாவது போயி நல்ல வாழுன்னு."

"அலோ"

"சுப்பையா சொல்லுடா"

"அண்ணாச்சி வந்திட்டேளா, நான் சுப்பையால்லா பேசுதேன்."

"எலே. அதான் கூப்பாட்டைக் கேட்டவுடனே சுப்பையா சொல்லுடான்னு சொல்லியாச்சுல்லா. பெறகு என்னலே சுப்பையா பேசுதேன்?"

"கோயம்புத்தூர்லேருந்து எப்பண்ணாச்சி வந்தீங்க? அஞ்சாறு தடவை தேடி வந்தேன். ராவன்னா தான் சொன்னாரு. ஏய் அவாள் கோயமுத்தூருக்கு போயிருக்கா. ரெண்டு மூணு நாள்ல வந்திருதேன்னு சொல்லிட்டுப் போனாவ. ஆளக்காணோம்ன்னார். நம்ம வடிவுப் பொண்ணை அங்கேதான் கட்டிக் கொடுத்திருக்கு. போயிப் பாத்திட்டு வந்தீகண்ணா அதுக்கு எம்புட்டுப் பெருமையா இருந்திருக்கும். எங்க போனாலும் சொல்லாமப் பறயாம போயிருதீக.. ஒரு வார்த்தை, எல இங்க போறேன் இன்னிக்கு வாறேன்னு சொன்னா தவிக்க மாட்டோம்லா."

"இனிமே சொல்லிட்டே போறண்டேய். வெஷயம் என்னான்னு சொல்லு."

"வீட்டிலேதான் உங்க செல்லப்பிள்ளை இருக்கானே, அவனாலே ஒரு பிரசினை. ராவன்னாட்ட தான் அவ்வளவு விவரமும் சொல்லிப்போட்டுத்தானே வந்தேன். அவரு சொல்லலியா?"

"எல நா வெடியக்காலம் மூணு மணிக்கு வந்தேன். அவருக்கு நான் வந்த வெவரமே தெரியாது. நீங்க காலேல அஞ்சு மணிக்கு கூப்பிடுங்க., கூப்பிட்டுட்டு அவர்ட்ட சொன்னேன்; இவர்ட்ட சொன்னேன்னா, சரி நான் அவர்கிட்ட கேட்டுக்கிடுதேன்."

"இல்லேண்ணாச்சி, சாயங்காலம்

08

நானே வாரேன். அம்மை வேற ஒங்களப் பாக்கணும்ங்கா."

"எதுக்குலே அவள வயசு காலத்திலே அலக்கழிக்கே. நீ மட்டும் வா. எல அவளக் கிவளக் கூட்டிட்டு வந்திராதே."

"அப்ப சாயங்காலம் ஒரு அஞ்சுமணி வாக்கிலே வாரேன் அண்ணாச்சி. அடுத்தாலே கோயமுத்தூருக்கு எப்பப் போவீகளோ தெரியாது. ஒரு வார்த்தை சொல்லிட்டுப் போங்க. ஒரு நா ரெண்டு நாள்னா பரவாயில்லை. பத்து நாள் அங்கன இருந்திருக்கியோன்னு அந்தப் புள்ளக்குத் தெரிஞ்சிதுன்னு வையுங்க, அது மனசு வருத்தப்படும்ல்லா அண்ணாச்சி."

"அது சரிலே, காலேல யார்ல சிக்கினான்? எஸ்.டி.டி ல சும்மா லோக்கல் மாரி பேசிக்கிட்டிருக்கே."

"நம்ம சொக்கு அண்ணாச்சி. சுண்டக்கறி ராமசாமி தம்பி. அவன் ஒரு பூத் வச்சிருக்காம்லா. அதுலேதான் துட்டு, கட்டி வச்சு வாங்கிருவாம்ல்லா, ஒங்ககிட்டன்னவுடனே எனக்கு கையும் ஓடல்ல காலும் ஓடல்ல."

"சரில சாயங்காலம் வா. அம்மையைக் கிம்மையை இழுத்துட்டு வந்திராத, என்னா?"

"நான் ராவன்னாட்ட வெஷயம் கேட்டுக்கிடுதேன்."

"யோவ், தாசு, போயி ராவன்னா இருந்தா கூட்டிட்டு வாரும்."

"காலேலயே அவாளப் பாத்தேன்ய்யா. நீங்க வந்த வெபரம் சொன்னேன். வாரேன்னாங்க."

"எங்கவே பாத்தீரு?"

"மேல ரத வீதியிலே ஒங்க ஜவுளிக்கடை சின்னையாகூட போயிட்டிருந்தாக."

"வந்தா உக்காரச் சொல்லும். நா குளிச்சிட்டு வந்திருதேன்."

"அய்யா என்னா கொயமுத்தூரு விட்டுதா. நாலு நாளுன்னிட்டு பத்து நாளா உக்காந்திட்டீய. இங்க எல்லாருக்கும் கிறுக்குப் புடிச்சுப் போச்சு."

"போன வேல முடியல்ல. அதான் ராவன்னா, பத்து

நாளாயிட்டு, தூத்துக்குடி சுப்பையாப்பய காலேல போன் பண்ணான். இனிமே எங்க போனாலும் அவாள்ட்ட ஒரு வார்த்தை சொல்லிட்டு போகனுங்கான்."

"அந்த வேல மட்டும் வேண்டாம். கேவலப்படுத்திப் போடுவானுவ."

"யோவ் நீரு ஒரு வெவரங்கெட்ட ஆளுய்யா. ஊருக்குப் போறதா சொல்லிட்டு போனா என்னய்யா கேவலப்படுத்திப் போடுவானுக. நொர்நாட்டியம் பேசாம ஒம்மாலே இருக்க முடியாதே!"

"சரி. எனக்கென்ன வந்தது. ஊர் சிரிச்ச பொறவு தான் தெரியும் ஒங்களுக்கு.."

"என்ன பெரிய சஸ்பென்ஸெல்லாம் வச்சுப் பேச ஆரம்பிச்சுட்டீரு? வெளிப்படையாத்தான் சொல்லித் தொலையுமே."

"சஸ்பென்ஸூம் இல்ல ஒரு மண்ணுமில்ல. நம்ம எம்.எல்.ஏ. இருக்காருல்லா, ஆந்திராவுக்கு போய்ட்டு வந்திருக்காரு; ஆந்திரா சென்று வெற்றிக்கொடி நாட்டிய அண்ணனே வருக! வருக! ன்னு போஸ்டர் போட்டுட்டானுவ. அப்புறம் இந்த பயலுவளும் கோயமுத்தூர் சென்று வந்த கோமகனேன்னு போஸ்டர் போட்டுட்டானுவன்னு வச்சிக்கிடுங்க. வெளிய தெருவிலே தலகாட்ட முடியுமான்னு கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க. நானே எனக்கு எங்கே கடையநல்லூர் களம் கண்ட தன்மானச் சிங்கமேன்னு போஸ்டர் போட்டிருவானுவளோன்னு பயந்துக்கிட்டிருக்கேன். ஒரு ஊருக்கு போக விடுதானுவளா;வர விடுதானுவளா, சொந்த ஊருக்கு வாரான். பொறந்த மண்ணுக்கு வரும் புதியவனே வருகன்னு போஸ்டர் போடுதானுவளே."

"சரி. காலைல சின்னையா கூட எங்க போனீரு?"

"ஓ தாஸ் சொல்லிட்டாரா? ஒண்ணும் இல்லய்யா காலேல டிரைவர் நாயுடுவப் பாத்தேன். எப்பவே வந்தியோன்னு கேட்டேன். காலைல மூணு மணிக்கு வந்தோம்ன்னாரு. சரி போயிப் பார்ப்போம்ன்னு பொறப்பட்டு வெளில வர்றேன். ஒங்க சின்னையா நிக்காக. ஏய் எங்கடே பொறப்பட்டேன்னாளா? நான் ஒங்க மகன் பத்து நாளைக்கப்புறம் வந்திருக்காக, போயி

பார்க்கப்போறேன்னேன். சரிடே போத்தி ஹோட்டல்ல போயி ஒரு காப்பிய குடிச்சிட்டுப் போடேன்னாக. கூடப்போனேன். எதுக்க பாகவதர் வந்தான். ஒங்க சின்னையா ஏதோ ஊர்வலத்துக்கு ஆள் சேக்கிர மாதிரி அவனையும் காப்பி சாப்பிடக் கூப்பிட்டாக. அந்தப் பேதில போறவன் வாய்தான் ஒங்களுக்குத் தெரியுமே! போத்தி கடைக்கா? எனக்குத்தான் மலச்சிக்கல் கிடையாதேங்காந்கான். ஏய் நாங்கள்ளாம் அதுக்காகவாவே போறோம்ங்கேன். என்ன சொன்னான் தெரியுமா? மூணு வருஷத்து மலச்சிக்கல்ன்னாலும் ஒரே காப்பில அத்தனையும் க்ளீன்ங்கான்ய்யா. ஒங்க சின்னையாவுக்கு கோபம் ஒரு பக்கம்; சிரிப்பு ஒரு பக்கம். நீ வாடே வெளங்காத பயலக் கூப்பிட்டேன் பாருன்னா. எனக்கு மனசுக்குள்ள பாகவதர் மேலே ஒரு சந்தோஷம். மனசுக்குள்ளே அவனைப் பாராட்டிக்கிட்டே போயி குடிச்சிட்டு வீட்டுக்கு வந்தா.. இன்னிக்கு அம்மாவாசையாம். வீட்டுலே பூராவும் தண்ணியக் கோரி விட்டுக்கிட்டிருக்கா. இவளையெல்லாம் திருப்பூர்ல கொண்டு விடணும்ய்யா. வெந்நி போட்டு வச்சிருந்தா, குளிச்சிட்டு ரெண்டு இட்டிலியை முறிச்சுப் போட்டுட்டு வாரேன்."

"சுப்பையாப் பய ஒம்ம கிட்ட ஏதோ சொல்லியிருக்கங்கானே, என்னது? அவ அம்மை வேற என்னப் பாக்கணுங்காளாம். ஏதும் சொத்து கித்து வில்லங்கமா?"

"இல்லய்யா! அவன் கடசித் தம்பி, அதான் ஒங்க செல்லப்புள்ள சங்கரன் பய இருக்கான்ல்லா, அவன் கல்யாணம் வேண்டாம்ன்னு நெலயா நிக்கானாம். கெழடு ரெண்டும் உசிரொட இருக்கையில இந்தப் பயலுக்கும் ஒரு தாலியை சீலயைக் கட்டிப் பாக்கணும்னு ஆசைப்படுதுக. எல்லாரும் சொல்லிப் பாத்தாச்சாம். ஒருத்தர்ட்டயும், அடைபடமாட்டேங்கான். எங்க பெரிய வீட்டு மகன் சொன்னாத்தான் வழிக்கு வருவாம்ங்கா அம்மைக்காரி. சுப்பையாவுக்கும், மத்த பயலுகளுக்கும் கல்யாணத்தை முடிச்சா கெழடுக இருக்கும் போதே சொத்து பத்துக்கள்ளாம் பிரிச்சிரலாமேன்னு ஒரு நெனப்பு. அதான் அஞ்சாறு தடவை அவன் வந்தான்."

"சரி, நீரு சங்கரனப் பாத்தீரா?"

"கண்ணுல தட்டுப்படவே மாட்டேங்காய்யா."

"சரி, சாயங்காலம் சுப்பையாப் பய நேரில வாரேன்னிருக்கான். அப்புறம் இந்தப் பயல புடிப்போம். மத்தியானம் எங்கூட சாப்பிடுமே."

"தொலஞ்சுது போங்க. காலைலயே காய்கறில்லாம் வெட்டியாவுது. தலவாழ இல போட்டு எல்லாம் பரிமாறி நைவேத்தியம் பண்ணி நாங்க சாப்பிடணும். பெறகு அவ அந்த இலயில சாப்பிட்டாத் தான் அவளுக்கு சொர்க்கம். மாமனார் இருக்கும்போது அவருக்கு ஒரு இட்டிலி கொடுக்க மாட்டாளுவ. இப்பம் இவளுகளுக்கு என்னல்லாம் ருசியோ அதையெல்லாம் மாமனாருக்கு படைக்காளுக."

"சரி நான் கொஞ்சம் தூங்குதேன். நீரு ஒரு அஞ்சு மணிக்கு வந்திரும் என்னா?"

"ராவன்னா, அண்ணாச்சி எந்திரிச்சாச்சா?"

"வாரும்வே சுப்பய்யாப்பிள்ளை. இதுவரை எந்திரிக்கல்ல. ஒம்ம சத்தத்திலே எந்திரிக்காம இருப்பாகளா? கும்பகருணன ஆனைய விட்டெல்லாம் எழுப்புனதாச் சொல்லுதானுவளே, நீரு இருந்திருக்கணும். ஒரு சத்தத்திலே எழுந்திரிச்சிப் போயி ராமன் காலிலே விழுந்திருக்க மாட்டான்.? அது சரி, எங்க போனாலும் ஒம்மகிட்டச் சொல்லிட்டுப் போகணும்னு இன்னியிலேர்ந்து தீர்மானம் பண்ணியாச்சு. ஊருநாட்டுக்குப் போறத மட்டும் சொன்னாப் போறுமா இல்ல காலேல எந்திரிச்சதிலேர்ந்து ராத்திரி படுக்கப் போற வரச் சொல்லணும்னு நெனக்கிரா? ஏன்னா, முன்னக் கூட்டிச் சொல்லிட்டீர்ன்னு வச்சிக்கிடும், நாங்க அதுக்குத்தக்கன ஏற்பாடு பண்ணிக்கிடுவோம் பாரும்!"

"வாயத் தொறக்க மாட்டம்யா இனி மேலே. இந்தப் பாடுபடுத்துதேளே!"

"சரி டேய், சங்கரன் ஏதாவது மசிஞ்சானா? எங்கண்ணுலயும் பய ஆப்படமாட்டேங்கான்."

"இரியும் அவாளக் கூப்பிடுதேன். அய்யா சுப்பையா வந்தாச்சு. சங்கரனுக்கும் சத்தம் காட்டிட்டு வந்திருக்காராம். இப்பம் அவனும் வந்திருவாம்ன்னு சொல்லுதாரு."

"இரியும்ய்யா, இந்தா வந்திட்டேன். மூதேவிக்கு சத்தம் கொறயுதா, பொண்டாட்டிட்டயும் இப்படித்தான்

பேசுதானா?"

"அய்யா, சங்கரனும் வந்திட்டான்."

"வாரும்வே சங்கரன்பிள்ளை, ஊர்லதான் இருக்கீரா? இல்ல சிங்கப்பூர், மலேஷியான்னு எங்கனயும் தூரா தொலைக்குப் போய்ட்டீரா? கண்ணுல படவேயில்ல!"

"சங்கரா! எப்படில இருக்கே? வியாபாரம்ல்லாம் எப்பிடி இருக்கு?

"ஏதோ ஒங்க ஆசீர்வாதத்துல நல்லா இருக்கு அண்ணாச்சி. நான் ரெண்டு மூணு தடவை வந்தேண்ணாச்சி. தாசு, அய்யா ஊர்லயிருந்து வரல்லேன்னாரு."

"அந்த மனுசனுக்கு வெடியக் காலம் சாப்பிட்டது மறந்து போயி ரெண்டாவது தடவை சாப்பாடு கேட்டு சண்டை போடுவாரே! அவரைப்போயி.."

"கல்யாணச்சாப்பாடு எப்பம்டா போடப் போறே?"

"அது வெஷயமாத்தாண்ணாச்சி ஒங்ககூட கொஞ்சம் தனியா பேசணும்."

"நெறயவே பேசுடே! நான் இருக்கலாமா, இல்லியா?"

ராவன்னா.

"நீங்க அண்ணாச்சிக்கு நிழலுல்லாய்யா. நீங்க இல்லாமலா?"

"எல சுப்பய்யா! நீ உள்ள போயி டி.வி பாரேம்ல. அந்தப் பய என்ன சொல்லுதாம்ன்னு கேப்போம்."

"இல்லேண்ணாச்சி. நான் அப்படிக் காலாற குறுக்குத்துறை ரோட்டிலே நடந்திட்டு வாரேன்."

"அங்கனயும் கூப்பாடு போட்டுக்கிட்டுப் போகாதீரும் எசக்கியம்மன் பயந்துரப் போறா!"

“சங்கரா சொல்லு. எதுக்குடா கல்யாணம் வேண்டாங்க? வேற எவளையாவது புதுசா நெனச்சுக்கிட்ருக்கியா?”

“என்னன்ணாச்சி. சங்கரன உங்களுக்குத் தெரியாதா?”

“யார்ட்டப் போயிய்யா இந்தக் கேள்வியக் கேக்கியோ, அவம்ல்லாம் ஒருத்திய நெனக்க...”ராவன்னா

“அண்ணாச்சி தெரியாமத்தான் கேக்கேன். கல்யாணம் பண்ணாம ஒரு மனுஷன் வாழ முடியாதா?”

“யோவ் நா நெனச்சேன். பய ஏதோ ஆசிரமம் செட்டப் பண்ணப் போறாம்போல இருக்கு.”

“சும்மா இரிங்க ராவன்னா, கல்யாணம் எதுக்குப் பண்ணுதோம்?”

“என்னலே, புள்ளகுட்டி பேரன்னு வம்சம் வெளங்கத்தான்.”

“அதுதான் அண்ணன்மார் மூணுபேருக்கும் கல்யாணம் தான் ஆயிருக்கே. நான் வேற பண்ணிப் பெத்தாத்தானா?”

“அது எத்தனதான் இருந்தாலும் ஒனக்குன்னு ஒண்ணு வேண்டாமாடா? வள்ளுவரே தம் மக்கள் தம் மக்கள்ங்காரு”

“ஆமா ராவன்னா கூடத்தான் மொறப் பொண்ணக் கட்டணும்ன்னு, இருந்த ஒரு வீட்டையும் வித்து, சிறையெடுத்திட்டு வந்து தாலி கட்டினாரு? இப்பம் என்னத்தைக் கண்டுட்டாரு?”

“அய்யா! நானும் பல தடவை ஒங்க கிட்டே சொல்லியிருக்கேன். சின்னப் பயலுவள வச்சுக்கிட்டு நம்ம வெஷயமெல்லாம் பேசாதீங்கன்னு. என்னத்தைக் கண்டாருன்னு கேக்காம் பாருங்க. ஏய்! நாங்க கண்டெதல்லாம் சந்திப்பிள்ளையார் முக்கிலே கூட்டம் போட்டு, கூடிய சீக்கிரம் சொல்லுதோம்டே! நீங்கள்லாம் வந்து

09

வெவரம் தெரிஞ்சிக்கிடுங்க. நீ எதுக்கு கல்யாணம் வேண்டாங்கேன்னா, பதில் சொல்லுவியா... என்னத்தைக் கண்டாராம், எல்லோரும் பேசப் படிச்சிட்டானுவய்யா."

"அண்ணாச்சி! தப்பாச் சொல்லல்லே. ராவன்னா கோபப்படுதாக."

"பொறவு என்னலே, அவுரு ஒத்தவீட்ட வித்ததெல்லாம் சொல்லிக்காண்பிச்சேன்னா?"

"என்ன அண்ணாச்சி! இத்தன வெவரமும் கூடுன நீங்களும் இப்படிப் பேசினா, நான் என்ன பண்ணட்டும்? இப்பம் ஒங்களயே எடுத்துக்குவோம். நீங்க முழு நிம்மதியோட இருக்கேளா?"

"யோவ்! இவன் என்ன நெனச்சுக்கிட்டு இருக்கான்ய்யா? எல! நீ கல்யாணம் பண்ணப் போறியா, இல்லயாடே? பெரிய விண்ணானம்ல்லாம் பண்ணுதாம்பாரு. கொஞ்சம் விட்டா நாயன்மாரு, காந்தி, நேரு, ராஜாஜின்னு பெரிய லைனே போட்டிருவாம் போல இருக்கே!"

"எல! நீ ஏன் கல்யாணம் வேண்டாங்கேன்னு சொல்லு. அம்மை வேற வந்து, ஒங்க மதினிகிட்ட அழுதிட்டுப் போயிருக்கா. வயசு காலத்தில கடைக்குட்டிப் பயலால கெழடு ரெண்டும் கஷ்டப்படுதுன்னு யாரும் சொல்லாமப் பாத்துக்க. அதுக ரெண்டும் நிம்மதியா மண்டயப் போட வேண்டாமாலே?"

"அதுக்காக நா நிம்மதியில்லாம அலயணுமா? பட்டினத்தார், அருணகிரியெல்லாம் என்ன பாடியிருக்காங்க?"

"ஏய் அவங்கள இழுக்காத. அவங்க எல்லாம் பாத்திட்டுத்தான் இப்பிடி, இப்பிடின்னு சொல்லியிருக்காங்க. அது சரிதானான்னு பாரும். அப்புறம் நீரும் பாடும். நாங்க ரெட்டினத்தார்ன்னு ஒம்ம கையிலே ஒரு கரும்பைக் கொடுக்கோம். சரிதானாவே?"

"சரி, சரி, விடுங்க ராவன்னா."

"எல! என்ன காரணம்? எங்கிட்டயும் சொல்லல்லேன்னா விடு. நாளப் பின்ன, எம்மூஞ்சியில முழிக்காத, ஒங்க மாமன், பொண்ண வச்சுக்கிட்டு பத்தமடையிலேர்ந்து நாலுதடவை வந்திட்டுப் போயிட்டான். ஒத்தப் புள்ள வச்சிருக்கான். அதும் ஒனக்குன்னு சொல்லிச் சொல்லி வளத்திருக்கான். வடிவு

கல்யாண வீட்டிலே கூட, பொண்ணு மாப்பிள்ளையோட போட்டோவுக்கு நிக்கும் போது ஒன்னக் கூப்பிட்டேன். நீ அந்தப் புள்ளயையும் கூட்டிட்டுத்தான்ல வந்து நின்ன, ஆறு மாசம் கூட ஆகல்ல. அதுக்குள்ள பட்டினத்தாரு, அருணகிரிநாதர்ன்னு...ராவன்னா! பயட்ட வேற ஏதோ சிக்கல் இருக்கு. கட வச்சிருக்கிற எடத்துலே எவகிட்டயும் சிக்கிட்டானோ என்னவோ? எந்தப் பயலயா நம்ப முடியுது!"

"ஆமய்யா, நேத்துகூட நம்ம பழைய பிரதமரு சிரிச்ச மாரி காட்டுனாங்க. டி.வியிலே. ஒருத்தரயும் நம்ப முடியல்லய்யா!"

"எல! எப்பம் எங்கிட்டயே நீ எதயோ மறைக்கயோ, நான் இனிமே ஒம்மொகத்திலே முழிக்க மாட்டேம்ல்ல. முழிச்சா செருப்பக்கொண்டு அடி. ராவன்னா!... நாயுடுவைக் கார எடுக்கச் சொல்லுங்க;. சிரட்டைப் பிள்ளையார் கோயில் வர போயிட்டு வருவோம். யோவ், தாஸ்!... இவ அண்ணங்காரன் சுப்பய்யா வந்தா, அவரு அய்யா கிட்டயும் அடபடல்ல, இனிமே அய்யா இந்த வெசயத்துல தலயிடமாட்டாங்களாம்ன்னு சொல்லி அனுப்பிச்சிரும்."

"அய்யா! அவன் சின்னப்பய, நாமளே கோபப்பட்டா அவன் எங்க போவான்?.. ராவன்னா.

"நீரு சும்மா இரும்., ராவன்னா. நீருதான் கிண்டல் பண்ணுவீரு ஒங்கசெல்லப்பிள்ளை, செல்லப் பிள்ளைன்னு. இவன் கல்லுளிமங்கனா எப்பம் ஆனான்னே தெரியல்லய்யா..."

"எந்தலையெழுத்துய்யா, எந்தலையெழுத்து"

"ஏய் கிறுக்கு மட்டை! தலையிலே அடிக்காதே, எல, இருக்குறதே கொஞ்சம் மூளை அதுவும் கலங்கிடப் போவுது."

"இனிமேத்தான் கலங்கணுமா?"

"ஏல! இந்த நாடகமெல்லாம் இங்க வேண்டாம். வேற எங்கியாவது நடத்துங்க. ஏங்கிட்டயே பட்டினத்தார், அருணகிரிங்கறீங்க; மொதல்லய இந்த அறிவு இருந்திருக்கணும்ல்ல. இந்த மாரிப்பய சகவாசம் ஒனக்கு எப்பம் வந்ததோ, அன்னேலேருந்து நீ சரியில்லே. வேற ஏதோ சிக்கல் இருக்கு. போங்கலே! எக்கேடும் கெட்டுப் போங்கலே! எனக்கு என்ன? நாளைக்கு அந்த கெழவனும் கெழவியும் வந்து, கண்ணீரும் கம்பலையுமா எம்முன்னாலே நிப்பாங்க; நான் படுதேம்ல. நீங்க வெளங்க மாட்டிய! எல!

பத்தமடைக்காரனும் அந்தப் புள்ளயும் நாண்டுக்கிட்டு நின்னு சாகப்போறாங்க. பேப்பர்ல வரும்டே! போ, போயி அந்தப் புண்ணியத்தக் கட்டிக்கோ. நாயுடு!...நீ ஏம்வே வாய் பாத்துக்கிட்டிருக்கே? வண்டிய வெளிய எடு."

"அண்ணாச்சி, நீங்களே எனக்கு ஒரு பைரோன் பாட்டில வாங்கிக் கொடுங்க. எம் படம் முதல்ல பேப்பர்ல வரட்டும்."

"எல, எந்திரிலே மூதேவி. சொத்து சுகம் இருக்கு. கிளிமாரிப்பிள்ளை இருக்கு.கல்யாணம் பண்ணிக்கிட்டு ராஜா மாரி இருப்பியா? சாகணுமாம்! எல அந்தப் புள்ள எதுவும் சொல்லிச்சாலே?"

"இல்லண்ணாச்சி"

"பொறவு ஏம்ல வேண்டாங்க? அண்ணன்மாரெல்லாம் வேல பாக்கான், நாம அப்பா தொழிலத்தான் பண்ணுதோம். கடைசிவரை ஒடுமான்னு கவலையாலே?"

"இல்லண்ணாச்சி"

"மதினிமார் மத்தியில் அந்தப் பிள்ளைக்கு படிப்புப் பத்தாதுன்னு பாக்கியா?"

"அதுவும் இல்லண்ணாச்சி"

"பொறவு என்னதாம்ன்னு சொல்லி அழுங்கப்பா!" ராவன்னா.

"யோவ் ராவன்னா! அந்தப்பய கல்யாண விஷயம் பேசிக்கிட்டிருக்கோம். நீரு அழு கிழுன்னு சொல்லிக்கிட்டிருக்கீரு."

"ஆமய்யா, அவஞ் சிரிச்சுக்கிட்டு, கல்யாண ஊர்வலம் வரும். உல்லாசமே தரும்' ன்னு பாடிக்கிட்டிருக்கான். நாங்கதான் அழுகை, ஒப்பாரின்னு பேசுதோம்."

"அண்ணாச்சி, ஒங்ககிட்ட கொஞ்சம் தனியாப் பேசணும்."

"யோவ் ராவன்னா! கொஞ்சம் வெளியே இரியும்."

"அப்பத நெழல்ன்னாம். இப்பம் வெளியே போகச் சொல்லுதான்."

"கொஞ்சம் இரியும்ய்யா.. சொல்லுடா!"

"அண்ணாச்சி! எதுக்குக் கல்யாணம் பண்ணுதேளோ,

அதுக்கு நான் லாயக்கில்ல."

"என்னலே சொல்லுதே?"

"ஆமாண்ணாச்சி."

"இவரு பெரிய டாக்டரு பாரு. ஒனக்கு எப்படில தெரியும்?"

"ஒங்க செருப்பைக் கழட்டி என்ன அடிங்க அண்ணாச்சி.. நீங்க சொன்ன மாதிரியே மாரிப்பயகூட ஒரு நா..."

"எங்கல? உள்ளூர்லயா, வெளியூர்லயா?"

"மதுரையில அண்ணாச்சி! அண்ணாச்சி ஒண்ணு, மாரிப்பய அயோக்கியனா இருந்தாலும் எம்மானத்தைக் காப்பாத்திட்டான் அண்ணாச்சி. அவம் மட்டும் என்னயக் கூட்டிட்டு போகல்லணா, எனக்கு இது தெரிஞ்சிருக்குமா. நானும் தோரணையா வெத்திலை பாக்கு மாத்தறது. கொட்டகைக்காலு, பொன்னுருக்கி விடறது.. அப்படி, இப்படின்னு மாலையும், கழுத்துமா நின்னிருப்பேன். அந்தப் புள்ள பொறவு வாழ்நா முழுவதும் மாலை மாலையாக் கண்ணீரை விட்டுட்டு இருந்திருக்கும். நல்ல வேள, கடவுள் காப்பாத்தினாரு."

"அட கிறுக்கா! இதுதானா வெசயம்? முதத் தடவை தானேலே, விடு கழுதை! அதுக்குல்லாம் எவ்வளவு மருந்து மாத்திரை ஊசி வந்தாச்சு. ராவன்னாவைக் கூப்பிடலாமாலே?"

"அவரு கேலி பண்ணுவாரு அண்ணாச்சி."

"அது பாசம்டா, முட்டாப் பயலே! யோவ் ராவன்னா உள்ள வாரும்."

"என்னா நெழலு வரலாம்ன்னுட்டானா?"

"மாரிப்பய கூட எங்கனயோ போயிருக்கான். பயத்துல கையும் காலும் ஒடல்ல போலிருக்கு. அதுக்கு பயந்துகிட்டு, அவரு லாயக்கில்லேன்னு முடிவுக்கு வந்திட்டாராம்."

"ஏய் சூப்பர் டாக்டர் ஒருத்தரு திருவனந்தபுரத்திலே இருக்காருடே. ஒங்க பலசரக்குக்கடை பெரியப்பாவுக்கு வயசு என்னடே? அறுபத்தி அஞ்சு. அவாள் படுக்கை அறையிலேயே அந்த டாக்டர் படம்தான் வச்சிருக்கான்னா பாத்துக்கயேன். நாளைக்கு போயிருவோம். காலையில ரெடியா ஒம்பது

மணிக்குல்லாம் வந்திரு, என்னா?"

"யோவ்! என்ன ஒரு வார்த்தை கேக்காம, நீரு பாட்டுக்குப் பேசிகிட்டிருக்கீரு?"

"நமக்கும் கொஞ்சம் மருந்து மாத்திரை வாங்கிக்கிடலாம்ன்னு தான்...."

"சரி! காலைல வந்திருடே ராத்திரியே திரும்பிரலாம்."

"சுப்பையா வெளியில நிக்கானான்னு பாத்து அவன வரச் சொல்லும்."

"ஏய்! ஒரு பத்து நாள் பொறுத்துகிடச் சொல்லு. பயரெடி... கல்யாணம் பண்ணிரலாம்."

"சரி அண்ணாச்சி! அம்மைட்டயும் அப்பாட்டயும் போயிச்சொல்லிருதேன். கையில ஏதோ வேருதான் வச்சிருக்கியோ அண்ணாச்சி?"

"ஆமடே! அண்டர்வேரு வச்சிருக்கோம். போங்கடே."

"என்ன ராவன்னா! வெறும் வைட்டமின் மாத்திரையும் என்னத்தையோ இஞ்செக்ஷனையும் போடப் போறோம்."

"பய கோயில் காளை மாரி இருக்கான். மனசுக்குள்ளே பயம். அது சரி, கல்யாணத்துக்கு முன்னே ஒரு தடவை டெஸ்ட் பண்ணனும்ன்னான்னா சரி. அத நான் பாத்துக்கிடுதேன்."

"ஆமா, இவரு அதுக்குன்னு காலேஜ்வச்சிருக்கார்ல்லா? வெளங்காத ஆளு!"

"ஏய். சங்கரா! பத்தமடைக்காரிய ஆசுபத்திரில சேத்திருக்குன்னு சொன்னாங்க."

"ஆமா ராவன்னா, இப்பந்தான் போன் வந்தது. ரெட்டைப் புள்ளயாம்!"

"ரெட்டப் புள்ளையா?"

"ஆமா ஆணொண்ணு, பொண்ணொண்ணு"

"அடி சக்கைன்னானாம். அப்பம் அருணகிரிநாதர், பட்டினத்தாருக்குல்லாம் தகவல் சொல்ல வேண்டாமாடே?"

"கிண்டல் பண்ணாதீங்க. ராவன்னா. ரெண்டு

புள்ளைக்கும், ஒங்க பேரும் அண்ணாச்சி பேரும்தான் விடப் போறேன்."

"ஏய்! அண்ணாச்சி பேரு, ஆம்பளப் புள்ளைக்கு விட்டிருவே; பொம்பளப்புள்ளைக்கு என் பேர் எப்படிடே விடுவே? ராவன்னான்னா?"

"இல்ல ராவன்னா! ராமுன்னு விடுவேன்."

"அப்பம் சந்திப்பிள்ளையார் முக்கிலே கூட்டம் போட வேண்டாமே?"

"போங்க ராவன்னா!"

"ஏய்! இந்த வெளயாட்டெல்லாம் ஏன்ட்டே வச்சிகிடாதன்னு ஒனக்கு எத்தனை தடவை சொல்லுதது? வேற எவனாவது ஒன்னய மாரி மெண்டல் கெடைப்பான்; கூட்டிட்டு போ, சினிமாவுக்குக் கூப்புடுத ஆளுக மூஞ்சிகளப் பாருங்களேன்!"

"யோவ், ராவன்னா! சினிமாவுக்குத்தானேய்யா கூப்பிடுதான். அதுக்கு ஏன்யா இவ்வளவு கோபப்படுதீரு? அப்படி என்னதான்யா பண்ணிட்டான்?"

"என்னத்தைப் பண்ணிட்டானா? அன்னிக்கு, தங்கப்பதக்கம் படம் போட்டிருக்கான்; 'போவோமா ராவன்னா' ன்னான். 'சரிடே! போலாம்'ன்னேன். கூடப் போனா, சினிமா கொட்டகைல நான் லோல் பட்டிருக்கேன் பாருங்க...இந்த ஜென்மத்துக்கு போதும்யா!"

"யோவ், ஒமக்கு எப்படிய்யா சிவாஜி புடிக்கும்? நீரு வாத்தியார் ஆளு. அங்ஙன எதாவது வெவகாரம் பண்ணியிருப்பீரு."

"பொழுதன்னிக்கும் என்னயவே சந்தேகப்படுங்க. நான் வாத்தியார் ஆளுதாம். அதுக்காக, 'சிவாசி சினிமா பார்க்க மாட்டேம்'னு சொல்லியிருக்கேனா? ஒங்க கூடவே எத்தன தடவ வந்திருக்கேன். இந்த லூஸுப்பய கூட போனது தப்புன்னா, விட வேண்டியது தானே, ஒடனே 'வாத்தியாரு' சிவாசிங்கேளே"

"அப்படி என்னத்தத்தாம் பண்ணிட்டான். சொல்லித் தொலயுமே?"

"அப்பிடி கேப்பேளா.. அய்யா, சிவாசி,. போலீஸ் ஆபிசரா வாராரில்ல? ஒவ்வொரு கட்டத்திலயும் ஆ!..ங்கான்.. ஊ..ங்கான்."

"பாத்தீருல்லா ஆரம்பிச்சுட்டீரே! அவன் சிவாசியை ரசிச்சா ஒமக்கு பொறுக்காதே."

10

“கொஞ்சம் முழுசும் தான் சொல்ல விடுங்களேன். நானுந்தான் ரசிச்சேன். இவன மாரியா? சினிமா கொட்டகைல, எல்லாரும் எங்களயே பாக்கானுவ, அவ்வளவு ஆர்ப்பாட்டம்யா! மூதேவி, பக்கத்திலே ஆட்கள் சினிமா பாக்காங்களே, அவங்களுக்கு இடைஞ்சலா இருக்காதான்னு நெனைக்காம, கொஞ்சம் கூட வெவஸ்தையில்லாம இவம் போடுத சத்தம்...”

“சரி,. கொட்டைகைல யாராவது, ‘என்னவே இப்படி சத்தம் போடுதய, நாங்க படம் பாக்க வேண்டாமா’ன்னு சத்தம் போட்டாங்களா?”

“அது ஏம் போடுதான், இவனயும் என்னயும் வேடிக்கை பாக்க ஆரம்பிச்சிட்டானுவ. நானும் சொல்லிச் சொல்லிப் பாக்கேன். கேக்கானா? அது கூடப் பெரிசில்லைய்யா. என்னய வேற, படத்தை முழுசா பாக்க விடாம பாதியிலய இழுத்திட்டு வந்திட்டான்ய்யா!”

“நெசம்மாவா, ராவன்னா?”

“ஆமய்யா. அதிலே, சிவாசி வீட்டுக்காரியா கே.ஆர்.விஜயா நடிக்கில்லா? அந்தம்மா செத்துப் போற சீன்ல வீட்டுக்குள்ள வந்து சிவாசி போலீஸ் பனியனோட மச்சுப் படியேறிப் போம்போதே, இவன் ஒரு மாரி ஆயிட்டான். அவரு மேலே போயி அந்தம்மா கட்டிலுக்கிட்ட நின்னுகிட்டு, ‘என்னாலே தாங்க முடியலியே, அம்மா!ன்னு குலுங்கி அழுதுகிட்டே வி.கே.ஆர். மேல சாஞ்சாருல்லா. இவன் எந்திரிச்சு, ஏங்கையைப் பிடிச்சு கொட்டகையை விட்டு வெளியே இழுக்கான்யா! ‘ஏலே என்ன கோட்டிக்காரத்தனம் பண்ணுதே. கொறப்படத்தையும் பாக்க வேண்டாமாங்கேன்; இந்த ஒரு எடத்துக்கே குடுத்த துட்டு செத்தது; இனிமே., வேற துட்டுக் கொடுத்து நாளைக்குத்தான் பாக்கணும்’ன்னு கையை பிடிச்சு தரதரன்னு இழுத்திட்டு வந்துட்டாம்யா! அன்னிக்கு ஒரு நா அசிங்கப்பட்டது போதாதா? இன்னிக்கும் போயி சீரழிஞ்சு செங்கச்சுமக்கணுமா?”

“அந்தப் பய ரசனையே அப்படித்தான்ய்யா. நீரு ஒருத்தரு! அவனை புரிஞ்சிக்கிட்ட லெச்சணம் இதுதாம்போல?”

“என்ன தாலி ரசனையோ? ஆனா, இப்பிடி மென்டல் பயலுவளயா சேத்து வச்சிக்கிட்டிருக்கேளே, நீங்க எப்பிடி ஆளு?”

"நைஸா என்னை மெண்டல்ங்கேரே."

"இல்லையா, இவனுவளயும் ரசிச்சிட்டிருக்கேளே. எனக்கு அதிசயமா இருக்கு. திருக்குறளு. சிலப்பதிகாரம், அது இதுன்னு தண்டிதண்டியா என்னத்தெல்லாமோ படிக்கியோ; இந்த மாரி லூஸுப்பயலுவளயும் கட்டிக்கிட்டு மாரடிக்கியோ."

"பெரிய பெரிய சித்தர்கள்ளாமே, லூஸு மாரித்தான் இருப்பாங்கன்னு அண்ணாச்சி எப்பவோ சொன்னாவளே, மறந்திட்டுதா ராவன்னா?"

"சரிடே! நீங்க சித்தருதான். நம்ம மாரி குரங்குப் பயலுவளோட சகவாசம் ஒமக்கு வேண்டாம்."

"விடும்ய்யா! எல! நீயும் அவரு சொல்லுத மாரியே லூஸுப் பயதான்டேய், அவரப் போயி சினிமாவுக்குப் கூப்பிடுதியே!"

"யோவ், ராவன்னா நாம எல்லாம் திருச்செந்தூருக்குப் புறப்பட்டிட்டிருக்கும்போது, ஒம்ம கொழுந்தியாளுக்கு புள்ள பொறந்திருக்குன்னு கடயநல்லூர்லேருந்து போன் வந்த ஒடனே, நீரு வரமுடியாம பொறப்பட்டு போனீர்ல்லாயா?"

"ஆமா நானும் என் வீட்டுக்காரியும் போனோம்."

"போனேர்ல்லா, நீரு வரல்லேன்னதும் கார்ல ஒரு இடம் காலியா இருக்கேன்னு நெனச்சிட்டிருக்கும்போது, இந்தப் பய வந்தான்.'எல! வண்டில ஏறு திருச்செந்தூர் வர போயிட்டு வந்திருவோம்'ன்னு கூட்டிட்டு போனேன். அங்கன போயி, செந்திலாண்டவன் விடுதியிலே ரூம் போட்டு வெச்சிருந்தாங்களா; கொஞ்ச நேரம் சாய்வோம்ன்னு சாஞ்சேனா; கண்ணசந்திட்டேன். திடீர்னு இந்தப்பய வந்து அண்ணாச்சி எந்திரிங்க, எந்திரிங்கன்னு எழுப்புதாம்.

அப்பந்தாம் நான் கண்ணசந்ததே தெரியும். 'எல! தூங்குதவங்கள எழுப்பாதீங்கன்னு எத்தன தடவெ சொல்லியிருக்கேன். கடேசில என்னயே வந்து எழுப்புதீயே'ன்னு கேக்கேன். 'ஒடனே தயாராகுங்க. கோயிலுக்கு போயிருவோம்'ங்கான். 'எல! சாஸ்திரி வரட்டும். பொறு'ன்னா, இப்பவே கோயிலுக்கு போயிருவோம்'ங்கான். திரும்பவும் 'எலே! சாஸ்திரி வரட்டும்;ங்கேன், விட மாட்டேங்கான்.

என்னல! ஊருக்கு கிருக்கு சீக்கிரம் போகணுமாலே? கார்ல ஏறச் சொல்லியிருக்கும்போதே சொல்லியிருக்கலாம்ல்லான்னேன். அதெல்லாம் ஒண்ணும் இல்லேண்ணாச்சி! நாஞ்சொல்லுறதக் கேளுங்க. இப்பம் போனாத்தான். சாமிய உறுதியாப் பாக்க முடியும்; பொறவுன்னா, உறுதி சொல்ல முடியாது'ங்கான். 'பொறவு வந்து எங்க முருகரக் காணோம்னு வருத்தப்படக்கூடாது'ங்கான்.

"சாமி ஏம்ல காணாமப் போப்போறாருன்னா, அவம் பதில் சொன்னாம்பாரும், 'அண்ணாச்சி நேத்திக்கு கே.பி.சுந்தராம்பாள் கச்சேரி நடந்திருக்கு. இப்பம் அந்தம்மா, சாமி கும்பிட்டுட்டு ஊருக்குப் போகப் போறாங்களாம்'ன்னான். அதுக்கும் நாம சாமி கும்பிடப் போறதுக்கும் என்னல பிரச்சினைன்னேன். அங்கதான் பிரச்சினையே அண்ணாச்சி! நாஞ்சொல்லுததக் கேளுங்க. அவங்களுக்கு முன்னாடியே போய்ட்டு வந்திருவோம்'ங்கான்.

எல! ஒனக்கு அந்தம்மாவைப் பாக்கணும்னு நெனப்பிருந்தா, நீ முன்னப் போ. நாங்க சாஸ்திரி வந்தவுடனே வாரோம்'ங்கேன். என்ன அண்ணாச்சி! இவ்வளவு வெவரமான ஆளு. நீங்க போயி இப்படிச் சொல்லுதேளே! அந்தம்மா முருகன் முன்னாலே போயி நின்னு ஒரு பாட்டுப் பாடிட்டு, முருகா வேலவான்னு வாய் நிறைய கூப்பிட்டுதுன்னு வைங்க; நீங்களுமாச்சு, ஒங்க கோயிலுமாச்சுன்னு வேலத் தூக்கி எறிஞ்சிட்டு, முருகன் அந்தம்மா பின்னாலே போப்போறான். நாம போம்போது அவரு அங்கன இருக்க மாட்டாரேன்னு சொன்னா, என்னய வெரட்டுதேளேங்கான். எப்படிப்பய பார்த்தீரா?

நெஞ்சில் ஒரு ஆலயம் தச்சநல்லூரில் ஓடுது. ரொம்ப நல்ல படம்னு சொன்னேளே. நாம் பாக்க வேண்டாமான்னான். சரிடே போலாம்ன்னு கூட்டிட்டுப் போனேன். படம்விடும்போது பார்த்தா, இந்தப் பயலக் காணோம். போற மூதேவி, சொல்லிட்டுப் போயித் தொலைஞ்சா என்னன்னு பார்த்தா, அப்புறம் நாலு நாளா ஆளயே காணோம்! நாந்தாம் தாஸைப் போயி அவனப் பாத்திட்டு வரச்சொன்னேன். வந்த பய கேக்காம். அண்ணாச்சி ஒங்களாலே எப்படி முழுப்படத்தையும் பாக்க முடிஞ்சிதுங்கான்.

என்னலேண்ணா சொல்லுதான்

"சொன்னது நீதானான்னு அவ பாடினவுடனே என்னாலே தாங்கமுடியல்ல அண்ணாச்சி;அதாம் வீட்டுக்கு வந்திட்டேன். அதானே ‚அந்த காலத்துப் படம்;அந்த காலத்துப் படம்னு ராவன்னா ரொம்பப் பீத்துதாரேன்னு பாத்தேன். 'இந்த ஸ்ரீதரு சண்டாளன், என்னமா படம் எடுத்திருக்காம் பாத்தேளோ! கண்ணதாசனும், விஸ்வநாதனும் நீங்க அடிக்கடி சொல்லுவேளே அண்ணாச்சி 'அதுக்குன்னே பொறந்திருக்கானுவ!' தமிழனாப் பொறந்ததுக்கு பெருமைப்படுதேம்னு பாரதியாரு சொன்னாரும்பேளே! அது எம்புட்டுச்சரி அண்ணாச்சி"

"சரிடே, கல்யாண ஏற்பாடெல்லாம் எப்பிடி நடந்திட்டிருக்கு?"

"கல்யாணமா? ராவன்னா! சரியான ஆளுதாம்ய்யா நீரும் ஒமக்கு தெரிஞ்சிருக்கு. ஏங்கிட்டச் சொல்லவேயில்லைய. ஏம்ய்யா?"

"பொண்ணு திருவனந்தபுரம். அநேகமா முடிஞ்சிருக்கும்னு நினைக்கேன். அப்பிடித்தானடே?"

"களவாணிப் பயலே! மலயாளத்து மாப்பிள்ளையாப் போறோம்னு அகமாடே?"

"அண்ணாச்சி! நீங்க இல்லாம ஏதாவது எங்களுக்கு நடக்கப் போகுதா? அம்மை நெலயா நிக்கா! அப்பாவுக்கு தங்கச்சி பொண்ணு"

"மரக்கடைக்காரர் பொண்ணாடே?"

"ஆமண்ணாச்சி"

"என்ன ராவன்னா! உறுதி பண்ணின வீட்டுக்கு போயிட்டு வந்தேளே ஏதும் விசேடம்? உண்டா?

"கட்ட அம்பிப்பய வெளயாட்டுத்தான் ரொம்ப"

"என்னா?"

"என்னமோ அய்யரு அய்யருங்கேளே! எங்க பாரதியார் எப்படிச் சொல்லியிருக்காரு பாத்தேளா; சேர நன்னாட்டிளம் பெண்களுடனேன்னு..எப்பிடி? பாத்தேளா ராவன்னாங்கான்

திருவனந்தபுரத்திலே வச்சு. அவாளுக்கு கல்யாணம்னு ஒண்ணு நடந்தா, அங்கதாம் பொண்ணு எடுப்பானாம்"

"அடி செருப்பாலே மூதேவி! கல்யாணம் எங்கலே வச்சிருக்காங்க?"

"அது நம்ம ஊர்ல தான்."

"என்ன தூங்கிட்டேளா?"

"ஆமா ராவன்னா! கொஞ்சம் அசந்துட்டேன். என்ன விஷயம்?"

"என்னவா? இவம் பண்ண கூத்தக் கேட்டேளா! வரவேற்புக்கு, கோட்சூட்டெல்லாம் போட்டு, மாலயும் கழுத்துமா உக்காத்தி வச்சிருக்கு. நம்ம பெரியசாமிக்கம்பன் நாதசுரம் ஊதிக்கிட்டிருக்கான். திடீர்னு எந்திரிச்சிப் போயி பெரியசாமியைக் கட்டிப்பிடிச்சிட்டு அவம் கன்னத்திலே முத்தம் கொடுத்திட்டி ருக்கான். இதுல்லாய்யா கல்யாணி, இதுல்லாயா கல்யாணிங்கான். ரெண்டு பேருக்கும் மத்தில நாதசுரம் வேற மாட்டிக்கிட்டு, பொறவு நானும் கட்டயனுந்தான் போயி, இவனக் கொண்டு வந்து ஒக்கார வச்சோம். அந்தப்புள்ளைக்கும் நல்ல சங்கீதம் தெரியுமாம்! இல்லேன்னா, இவங் கல்யாணி, கல்யாணிங்க சங்கடம்தாம் போங்க!"

"அந்தப்புள்ள ஒண்ணும் தப்பா நெனக்காது. சங்கீதம் தெரிஞ்ச புள்ளன்னு வேற சொல்லுதாங்களா, அது என்ன நெனக்கும்?"

"நாதஸ்வரக்காரரையே இப்பிடிப் பிடிச்சு கொஞ்சுதாங்களே! நாம பாட்டுப் பாடினாப் போதும்னு நெஞ்சுக்குள்ள நெனச்சிருக்கும்."

"அது நெனக்கத விடுங்க. நாம்ல்லா இப்ப பயந்துக்கிட்டுக் கெடக்கேன்"

"என்ன ராவன்னா! ஒமக்கென்ன பயம்?"

"இல்லய்யா! இன்னிக்கு இந்த ரசிகமணி. ராத்திரில ஆ...ஊன்னு ரசனை அதிகமாயி எந்திரிச்சு, ஒங்களத்தேடி வெபரம் சொல்ல வந்திரக்கூடாதேன்னுதாம்"

"ஒம்ம குசும்பு இருக்கே..."

“வாரும்வே”

“கிட்டுப்பிள்ளை. கூப்பிட்டு விட்டாத்தான் வருவீரு போல?”

“என்ன அண்ணாச்சி, இப்பிடியெல்லாம் பேசுதீய. நேத்து ராவன்னா வந்து சொன்னாக. இந்த மாரி வெஷயம். அண்ணாச்சி ஒங்கள வரச் சொன்னா, நாளைக்கு காலேல வீட்டுக்கு போயிருங்கன்னாரு..”

“அவர் எங்கவே”

“ராவன்னாவா அண்ணாச்சி? அவாள் காலேல மொத பஸ்ஸுக்கு சேர்மாதேவி வர போயிட்டு வந்திருதேன். கரெக்டா ஒம்பது மணிக்கு பெரிய வீட்டுக்கு வந்திருதேன், நீங்க ஒம்பதுக்கு வந்திருங்கன்னு சொன்னா”

“அப்படியா சமாச்சாரம்? என்ன சேர்மாதேவி, எங்கிட்ட கூட சொல்லாமே.”

“அவாள், சகலை விஷயமா போறோம். அவாள்ட்ட கூட சொல்லலேன்னாரு. வந்து வெவரம் சொல்லணும்னு சொன்னாரு”

“அப்படின்னா வந்திருவாரு. நீரு கொஞ்சம் இரியும். ஒரு ஃபோன் பண்ணிட்டு வந்திருதேன்.”

“என்ன கிட்டுப்பிள்ளை? டாண்ணு ஒம்பதுக்கு ஆஜராயிட்டீய போலிருக்கு. நானும் கரெக்டா வந்திருப்பேன். பேட்டை பள்ளிவாசல் கிட்ட பஸ் பிரேக்டவுண் ஆயிட்டுது. அதாம் இறங்கி நடந்தே வாரேன்.”

“யோவ்! என்ன எனக்கு கூட சொல்லாம சேர்மா தேவிக்கு, சகலயும் சகலயும் சேர்ந்து என்ன விசேஷம்?”

"ஒண்ணுமில்லயா? பத்து நாளா நம்ம சகலை வேலைக்குப் போகல்லே நடுச்சாமத்துல எந்திருச்சு ஒக்காந்துகிட்டு ஆ...ஊ..ன்னு சத்தம் போட்டு எல்லாத்தையும் பயங்காட்டிக்கிட்டு இருந்திருக்காம். எங்கொழுந்தியாக்காரியும், எங்க வீட்டுக்காரியும் காத்து கறுப்பு பிடிச்சிருக்குன்னுட்டு அழுதாளுவ. அதான் சேர்மாதேவில எங்க மச்சினன் ஒருத்தன் பூசாரியா இருக்கான்;அங்க கூட்டிட்டு போயி பேய விரட்டிட்டு வாரேன்."

"பேய் போயிடுத்தா?"

"ஆமா! சும்மாவா நான் இல்ல கூடப் போயிருக்கேன். ஓடிராது பேய்? பேயாவது ஒண்ணாவது! இவம் வேலைக்குப் போக சோம்பப் பட்டுக்கிட்டு, பொம்பளப் புள்ளகள மெரட்டிக்கிட்டிருந்திருக்கான். எனக்கு வெவரம் புரிஞ்சு போச்சு. அதாம் அங்கனே போனவுடனே பூசாரிகிட்ட வெவரத்தைச் சொல்லி அவனும் பிரம்பால விட்டாம் பாருங்க நாலஞ்சு அடி! பேய் போயே போயிட்டுது! இனிமே ஜென்மத்துக்கும் பேய் வராது. அதாம் அவனக் கொண்டு வீட்டிலேயே விட்டுட்டு வாரேன். எங்கொழுந்தியா, பேய் என்ன ஆணா? பெண்ணா? எந்த ஊருன்னு வெவரம்ல்லாம் கேட்டா, சொல்லிப்புட்டு வாரேன்.

"சீக்கிரம் வந்திட்டீரு?"

"காலேல மொத பஸ்ஸுக்கு போய்ட்டேம்ல்லா. பஸ்ஸிலே நடந்த கூத்தைக் கேட்டேளா, நம்ம விசு தான் டிரைவர். அவனுக்குப் பக்கத்தில இருக்கிற முன்சீட்டில, வந்த ஒரு ஆளு உக்காந்து தூங்க ஆரம்பிச்சாம். இவம் எப்படி ஆளு? அவன எழுப்பி அண்ணாச்சி, எனக்கு ஒரு உதவி செய்யணுமேங்கான். அவன் என்னாங்கான். இவம் சொல்லுதாம் பஸ் பேட்டையைத் தாண்டின ஒடனே, எனக்கு தூக்கம் வந்திரும் அண்ணாச்சி! அதப் பத்தி ஒண்ணும் இல்ல, ஆனா, நீங்க சேர்மாதேவி விலக்கு வரும்போது மட்டும் எழுப்பி விட்ரணும்னான். அப்பம் சுத்தமல்லிலேருந்து சேர்மாதேவி விலக்குவரைங்கான் அந்த ஆளு. அதிலெல்லாம் வண்டி தானாப் போயிரும், சர்வீசாயிடுச்சில்லங்கான். அவ்வளவு தான். அவன் ஏன் தூங்குதாம்? விறுவிறுன்னு, பின் சீட்ல வந்து உட்காந்துகிட்டாம். சுத்தமல்லி விலக்கு வருது எந்திரிச்சுப் பாக்காம். சேர்மாதேவி விலக்கில வண்டி திரும்புச்சோ இல்லியோ அந்த ஸ்டாப்பிலய சொல்லாம கொள்ளாம எறங்கி ஓடிட்டாம்."

"விசு எப்படி ஆளு?"

"அது சரி, கிட்டுப் பிள்ளைய ஏன் வரச் சொன்னீய?"

"அதா, இவரு அண்ணங்காரங்க ரெண்டுபேரும், நேத்து என்னய பாக்க வந்திருக்கானுவ, அவனுவள நான் பாத்ததேயில்ல. நான் தென்காசிக்கு போயிருந்தேன். அதாம் என்ன விஷயமா இருக்கும்னு தெரிஞ்சுக்கிடத்தாம் இவரை கூப்பிட்டுவிட்டேன்"

"என்னன்னு தெரியலியே அண்ணாச்சி!"

"என்ன கொற சொல்ல வந்திருப்பானுவ. அவனுகள திருத்தவே முடியாதுய்யா. இத்தனைக்கும் பொறவும், இவரு வாயத் தொறக்காரா பாத்தீங்களா. அதாம்ய்யா கிட்டுப்பிள்ளை."

"என்ன ராவன்னா, என்ன விஷயம்?"

"அவனுகளுக்கு இதே பழக்கம்ய்யா. இவருக்கு எங்கெல்லாம் பழக்கம் இருக்கோ, அங்கெல்லாம் போயிருவானுவ. ஆனா இவரோ அவங்க யார்ட்ட பழக்கம் வச்சிருக்காங்களோ, அவங்கள கண்டாக் கூட பேச மாட்டாரு."

"ஆமாங்கண்ணாச்சி, நம்ம அவங்க கிட்ட அன்பாய் பேசினாலும், வீணா ஏதும் வெவகாரம் வந்திரக்கூடாதேன்னு தான், அவங்களுக்கு வேண்டியவங்க யாரக் கண்டாலும் பேச மாட்டேன்."

"அதுதாம்வே சரி! வெட்டித்தனமா பேச்சைக் குடுத்திட்டு வெவகாரத்த இழுப்பானே. இப்பம் எதுக்கு வந்திருப்பானுவ?

"வேற ஒண்ணுமில்லய்யா, ஊர்ல, நாட்ல யாரும் நல்லா இருக்கக்கூடாது. அது மட்டுமல்லயா. எல்லாரும் விழுந்து கும்பிடனும்பானுவ. ரெண்டாவது, அவனுக இவரு ஜாதகத்தைப் பாத்திட்டு இவரு ஒழிஞ்சாரு. இவரு உருப்பட மாட்டாருன்னு ஒவ்வொருத்தர்ட்டேயும் சொல்லிக்கிட்டு இருப்பானுவ."

"இப்பிடிக்கூட அண்ணன்தம்பி இருப்பானுவளாய்யா? அவனுக விஷயத்தையெல்லாம் சொன்னேன்னா, வீட்டுப் படி ஏத்த மாட்டீய, இவர் ஒன்னுமே சொன்னதில்லையா அய்யா?"

“யோவ், கிட்டுப் பிள்ள! இனிமேலும் மூடி, மூடி, வச்சு என்னய்யா பிரயோசனம்? அவனுகளுக்குன்னு இந்த ஊர்ல ஒரு ஃபிரண்டு உண்டாய்யா? இவாள் ஃபிரெண்டாப் போயித்தாம் அவனுவ பிடிச்சிக்கிடுவானுவ”

“அது என்னய்யா கதை?”

“இவாள், காலேஜில மொத வருஷம் ஃபெயிலாயிட்டாளா. அப்பம். நம்ம கள்ளுக்கடைப் பிள்ள பேரன் பழக்கம் இவாளுக்கு கெடச்சிருக்கு. அவம் தங்கமான புள்ளய்யா! அவன் கூட சேர்ந்து பாளையங்கோட்டையில படிக்கேன்னு இவாள் அப்பாகிட்ட கேட்ட போது இவ அண்ணங்காரனுவதான் இப்ப கள்ளுக்கடைப் பிள்ளை பேரன் கூட சேந்திருக்கான்னு படிக்க விடாமக் கெடுத்தது. ஆனா, இப்பம் நெலமை என்ன தெரியுமா? கள்ளுக் கடைப்பிள்ளை வீட்டிலே இவாள் அண்ணங்காரங்கதாம் வழங்குதானுவ. அதனாலேயே இவாள் அந்த வீட்டுக்குப் போறதில்லை. அந்த அம்மா என்னப் பாக்கும் போதெல்லாம், கிட்டைக் கொஞ்சம் வரச்சொல்லேம்பாங்க. இவாள்ட்ட சொன்னா, யோவ்! அவங்க அங்கன போயிட்டிருக்காங்க, ஏதும் பிரச்சினை வந்திரக்கூடாதும்பாரு. அந்த அம்மாவுக்கு அவ்வளவு பிரியம் இவாள் மேல. அதக் கூட சொல்லி, அங்கனயும் போக விடாமப் பண்ணு தானுவளேன்னு வருத்தப்படுவாளேயொழிய, போகமாட்டாரு.”

“இது என்னய்யா? நீரு சொல்லுறதெல்லாம் புது மாதிரியாவே இருக்கு!”

“இன்னும் கேளுங்கய்யா! இவாள் பெரியண்ணன் இருக்காரே.. நம்ம கூட்டாளின்னா சகிச்சிக்கிடவே மாட்டோம். அவ்வளவு அசிங்க மான ஆளுய்யா அவரு. இவாள் அப்பா மாதிரியே நல்ல கலரு! நல்ல கலரா இருக்கிற பிள்ளையைப் பாத்து, அப்பா அம்மா சொல்லியும் கேக்காம கல்யாணம் பண்ணிக்கிட்டாரு. ஆச்சியும், அய்யரும் சிகப்புன்னா புள்ளைக எப்படிப் பொறக்கும்? சிகப்பாதானே? இவாள் சின்ன அண்ணன் அக்காமாரெல்லாம் கறுப்பு. கல்யாணம் ஆன மாப்பிள்ளமாரும், பொது நிறம் அதுகளுக்கு புள்ள பொறந்து, தொட்டில்ல போட்டிருந்தாங்கன்னு வையிங்களேன். புள்ள பெத்தபுள்ள, பக்கத்திலே படுத்திருக்கும். இவரு தொட்டில போயி திறந்து பாத்துக்கிட்டு, ஏ கருப்பாயி! ஏ கருப்பாயின்னு கூப்பிடுததோட மட்டுமில்ல;கொழந்தை நல்ல கறுப்புன்னு

பெத்தவகிட்டேய சொல்லுவாரு. இவ அக்காக்காரி, நான் போம்போதெல்லாம் சொல்லி சொல்லி அழும். இவனும், இவன் பொண்டாட்டியும் சிகப்பா இருந்தா, அதுக்கு அடுத்தவங்க புள்ளகள ஏன் இவம் இப்படிக் கேலி பண்ணுதான்னு”

“யோவ் ராவன்னா! நீரு சொல்றதப் பாத்தா, அவனுக்கு ஏதும் மனநோயி இருக்குமோன்னு சந்தேகமா இருக்கு.”

“கிட்டுப் பிள்ளை பையனுக்கு நல்ல தாள ஞானம். பெஞ்சிலே ஒரு நா தாளம் போட்டுக்கிட்டிருக்கான். இவாள் அண்ணங்காரரு உள்ள இருந்து, அங்க யாருடா லொட்டு லொட்டுன்னு தாளம் போடுறபய. நிறுத்துடான்னு சத்தம் போடுதாரு. புள்ள தேம்பி தேம்பி அழ ஆரம்பிச்சிட்டான்.”

“தம்பி புள்ளைய சத்தம் போடக்கூடாதுங்கேரா?”

“அது இல்லய்யா! சத்தம் போட்டுட்டு அரை மணி நேரம் கூட ஆகியிருக்காது. தம் பிள்ளையைக் கூப்பிட்டு, ‘சோமு! ரண்டக்குரக்குன அடி’ங்கது. அந்த பயலும் ‘ரண்டக்கு ரக்குன, ரண்டக்கு ரக்குன’ ன்னு கொட்டடிப்பான். ‘ஓம்புள்ளய கொட்டடிக்கச் சொல்லுதியே, அவம் புள்ள என்ன கொறஞ்சவனா’ன்னு இவங்க அக்கா சொல்லி வருத்தப்படும்.”

“பிள்ளைகள்ள பேதம் பாக்கவன் எப்படிய்யா பெரிய மனுஷனாக முடியும்?”

“அந்தாளுக்கு வேண்டிய பையன் ஒருத்தன் யாரோ சந்திரனாம். அவன் ஜோசியம் பாக்கறேன்னு, யார் யாருக்கு கேடு வரும், எப்ப சாவாங்கன்னு சொல்லிக்கிட்டு அலையறது! கிட்டுப் பிள்ளை குடிப்பாராய்யா?”

“யாருய்யா சொன்னான்? அவனச் செருப்பாலடிக்க வேண்டாம்?”

“அது இவாள் சின்ன அண்ணங்காரன். அந்த ஜோசியம் பார்க்கர பய, ‘பஸ் ஸ்டாண்டில பாத்தேன். ஒங்க தம்பி நெல கொள்ளாமக் குடிச்சிட்டு நின்னுக்கிட்டிருந்தாரு’ன்னு சொன்னானாம்.”

“யோவ்! நீரு சொல்லுறதப் பாத்தா. ‘அவனுவள இனிமே நடையேத்தக் கூடாது”ன்னு தாஸ் கிட்டச் சொல்லி வச்சிரணும் போல இருக்கே! ஆனா, இத்தன தூரம் இந்த கல்லுளி மங்கன்

கிட்ட பழகுதோமே, ஒரு நாளாவது தன் அண்ணன்மாரைப் பத்தி ஒரு வார்த்தை சொல்லியிருப்பானாய்யா?"

"பொறகு அவனுகளுக்கும் எனக்கும் என்ன அண்ணாச்சி வித்தியாசம்?"

"அதுக்காக இப்படியாடே இருப்பானுவ? அவனுகளப் பத்தி கொஞ்சமாவது சொல்லி வச்சாத்தான்வே, எனக்குத் தெரியும்.. இங்கன வர வந்ததுக்கு அப்புறம் தானே நீரு சொல்லுதீரு? சரி. இப்பம் எதுக்குடே வந்திருப்பானுவ?"

"அம்மை மண்டையப் போட்ட வீட்டுக்குள்ளே கொஞ்சம் பிரச்சினையாயிடுத்து. கொஞ்சம் சத்தம் போட்டிட்டேன். அதாம் வந்திருப்பானுகன்னு நெனக்கேன்."

"நானுந்தான் வந்திருந்தேன். அப்பம் ஒண்ணும் இல்லியேடே."

"ராவன்னாவுக்கு தெரியாதாடே?"

"பேரும் புகழுமா இருக்கேன்ல்லா? அம்மை செத்த வீட்டுக்குள்ள, நெறயக் கூட்டம்..."

"அது என்னடே அப்படிச் சொல்லிட்ட? எத்தனை பேரு! ஓம் பழக்க வழக்கம் எப்படி! நானே அங்கன வந்து காத்துக் கெடந்தேன்னா, எதுக்கு?"

"அந்த வீட்டுக்குள்ள துக்கம் கேட்க வந்த பொம்பளைக ஒவ்வொருத்தர்கிட்டயும் போயி, 'நீங்க யாரு?....நீங்க யாரு?...ஒங்களையெல்லாம் பாத்ததே கெடையாதே' ஒருத்தி விடாமக் கேட்டிருக்கான். அதோட நிறுத்தலே! 'நான் யார் தெரியுமா'ன்னு ஒவ்வொரு பொம்பளையாளுகிட்டயும் கேட்டிருக்கான். அதச் சொல்லி நம்ம ஜவளிக்கடைக் கொழுந்தியா ரொம்ப வருத்தப்பட்டுச்சு. 'இவாள் என்ன ரஜினியா? பாத்த ஒடனே தெரிஞ்சிக்கிட'ன்னு..."

"அவ பெரிய வாயாடியாச்சே! எப்படி விட்டா?"

"அவளே சொன்னா அண்ணாச்சி, ஒங்க மூஞ்சிக்காத்தாம் விட்டோம். இல்லேன்னா, நல்ல கேட்டு விட்டிருப்போம். கல்யாண வீடாவே? இப்படி ஒவ்வொருத்தர்ட்டேயும் வந்து கேக்காளே. என்ன ஆளுன்னு."

"அதான் அண்ணாச்சி அத்தனை நாள் பொறுத்திருந்த நான், கொஞ்சம் சண்டை போட்டேன். இங்கன பெரிய ஆளு

நீங்க. ஒங்க கூடயே நான் இருப்பேன்ன ஒடனே, இங்க வந்திருக்கானுவ."

"யோவ் ராவன்னா இப்பிடில்லாம் மனுஷனுக இருக்கவா செய்யுதானுக?"

"சரியாப் போச்சு போங்க! இதவிட மோசமால்லாம் இருக்கானுவ."

"கிட்டுப்பிள்ளை! நீரு யார் கிட்டயும் போயி மூச்சு விட்டிராதேயும். அப்பந்தாம் இங்க வருவானுக. நாக்கை புடுங்கிக்கிற மாரி அவனுவள நாலு கேள்வி கேட்கலாம், என்னா?"

"சரி அண்ணாச்சி ஒங்களுக்கு எது சரின்னு படுதோ, அதச் செய்யுங்க."

"ஏழு ஸ்வரங்களுக்குள் எத்தனை ராகம் வந்திருக்காரு, பாஸ்."

"ஏலே கட்டப்பயலே! ஒன்னய எத்தனை தடவெ செருப்பால அடிச்சாலும் ஒனக்கு புத்தி வராதாலே? என்னலே பாஸ்..."

"இல்ல அண்ணாச்சி, நம்ம சங்கீத சார்வாள் வந்திருக்கா, அவாள் மகளும் கூட வந்திருக்காங்க."

"எல, எங்க இருக்காங்க? ஒக்காரச் சொன்னியாலே?"

"ஆமண்ணாச்சி முன் ரூம்ல ஒக்கார வச்சிருக்கேன்."

"என்ன வெஷயமாம்?"

"அவாள் ஏங்கிட்டச் சொல்வாளா?"

"சரி..சரி. ராவன்னா கல்யாண மண்டபத்தில் இருப்பாரு, நீ போயி கூட்டியா. எல! அவங்களுக்கு காப்பி, கீப்பி, குடிக்கக் கொடுத்தேளாலே.."

"அப்பதயே கொடுத்தாச்சு அண்ணாச்சி. சார்வாளுக்கு சீனியில்லாம கொடுத்தாச்சு."

"வணக்கம் அண்ணாச்சி!"

"சரியாப் போச்சு, போங்க, சின்னப பயலுவ ஏதோ அண்ணாச்சிங்கானுவன்னா, நீங்களும் அண்ணாச்சிங்கேளே! என்ன காலேல புள்ளையையும் கூட்டிட்டு வந்திருக்கீங்க! கல்யாணம், கில்யாணம் வச்சிட்டேளா? எதுன்னாலும் ஃபோன்ல பேசியிருக்கலாமே.."

12

"போன்ல பேசுத மாதிரி விஷயமில்ல. அதான் நேரிலே வந்தேன். அறுபது வயசாவுது ஒருத்தரு வெரல மடக்க முடியாதபடி வாழ்ந்தாச்சு. இப்ப

பொண்ணால எனக்கு பெரிய தலைகுனிவு. அதாம் ஒங்ககிட்ட ஓடி வந்தேன். எங்களுக்கு ஒங்கள விட்டா யாரு உண்டு?"

"என்ன நீங்க சின்னப்புள்ள மாரி.. கண்ணீரத் துடைங்க. ஏம்மா! அழப்படாது. என்னன்னாலும் பார்த்துக்கிடலாம் அழப்படாதுங்கேம்ல? சார்வாள்! நீங்க மொதல்ல கண்ணெத்துடைங்க."

"இல்ல, இவளுக்கும் வெஷத்தைக் கொடுத்திட்டு, நானும் வெஷத்தைத் தின்னுட்டு மண்டையப் போட்டிரலாம்ன்னுதான் பார்த்தேன். பொறவு, ஜென்ம ஜென்மத்துக்கும் அந்தப் பழி நிக்குமேன்னுதாம், மனச கல்லாக்கிக்கிட்டு இங்க வந்தேன்."

"மனசப் போட்டு ஒழட்டப்படாது. தலைக்கு மிஞ்சின ஆக்கினையும் கெடையாது. கோமணத்துக்கு மிஞ்சின தரித்திரமும் கிடையாது. என்னய நம்புதன்னு சொல்லுதேளே. எத்தன கச்சேரில, எவ்வளவு கடவுளை பாடுதீய? கடவுள் கைவிட மாட்டான்.. என்னம்மா என்ன வெஷயம்? சும்மா பயப்படாம, சங்கோஜமில்லாமச் சொல்லும்மா".

"சொல்லுடீ, சொல்லு, கேக்காள்ல, சொல்லு"

"புள்ளயப் போட்டு அதட்டாதீய. நீங்க ஒரு சரியான ஆளு! காலேஜில ஏதும் பிரச்சினையாம்மா? அழப்படாது. அழுதா எனக்கு எப்படிம்மா தெரியும்?அழாம, தைரியமா, என்னென்னன்னு எல்லாம் சொல்லுங்கேம்லா, சார்வாள்! நீங்கதாம் சொல்லிருங்களேன். சின்னப் புள்ளையப் போட்டு படுத்துதேளே."

"இவளாய்யா சின்னப்புள்ள? இவள வெட்டிப் பொங்கல் விடணும்ய்யா. தாயில்லாப் புள்ளயாச்சேன்னு, எவ்வளவோ கஷ்டத்துக்கிடையிலேயும் இவளக் காலேஜில கொண்டு சேத்திருக்கேன். இவ செஞ்சிருக்கிற காரியத்தைக் கேட்டா, இவள நீங்க சின்னப் புள்ளேன்னு சொல்ல மாட்டீங்கய்யா!"

"என்ன, கொல, கில பண்ணிட்டாளா? இப்டிக் கூப்பாடு போடுதேளே! ஒப்பாரி வெக்காம, விபரத்தை சொல்லுங்கய்யா."

"புண்ணாக்குக் கடைக்காரர் வளவிலதாம் குடியிருக்கோம்.."

"அதாம் தெரியுமே, அதுக்கென்ன? வீட்டைக் கீட்டைக்

காலி பண்ணச் சொல்லுதானுவளா?"

"இல்லய்யா! அவரு மகனுக்கும், இவளுக்கும் சிநேகம்ங்கா. வீட்டில பொம்பள ஆள் இருந்தா, மாசா மாசம் குளிக்காளா இல்லியான்னு பாத்திருப்பா. நா ஆம்பிள! என்ன தெரியும்? நாலு டியூசன், நாலு கச்சேரின்னு போனாத்தாம் இவளக் காப்பாத்த முடியும். போன மாசமே குளிக்கல்லேங்கா. அவன் பணக்காரப் பய. அவன் அம்மைக்காரியப் பாத்தா தெருவே பயப்படும். அவன் அப்பன் அதுக்கு மேல! இப்பம் அண்ணாச்சி நீங்க தான் இவ வாழ்க்கைக்கு ஒரு வழி பண்ணனும்."

"என்னம்மா, அப்பா சொல்லுறதெல்லாம் உண்மை தானே?"

"தலைய ஆட்டாத நாயே! வாயத்தொறந்து சொல்லு, ஒன்னயப் போயி, அவாள் சின்னப் புள்ளங்கா பாரு."

"யோவ்! நீங்க சும்மா இருக்க மாட்டேளா? சின்னப்புள்ளயா இருக்கப்போயி தாம், அந்தப் பய ஆசை காட்டிட்டான். சரி, சரி எங்க போயிரப்போது.. பாத்துக்கிடலாம். ஒண்ணும் கவலைப்படாதீங்க. அந்தப் பயலுக்கு இவதாம் பொண்டாட்டி.. அத நான் பாத்துக்கிடுதேன். என்னம்மா அழப்படாது என்னா?"

"வாயத் தொறந்து சொல்லேன் மூதி!"

"யோவ் சும்மா இரும். ஏம்மா! அந்தப் பயலும் இத ஒத்துக்கிடுவானா; இல்ல, அதெல்லாம் ஒண்ணும் கெடையாதும்பானா?

"கல்யாணம் பண்ணிக்கிடுதேம்னு சொன்னாங்க!"

"சரி! இப்பம், இப்படி வயித்தில வந்தாச்சுன்னு சொன்னியா?"

"சொன்னேன்"

"என்ன சொன்னான்?"

"சும்மா வெளயாட்டுக்கு பழகினேங்காங்காங்க?"

"இது என்ன, சொப்பு சட்டிப் பானை வச்சு வெளயாடுற வயசாம்மா? அந்தப் பய வேற ஏதும் சொன்னானா?"

"நான் ஆம்பளப்பய. நீ ஏன் சம்மதிச்சேங்கான்."

"அது மட்டுமில்லய்யா! என்னய என்ன செஞ்சிர முடியும்ன்னு வேற கேட்டிருக்கான்யா."

"சரி, என்ன செஞ்சிர முடியும்னு பாக்கத்தானே இங்கன வந்திருக்கீய? பாத்துருவோம். அவனுக்கு கட்டிக்குடுக்க ஒங்களுக்கு சம்மதம் தானே?"

"வேற வழிய்யா?"

"சரி ராவன்னா வரட்டும். அந்தப் பயல மொதல்ல கூப்பிட்டுக் கேட்டுட்டு, அதுக்கப்புறம் அவன் அப்பனைக் கூப்பிட்டு விடுதேன். அவ கிட்ட நான் கொஞ்சம் தனியாப் பேசணுமே! கொஞ்சம் நீங்க வெளியே இருங்க."

"அவாள் கேக்கிற கேள்விக்கெல்லாம் சரியா பதில் சொல்லணும். அவாள் கையிலதாம் ஒன்னோட வாழ்க்கையும், நம்ம குடும்ப மானமும் சேந்திருக்கு. என்ன புரிஞ்சதா?"

"யோவ், நீங்க மொதல்ல வெளிய இருங்கய்யா!"

"எப்படிம்மா அந்தப் பயகிட்ட பழக்கம்?"

"காலேஜுக்கு போம்போது பஸ் ஸ்டாண்டில் வந்து நிப்பாங்க. சும்மா நிக்கறாங்கன்னு தான் நெனச்சுக்கிட்டேன். பிறகு கொஞ்சம் கொஞ்சமா பேச்சுக் கொடுத்தாங்க. சரி, அவங்க வளவிலே தானே இருக்கோம்னு, நானும் பேச்சுக் கொடுத்திட்டேன். பிறகு, 'கல்யாணம் பண்ணினா, ஒன்னயத்தாம் பண்ணுவேம்'ன்னாங்க. அதான் மாமா."

"அதெல்லாம் சரி. இந்த அளவுக்கு போலாமாம்மா?"

"ரொம்பத் தொந்தரவு பண்ணிட்டாங்க. எப்படியோ ஏமாந்திட்டேன்."

"சரி, இப்பிடி இப்பிடின்னு வெஷயத்தைச் சொன்னியா?"

"சொன்னேன். 'யாரோ ஒரு டாக்டர் இருக்காரு. அங்க போயி மருந்து சாப்பிடலாம் வா'ன்னாரு. நா மாட்டேன்னிட்டேன்."

"ஏம்மா?"

"அதெல்லாம் எப்படியும் வெளியில வந்திரும். அப்பா

தாங்கமாட்டாங்கன்னுதான்."

"சரி! எங்க வச்சுக் கேட்டாலும், நீ தைரியமா அந்தப் பயல பத்திச் சொல்லணும். என்ன? அவன் அப்பனும், அம்மைக்காரியும் அப்படிப்பட்ட ஆளுங்க, சரியா? நீயும், அப்பாவும் வீட்டுக்குப் போங்க. நான் ஃபோன்ல கூப்பிடுதேன். என்னா திடீர்னு நான் கூப்பிட்டு விசாரிச்சேன்னா, அவனாவே வந்து ஒங்ககிட்ட ஏதாவது பேச வருவான். "அதெல்லாம் அங்கதான் பேசிக்கிடணும்'னு சொல்லிரணும், தெரிஞ்சுதா?''

"யோவ்! கட்டையன் வந்து சொன்னானா?"

"பாட்டு சார்வாளும், அவாள் மகளும் வந்திருக்காங்கன்னு சொன்னான். என்ன விஷயமாம்?"

"நம்ம புண்ணாக்குகடைக்காரர் பையன் இருக்கானில்லை?.."

"ஆமா! அந்த செங்குரங்கா?"

"நீரு ஒரு ஆளு! அந்தப் பயதாம் நெல்லையப்பன்."

"அவனா? என்ன, சார்வாள் புள்ள மேல கை வைச்சிட்டானா?"

"அது எப்படிய்யா கரக்டா கேக்கீரு?"

"நாந்தான் சொல்லிக்கொடுத்து அவன கையை வைக்கச்சொன்னேன் பாருங்க. நீங்க ஒரு ஆளு! 'அவங்க ரெண்டு பேரும் பஸ் ஸ்டாண்டில் இளிச்சுக்கிட்டு நிக்கறதப் பாத்தவுடனே, ஒரு நாள் கேசு, இங்கனத்தான் வரப்போகுதுன்'னு நெனச்சேன் வந்துட்டுதாய்யா"

"யோவ்! நீரு என்னாய்யா மனுஷன்? ஏங்கிட்ட இத ஏன்ய்யா முன்கூட்டியே சொல்லல?"

"நானா வந்து சொன்னா, நீங்க என்னை கேப்பியோ; ஒமக்கு இதே வேலன்னு சொல்லுவியோ? இல்லன்னா, சின்னப் புள்ளக நிக்கற பஸ் ஸ்டாண்டுகளுக்கெல்லாம் போக ஆரம்பிச்சிட்டேராம்பிய. அதாம், தானா வரும்போது சொல்லிக்கிடலாம்னு வெச்சிருந்தேன். என்ன ஆச்சு?

"கற்பூரக் காட்டினிலே கனல் விழுந்து விட்டதம்மா"

"எல, கட்டையா, வாய மூடுல"

"அப்படியாய்யா! வழி ஏது?"

"ஆமாம்! நானும் யோசிச்சேன். அவன் அம்மைக்காரிய வெளியில பாக்க முடியாது; அந்த வளவில, பத்து வீடு இருக்கு; தோட்டமும் பெரிசில்ல; நம்ம ஊருல லாட்ஜ், கீட்ஜ்ன்னும் போயிர முடியாது. ஒண்ணும் புரியல்ல."

"திருக்குறள்லாம் புரிஞ்சிருது! இது புரியல்லங்கேளே?

"இந்த வெஷயத்திலெல்லாம் நீருதானய்யா திருவள்ளுவர்!"

"இப்பம் அந்தப் பயலக் கூப்ட்டு கேப்போம். அதுக்கப்புறம், அவன் அப்பனைக் கூப்பிடுவோம். ஏன்னா அப்பனும் கூட வந்திட்டாம்ன்னா வில்லங்கம்."

"சரி, எப்படி கூட்டிட்டு வருவீரு?"

"அவங்க அப்பன்காரன், மத்தியான்னம் கடையில் தாம் படுத்துக்கிடுவாம். அப்பம் இந்த பய, சாப்பிட வீட்டுக்கு வருவான். அப்பம் கட்டையன விட்டு ஆள கூப்ட வேண்டியது தான். எல, மூதி! அங்கேயும் போயி, ஏதும் பாட்டைக் கிட்டை பாடி காட்ட கலச்சிராத! சரியால?"

"குற்றம் புரிந்தவன், வாழ்க்கையில் நிம்மதி கொள்வதென்பதேது...."

"சரி, நீங்க பெரிய அறிவாளிதான்! சரியா ரெண்டு மணிக்கு போயி பயலப் புடிச்சிரு"

"அண்ணாச்சி, பயலப் பார்த்துக் கூப்பிட்டேன். 'நாளைக்கு காலேல வாரேன்'ன்னான்.

"என்னலே, எதையும் ஒளறிட்டியா?"

"வாயத் திறப்பனா? ஆனா, நீங்க கூப்பிடுதேள்ன்னா, அவனுக்கு எதுக்குன்னு தெரியாமலா இருக்கும்? தப்பு வேற பண்ணியிருக்கானா, தானா கணக்கெடுத்துப் பாக்க மாட்டான்?' என்ன சொல்றது, எப்படி சொல்றது'ன்னு யோசிச்சு, தயாரா வருவான்னு நெனக்கேன்."

"எல! என்னத்தையும் அவம் ஒங்கையிலே திணிச்சி, நீ என்ன வெபரம்னு சொல்லிட்டியாளா?"

"என்னய சந்தேகப்படாம ஒங்களால இருக்கமுடியாதே, ராவன்னா!"

"ஒங்க லெட்சணம் அந்த மாரித்தானேடேய்; அதான் அவரு கேக்காரு."

"அதாம். 'தன்னைத்தானே நம்பாதது சந்தேகம்'ன்னு தெய்வப்பிறவில சிதம்பரம் ஜெயராமன் பாடுனாரு... அண்ணாச்சி. இந்த ராவன்னாவைக கொஞ்சம் கண்டிச்சு வையிங்க."

"எல! செருப்பு பிஞ்சிரும். எங்களக் கண்டிக்கணுமாம்ல, எதுக்குல?"

"வீட்டுக்குள்ள, சின்னப் புள்ளக கிரிக்கெட் பாத்துக்கிட்டிருக்கு. 'இவாளும் போயி கூட ஒக்காந்துகிட்டு அவங்கள பாக்கவிடாம எடஞ்சல் பண்ணுதாரு'ன்னு, அவங்க சொன்னதனாலதாம் சொல்லுதேம்."

"இவருக்கு என்ன கிரிக்கெட்டைப் பத்தித் தெரியும்? அவனுகள்கிட்ட போயி, ஒண்ணு கெடக்க ஒண்ணைச் சொல்லுதாரு. அவனுவ இவரக் கண்டாலே கேலியும், கிண்டலும் பண்ணுதானுவ."

"என்னல சொன்னாரு?"

"இவாளுக்கு கிரிக்கெட்னா என்னன்னு தெரியுமா? அவனுக கிட்டபோயி அதப்பத்தி இவாளுக்கு என்ன பேச்சு?"

"ஆமா நானும் கேக்கணும்னு நெனச்சேன், ஒமக்கு என்ன எழவு தெரியும் அதப்பத்தி?"

"எல்லாரும் கூட்டம் கூட்டமா கெடந்து பாக்கானுவளேன்னு, நானும் ஒக்காந்திருப்பேன்."

"ஒக்காந்திருந்தா ஒண்ணுமில்ல. என்னத்தையாவது ஒளறித் தொலையுதாரு."

"என்னத்தல ஒளறினேன்? இவருக்கு அஞ்சாறு....தெரியும் பாருங்க."

"யோவ்! அந்தப் பயலுக்கு கிரிக்கெட்டெல்லாம் தெரியும். என்னலே ஒளறுதாரு?"

"அண்ணாச்சி! பௌலர் பந்து வீச வரும்போது அங்கன ஸ்கிரீன் சரியில்லன்னா, ஸ்கிரீனை நகட்டச் சொல்லி

பேட்ஸ்மேன் சொல்லுவாம்ல்ல?"

"ஆமா!"

"அன்னிக்கு அசாருதீன் ஸ்க்ரீனை நகட்டச் சொல்லும் போது, இவரும் ஒக்காந்திருந்தாரு. ஸ்கிரீனை நகட்டுனதுக்கப்புறம் அம்புரோஸ் பந்துபோட வரும்போது, இவாள் வாயத் தொறந்து மாட்டிக்கிட்டாரு!"

"என்னல சொன்னாராம்?"

"அவன் ஸ்க்ரீனை நகட்டச் சொன்னத இவாள், 'அசாருதீன் இவம் பந்து போடக்கூடாதுன்னுதானே, இவன ஒதுங்கச் சொல்லி கைய கையக் காம்பிச்சான். பிறகும், அம்புரோஸே ஏன்ய்யா போடுதாம்? வெளயாட்டுல ஒரு ஒழுக்கம் இல்லையேங்காரு. பயலுவ பூராவும் சிரிப்பு."

"சரியான கூத்துதான்! ஒம்ம யாருய்யா அங்கெல்லாம் போகச் சொன்னது?"

"ஒங்க அண்ணன் பேரன் தான்."

"அந்தப் பயல ஏன் இழுக்கிரு?"

"இல்ல. அவன்தாம் ,தாத்தா! மேட்ச் நடக்கும்போது நீங்க எங்ககூட இரீங்க' ன்னான்.

"ஏனாம்?"

"நான் பாக்குறன்னிக்கெல்லாம், இந்தியா ஜெயிச்சிருதாம்! அதுக்குத்தான்."

"அப்ப பாகிஸ்தானோட ,,வார்" வந்தா இவாள எல்லைக்குக் கொண்டு போயிர வேண்டியதுதான்."

"எல கட்டப்பயலே! ஒன்னை...வெளிய வச்சிக்கிடுதேம்ல? சரி, எனக்குத்தாம் ஒண்ணும் தெரியாது. தெரிஞ்ச இவன, உள்ளேயே விடமாட்டாங்க. ஏன்னு கேளுங்க பாப்போம்?"

"எதுக்குல"

"நாம் போயி ஒக்காந்து, நம்ம கெட்ட நேரத்துக்கு ஏதாவது விக்கெட் விழுந்திரும். உடனே உங்க பேரன், "அம்பி! தயவு செய்து வெளில போயிரும்"ன்னு கையொடுத்துக் கும்பிடுவான் நானும் வந்திருவேன்."

"எல! பொய்யி சொல்லப்படாது. இவம் அதையே சாக்கா வச்சு, அந்தச் சின்னப் பையங்கிட்டயும் கலெக்ஷன் பண்ணிருதாம்ய்யா"

"எல, அப்பிடியா? ஓம் எச்சிப்புத்திய, சின்னப் புள்ளைககிட்டயும் காம்பிக்க ஆரம்பிச்சிட்டியா"

"வாங்க, வாங்க! என்னடேய் நெல்லையப்பா! நல்லா இருக்கியா? என்னடே, ஒன்னயத்தானே கூப்பிட்டுவிட்டேன்? எதுக்கு வயசு காலத்தில அவாளயும் இழுத்திட்டு வந்தே?"

"இல்ல, நானாத்தாம் வந்தேன்."

"அப்படியா?ஒண்ணுமில்ல, நான் கொஞ்சம் அவன்கிட்ட பேச வேண்டியிருந்தது...பின்னால தேவைப்பட்டா ஒங்களோட பேசிக்கலா மேன்னுதாம், அவன மட்டும் கூப்பிட்டுவிட்டேன்."

"அவனும் அப்பிடித்தாம் சொன்னான். அவம் அம்மைக்காரிதான், என்னயும் போயிட்டு வரச் சொன்னா."

"அதானே கேட்டேன்; நீங்க என்னிக்கும் எங்கனயும் நீங்களா போற ஆளில்லயே!"

"ராவன்னா! சும்மா இரியும்."

"ஒங்களயும் அவம் அம்மைக்காரி கூட அனுப்பிச்சிருக்கதில இருந்தே, வெஷயம் ஒங்களுக்கும் தெரிஞ்சிருக்குங்கறது தெளிவாயிட்டுது. நீங்களே ஒரு வழி சொல்லுங்க."

"என்ன வெஷயம்?நீங்க சொன்னாத்தானே தெரியும் எங்களுக்கென்ன தெரியும்?"

"ஐயா, எங்களுக்கு ஏற்கனவே குறுக்குத்துறையில வச்சுக் காது குத்திருக்கு. வெஷயம் தெரியல்லேன்னா, நீங்க எதுக்கு கூட வரணும்? அவன மட்டும் அனுப்பிச்சிருக்கலாமே"நாங்க எத்தன பேரைப் பாத்திருப்போம்?"

"ராமையா! நாங்க ஏதோ அவாள் கூப்பிட்டு விட்டாளேங்கிற மரியாதைக்குத் தாம் வந்திருக்கோம். நீரு ரொம்ப பேச வேண்டாம்."

13

“சரி நீங்க பெரிய ஆளு கோபப்படக் கூடாது. தெரியாதுன்னா, நானே சொல்லுதேன். சங்கீத சார்வாள் பொண்ணுக்கும் ஒனக்கும் என்னடே நெல்லயப்பா சொல்லு.”

“அந்தப் பொண்ணுக்கும் எனக்குமா? என்ன கேக்கியோன்னே புரியல்லயே!”

“சரிடே அந்தப் புள்ளைக்கும், ஒனக்கும் பழக்கம்னு, அந்தப் புள்ளை சொல்லுது. நீ என்ன சொல்லுதே?”

“இது என்ன பழுநீலம் பத்த வெச்சிருக்கா! ஏம்பையன் அப்பிடில்லாம் போற புள்ள இல்ல.”

“பாத்தேளா, இதுக்குத்தாம் அந்தப் பயல மட்டும், நான் கூப்பிட்டுவிட்டது. நாங்க என்ன, கேக்கத்தானே செய்தோம்? அதுக்குள்ள பழுநீலம் பச்சைன்னிட்டு என்ன நீங்க? அந்தப் புள்ளயும், சார்வாளும் வந்து சொல்லப் போயித்தான், சரி, காதும் காதும் வெச்சாப் போல பயகிட்ட கேட்டுக்கிட்டு, பொறவு ஒங்களக் கூப்பிட்டு வெஷயத்தைச் சொல்லலாம்னு பாத்தேன். சரி, நீங்களும், கூட வந்திட்டீய! எனக்கு வேற வழியில்ல..”

“அந்தப் பாட்டு வாத்தியாருக்கு வீடு கொடுக்கும்போதே, இவம் அம்மைக்காரிகிட்ட சொன்னேன். கேட்டாளா? இப்பம்பழியத் தூக்கிப் போட்டிருக்கா, பாத்தேளா?”

“ஏய் நெல்லையப்பா! அவாள் பேசிக்கிட்டிருக்கா, நீ பதில் சொல்லுடே ஒனக்கும் அந்தப் புள்ளைக்கும் பழக்கம் உண்டா, கெடயாதா?”

“அவளுக்கு இன்னும் எத்தன பேர்ட்ட பழக்கம் இருக்குன்னு, ஒங்களுக்குத் தெரியுமா?”

“ஏய்! யார்ட்ட நின்னு பேசிக்கிட்டிருக்கம்ன்னு, மனசில வச்சுக்கிட்டுப் பேசுடே. ஒங்க ஐயா என்னடான்னா, ராமையா, நீ பேசாதேங்காக. நாங்க பேசமாட்டோம். ஆனா, அவாள்ட்டேய தாரதம்மியம் இல்லாம பேசினா, நாங்க பாத்துக்கிட்டிருக்க மாட்டோம்டே! தெரியுதா? எந்தப் புள்ளக்கு, எத்தனை பேர்ட்ட பழக்கம் இருக்குன்னா அவாள் விசாரிச்சுக்கிட்டு அலயுதாவ? ஏய் நீ காலேல காலலே அந்தப்புள்ள காலேஜுக்குப் போகும்போது பஸ்ஸ்டாண்டில போயி இளிச்சுக்கிட்டிருந்ததத்தான், ஊரே பாத்திருக்கேடே! பணம் இருக்குன்னா, என்ன வேணும்னாலும் பேசுவேளோடே? நீ வெஷயத்தை ஒங்க அம்மக்காரிகிட்ட

சொல்லாமலா அய்யாவ அனுப்பிச்சிருப்பா? ஏய்! ஒனக்கும் அந்தப் புள்ளைக்கும்தான் பழக்கம். கேட்டியா? அதுக்குப் பதில் சொல்லு!"

"யோவ் ராவன்னா! விடும் சின்னப்பய...பேசத் தெரியல்லே. சரிடே! நாங்கேட்ட „கேள்விக்கு பதில் சொல்லிட்டு, மத்ததப் பேசு, பொம்பளப் புள்ளகள பளிச்சின்னு மானாங்கண்ணியாப் பேசாதீங்கடே! பஸ் ஸ்டாண்டிலே போய் இளிக்கும்போதே இந்தப் புத்தி வந்திருக்கணும்டே, தெரியுதா? ஐயா பெரியவரே! அந்தப் புள்ள இப்பம் முழுகாம இருக்கு இவம்தாம் காரணம்னு அது தெளிவாச் சொல்லுது. என்ன பண்ணப் போறியோ? பொம்பளப்புள்ள பாவம் பொல்லாதது. ஒங்க வீட்டிலேயும் புள்ளய இருக்கு."

"அதாம் நான் சொல்லுதம்ல்லா அண்ணாச்சி. அவளுக்கு என்னய மாரி இன்னும் எத்தன பேரோடயோ பழக்கம். அதுக்கு நான் எப்படி பொறுப்பேற்க முடியும்?"

"சரி, அப்பம் ஒனக்கு பழக்கம் இருக்குன்னு ஒத்துக்கிடுதே, நீயே வேற யார்யாரோட பழக்கம்ன்னு சொல்லிரேன்."

"அது என் வேலையில்லேல்லா அண்ணாச்சி."

"அப்பம் எவனாவது ஏழை புள்ளயப் பெத்து வச்சிருப்பான்; நீங்க வெள்ளயும் சொள்ளயுமா, மைனர் செயின் தெரிய சட்டையத் திறந்து விட்டுட்டு ஏமாத்துவீய; நாங்க பாத்திட்டிருக்கணும். என்னடே பேசுதே? மனுஷனப் பாரு!"

"ராவன்னா, நீங்க பேச வேண்டாம்"

"ஏய்! என்ன அய்யாவும், மகனுமா அவர பேசாதீரும்! பேசாதீருங்கீய, அவரு பேசாம இருக்க மாட்டாரு. கேட்டா மரியாதையா பதில் சொல்வேன்னு பாத்தா, எத்தனையோ பய பழக்கம்ங்க. ஆளச் சொல்லுனா, சொல்ல மாட்டேங்க. சரிய்யா! பல பயட்ட பழக்கம்னே வச்சிக்கிடுவோம்ய்யா அவளுக்கு. அதுல ஒன்னய ஒருத்தனைத்தான் புடிச்சிருக்கு. இப்பம் அதுக்கு என்ன பதில் சொல்லப்போற?"

"அய்யா, எங்களுக்கும் ஆளிருக்கு."

"யோவ்! நீரெல்லாம் பெரிய மனுஷனாய்யா? பெரிய அயோக்கியத்தனம் பண்ணிருக்கான் ஓம் பையன்.

எங்களுக்கும் ஆளுருக்குங்கீரு. அவாள மீறி எந்த ஆளு இங்க வந்திருவாம்னு பாத்திருவோம். கொஞ்சம் மரியாதையா நடத்தி வெஷயத்தை முடிச்சிருவோம்ன்னு பாத்தா, ஒங்களுக்கு மரியாதை தங்காதுபோல."

"எனக்கு ஆளுகள பார்த்தாலே தெரியும்ய்யா. ஒங்க பையன்தான் பண்ணிருக்கான். அது நாளைக்கு ஒங்களுக்குத் தெரியும். இத காதும் காதும் வச்ச மாரி முடிச்சிடுவோம். இல்ல, எல்லாரும் அசிங்கப்பட வேண்டியிருக்கும். ரெண்டாவது, ஒரு பொம்பளபுள்ள பின்னால நாயி மாரி அலய வேண்டியது. பொறவு, 'அவளுக்கு அங்க பழக்கம். இங்க பழக்கம்'ங்க வேண்டியது. ரொம்பத் தப்புய்யா! போயி ஒங்க வீட்டுக்கார அம்மாவ கலந்துக்கிட்டு, நாளைக்கு வாங்க, இல்ல சரிப்படாது."

"சரி அண்ணாச்சி, எந்த லாட்ஜுக்கு ஏங்கூட வந்தா? அல்லது வெளியூருக்கு வந்தாளா? கேட்டுச் சொல்லுங்க, அண்ணாச்சி."

"சரிடேய், மத்ததெல்லாம் நாளைக்கு வச்சுக்கிடுவோம். இப்பம் போயிட்டு வாங்க."

"யோவ் ராவன்னா! நம்ம டெயிலர் அந்த வளவிலதான் இருக்காம். கொஞ்சம் அந்தப் பயலப் புடியும்."

"அய்யா! டெயிலர்வாள் வந்திருக்கா."

"ஏய், என்ன சோகமா இருக்கியா? அம்பிப்பய அப்புறம் ஒண்ணும் பிரச்சின பண்ணலேல்லா?"

"எங்க அண்ணாச்சி, நீங்கதாம் சொல்லிட்டேளே:'அந்தப் பயல ரசிங்கடா'ன்னு..நானும் ரசிகர் மன்றத்தில ஒரு ஆளாச் சேந்திட்டேன்."

"அது சரிடே, நம்ம புண்ணாக்குக்கடைக்காரர் வளவில தானே நீ குடியிருக்கே? அந்த சங்கீத சார்வாள் பொண்ணு எப்படிடே"

"அண்ணாச்சி! இது முன்னாலேயே ஒங்ககிட்ட வரும்ன்னு நெனைச்சிக்கிட்டிருந்தேன். வந்தாச்சா? தங்கமான புள்ள, அண்ணாச்சி, ஆனா புண்ணாக்குக்கடைக்காரர் பய, அந்தப்புள்ளய ஏமாத்திப்புட்டான் அண்ணாச்சி."

“அது எப்படிடே?இந்த ஊருல நமக்குத் தெரியாம எங்க கொண்டு போயிர முடியும்? வளவிலயா? பத்து வீட்டுக்குமேலல்லா இருக்கு. அங்கன தோட்டம் துரவும் வசதி கெடயாதே!”

“அதுலதான் அண்ணாச்சி, அவன் கில்லாடி! ஒண்ணும் இல்லேண்ணாச்சி. கரெக்டா வெள்ளிக்கிழமை சாயங்காலமே அவன் அய்யாகிட்ட ‘சாலைக்குமாரசாமி கோயிலுக்குப் போறன்’னிட்டு, எங்க கடைக்கு வந்துருவாம் அண்ணாச்சி. சரியா ‘ஒளியும், ஒலியும்’ போடுத நேரத்துக்கு, அந்தப் புள்ள வீட்டுக்கு போயிருவாம்.”

“ஏய், வளவில எப்படிடே?”

“அங்கன யார் வீட்டலயும் டி.வி. கெடயாது. எல்லாரும் இவன் வீட்டுக்குப் போயிருவாங்க. கரெக்டா அந்தச் சமயத்தில் அந்தப் புள்ளயயும் பழக்கி வச்சிருக்கான். இதாம் அவன் டெக்னிக்.”

“ஒனக்கு எப்படிடே தெரியும்.”

“ராவன்னா, இதப் போயிக் கேளும்! எல்லா ஆம்பளப் பயலுக்கும் இருக்குற பலவீனம். சும்மா, பழக்கம் இல்லாத பொம்பளப்புள்ளயயே அப்படி இப்படின்னு யாராவது ஒரு ஆம்பளக்கிட்ட சொல்லல்லேன்னா தூங்க முடியாதுன்னு இருக்குற பயலுவ மத்தியில, உண்மையில தங்கம் மாரி ஒரு பொண்ணு கெடச்சா, யார்ட்டயாவது சொல்லணும்னு அலஞ்சிருப்பான் மூதேவி. அதாம் டெய்லர்கிட்டே சொல்லியிருக்கான் பய சரியான ஆளுதாம்”

“ஒளியும், ஒலியும் நெல்லையப்பன்னு பேரு வச்சிரலாம், பாஸ்.”

“ஐயா, எதுக்கும் சும்மத்துக்கும் டவுன் இன்ஸ்பெக்டரக் கூப்பிட்டு வச்சிக்கிடுவோம்.”

“எதுக்குய்யா?”

“சொல்லுறத் கேளுங்களேன்”

“சரி.”

“ஏய் நெல்லையப்பா! நாங்க வெசாரிச்சாச்சு. ‘ஒன்னயத் தவிர, அந்தப் புள்ளக்கு வெளிப்பழக்கமே கெடயாது’ன்னு தெளிவாத் தெரிஞ்சு போச்சு. என்னடே சொல்லுத?”

"அய்யா, ஒங்க பையன்கிட்ட நீங்களே கேளுங்க. வெள்ளிக்கிழமை தோறும் சாலைக்குமாரசாமி கோயிலுக்குத் தாம் போவானான்னு?"

"பொறவு?"

"பொறவா! அவன் 'ஒளியும் ஒலியும்'ல்லாய்யா பாத்திருக்கான்."

"புரியல்லய நீங்க சொல்லுறது..."

"அவன்கிட்டயே கேளும்."

"அது வந்து..."

"ஏய்! சரியில்லடே. உண்மையை ஒத்துக்க. பேசாம தாலி, சீலயக்கட்டி, வாழ்க்கையைத் தொடங்கு என்னா?"

"கட்டாயக் கல்யாணம் மாரி பண்ணினேள்னா, என்ன நியாயம்.?"

"எதுவே கட்டாயக் கல்யாணம்? அவந்தாம் முதலிரவத் தாண்டி ரொம்பத் தூரத்துக்கு, வந்திட்டானே, பொறவு என்னவே கட்டாயக் கல்யாணம்? மரியாதயா கல்யாணத்துக்கு வழியப் பாரும். இல்ல, மொத்தக்குடும்பத்தையும் உள்ள கொண்டு வச்சிருவேன்...ராவன்னா திடீர்னு எங்கன போனாரு?"

"இந்தா வந்திட்டம்ய்யா. யாரு வரான்னு பாருங்க!"

"யாரு தனமா?"

"ஆமா அண்ணாச்சி."

"என்னம்மா, இந்த நேரத்தில இங்க?"

"ராமையா அண்ணன்தான் கூட்டிட்டு வந்தாரு."

"அவகிட்டய கேளுங்க."

"இல்லண்ணாச்சி, நெல்லையப்பன் வந்து என்கிட்டதாம் .நீ நர்சா இருக்கேல்லா அக்கா, ஒரு புள்ளக்கு கர்ப்பத்தைக் கலைக்கணும். முடியுமான்னு கேட்டான். 'யாருடேன்னு கேட்டதுக்கு, 'சங்கீத சார்வாள் மகள்' ன்னாம். அதாம் ஒங்கமுன்னால வந்து இதச் சொல்லனும்ன்னு ராமையா அண்ணன் சொன்னாக. வந்தேன்."

"ஏய்! என்னடே சொல்லுதே? பலபேர்ட்ட பழக்கம்ன்னா,

நீ ஏண்டேய் தனத்துகிட்ட போனே?"

"சரி சரி. காதும் காதும் வச்சால, கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணுங்க. நாத்தம் அடிக்காம போங்க."

"என்ன ராவன்னா?"

"இல்ல, நம்ம நெலமயப் பாருங்களேன். சங்கரன் பயலத் 'தயார்' பண்ண வேண்டியிருக்கு! இவன 'ஒத்துக்கிட' வைக்க வேண்டியிருக்கு! அத நெனச்சேன்."

"நான் இந்த மாரி எந்தத் துன்பமாவது ஒங்களுக்குக் கொண்டு வந்திருக்கனா, அண்ணாச்சி?"

"ஆமல, ஒங்க உயரத்துக்கு, பின்னாலய அலயுதாளுவ பாரு!"

14

"அய்யா! நீங்க ஏதோ கம்பன் கழகம்ன்னு விழுப்புரம் போயிருந்தேள்லா அப்பம் ஒங்க நகைக்கடை மாமா வந்திருந்தா. 'ஊர்ல இருக்காளா என்னான்னு ஒரு ஃபோன் பண்ணிக் கேக்காமப் போயிட்டனே! ராமையா, வந்த ஒடனே எனக்கு நினைவா ஒரு ஃபோன் பண்ணுடே. காந்திமதி கல்யாணக் காயிதத்தை நேர்ல குடுக்கணும்ன்னு மாமா வந்திருந்தாங்கன்னு சொல்லு. மறந்திர மாட்டியே" ன்னிட்டு போனாக."

"யாரு மாக்காளை மாமாவா?"

"ஆமாம்! அவாள் தான். நானும் ரொம்ப நாளாக் கேக்கணும்ன்னு நெனச்சுக்கிட்டிருக்கேன். அது என்னய்யா மாக்காளை மாமா?"

"ஆளு தண்டியா, சைஸு கூடுதலா இருக்காள்லா!"

"ஒங்க சில்வர் கடை தம்பியும் அப்படித்தான இருக்கா?"

"ஒமக்கு எல்லாத்தையும் புட்டு புட்டு வெக்கணும். அவாள் பேசிட்டிருக்கும்போது கவனிச்சுப்பாரும். ஒவ்வொரு வரிக்கு எடயிலேயும் டக்குன்னு நாக்கை வெளியே நீட்டி, கடைவாய்ப் பக்கம் சுழட்டி, மூக்குக்கு கீழே கொஞ்ச நேரம் கொண்டு நிறுத்துவா பாரும்! அது நம்ம நெல்லையப்பர் கோயில் மாக்காளை ஸ்டைலு. அதனாலதான் அவாளுக்கு 'மாக்காளை மாமா'ன்னு பட்டப்பேரு. நம்ம பெரியண்ணன் வச்சது. பேச்சும் பாருங்க, அடி வயித்திலேருந்து வரும். காளை கூப்பிடுத மாரி."

"வாங்க, வாங்க! என்ன மாமா? கல்யாண ஏற்பாடுல்லாம் நடந்துக்கிட்டிருக்கா? காந்திமதி எப்படி இருக்கா?"

"எல்லாம் உங்க புண்ணியத்திலே நல்ல நடந்திக்கிட்டிருக்கு மாப்ளே! இந்த ராமையாவ ஒரு நாலு நாளைக்கு ஏங் கூட இருக்கச் சொன்னேள்ன்னா, காயிதம் குடுக்கற வேல சுளுவா முடிஞ்சிடும்.

அன்னிக்கு, கூறு கெட்டதனமா நீங்க ஊர்ல இருக்கேளா, இல்லியாண்ணு விசாரிக்காம, காயிதத்த தூக்கிட்டு வந்து வெக்கிப் போயிட்டேன். வீட்டுக்குப் போனா, ஒங்க கொளுந்தியா 'நடுவர் அத்தான் என்ன ஆனாகன்னு கேலி வேற."

"ராவன்னா வந்த ஒடன சொன்னாரு. கல்யாண வீட்டுக்காரனுக்கே காயிதம் குடுக்கது என்ன வேலையோ?"

"என்ன நீங்க சொல்றது. அவ வீட்டுல இருக்க விடுதாளா. பெரிய வீட்டு அத்தானுக்கு நேர்ல கொண்டு குடுங்க, குடுங்கன்னு பிராணனை எடுக்கா."

"அப்பம் நீங்களா வரல."

"மாப்பிள! பாத்தேளா, அத்தானும் கொளுந்தியாளும் எந்தலயப் போட்டு உருட்டுதேளே"

"அய்யா நீங்க சொன்னது சரிதாம்ய்யா. இப்பம் நல்ல கவனிச்சத்துக்கப்புறம் தெரியுது."

"என்னது ராமையா?"

"நீங்க போங்க மாமா அவருக்கு வேற வேல கெடயாது."

"சரி ராமய்யாவ எப்பம் அனுப்புதீய?"

"இப்பவே கூட்டிட்டுப் போங்க"

"அய்யா! நீங்க இப்பம் ஜவுளிக்கட மருமகனத்தான பாக்கப் போறியோ? அங்கன எவ்வளவு நேரம் இருப்பியோ?"

"அங்க வந்திருதேன்"

"சரி வந்திருடே இங்கன பஞ்சு வெட்டிட்டிருந்திராத என்னா?"

"ஒங்களயும் சேத்துத்தான் ஒங்க மாமா சொல்லுதா? அம்பி.

"ஏய்! வேலய ஆரம்பிச்சிட்டியா?"

"நீங்க போங்க மாமா இப்பம் அனுப்பிச்சிருதேன்"

"அண்ணாச்சி, காந்திப் பிள்ளைக்கு கல்யாணமாமே"

“வந்திட்டியா! ஒருத்தருக்கு ஊர்ல கல்யாணம் நிச்சயம் ஆயிரக் கூடாதே ஒனக்கு. ஏல! ஒரு கல்யாணத்த பண்ணித் தொலய வேண்டியதுதான. பண்ணியும் தொலைக்க மாட்டே யாருக்கு கல்யாணம்ன்னாலும் அதப் பத்தியே பேசு. கடேசில கோட்டி புடிச்சுத்தாம் அலயப் போற நீ.”

“கேக்கத்தான செஞ்சேன்? இதுக்குப் போயி இப்பிடி கோபப்படுதேளே!”

“பின்ன என்னல! நீயும் கல்யாணம் பண்ணமாட்ட. ஊருல யாருக்குக் கல்யாணம் ஆனாலும் அதப்பத்தியே பேசுத. ஒனக்கு கல்யாணம் பண்ணனும்னு ஆச இருக்கு. துட்டை இழக்க மனசுமில்ல. நீ ஒரு மனுஷம் மாரியால இருக்க பாக்க? இந்த வேட்டியும் சட்டையும் வாங்கி மாட்னதுல இருந்து, என்னிக்காவது வெளுக்கப் போட்டிருப்பியால. மூதி! ஒரு செல்லம் சோப்பாவது வாங்கிப் போட்டா என்னல? பிசுனாறிப்பய! வயசும் நாப்பதுக்கு மேல ஆச்சு. எச்சிநாயி, மடியிலய கட்டிக்கிட்டு அல.”

“நீங்க அரண்மனை, தாங்கும். நாங்க செலவழிச்சா, எங்க போக?”

“ஆமா, இப்பம் ஒங்களப் போயி தண்ணியப்போட்டுட்டு சூதாடச் சொன்னோம் பாரு, நாங்க. நல்ல துணிமணி கட்டாம, வயித்துக்குச் சாப்பிடாம.. என்னல வாழ்க்கே?”

“பாஸ்! இவாள் குறுக்குத் துறையில மின்னடிப் படித்துறை பூராம் யார் யார் சோப்பு மிச்சத்த படில தேச்சு வச்சிருக்காளோ, அத தேடித் தேடி, வேட்டியப் போட்டு துவைப்பா.”

“ராவன்னா அங்க கல்யாண வீடே கதின்னு கெடக்காபோல”

“ஏல ஒன்னமாரியா, இப்பமே போயி சோத்துக்கு நிக்க? பல காரியங்களுக்கு ராவன்னா வேண்டியிருக்கு.”

“ஒங்ககூட ஆளு வேணுமில்லா?”

“அதாம் நான் இருக்கேம்லா” இது அம்பி.

“எல!”

“இந்த அம்பி வெளங்கவே மாட்டாம் அண்ணாச்சி”

“என்னல”திடீர்னு அவனுக்குச் சாபம் விடுத”

“இவன் வாய் வெளங்காமப் போயிரும் அண்ணாச்சி”

“நிறுத்துல, பெரிய துர்வாசரு! சாபம் விடுதான்”

“அண்ணாச்சி, எனக்கு நல்ல நேரம் இருந்து ராத்திரில ஒங்க கண்ணுல பட்டுட்டம்ன்னா, இருட்டுக்கடை அல்வா உறுதியா உண்டு. ஒரு நாலு மாசமா ஜங்சன் கடைல போட்டு எங்க மொதலாளி கொல்லுதாரா? ஒங்களப் பாக்க முடியல. நம்மளா ஆச தீர ஒரு இருநூறை வாங்கி சாப்பிடணும்னு துட்டை ரெடி பண்ணி, சனிக்கிழமை கடை பூட்ன ஒடனே யாருக்கும் தெரியாம ஒரு இருநூறை வாங்கி டகார்ன்னு மடில கட்டிக்கிட்டு, கோயிலுக்குள்ள போயி பொத்தாமரைக்குளம் வடக்கு மூலைக்கு இருட்டில் போயி சௌகரியமா ஒக்காந்து ஒருத்தன் கண்ணுலயும் படாம நல்ல ரசிச்சு சாப்பிடணும்னு பொட்டணத்த பிரிக்கேன்... யோவ் முருகம்பிள்ள, அல்வாவான்னு அந்த இருட்டுக்குள்ள வந்து இந்தக் கட்டையன் நிக்காம் மாமா.”

“நீ பாட்டுக்கு திங்க வேண்டியதுதான?”

“எங்க மாமா? பளிச்சின்னு அம்புட்டயும் எடுத்து வாயில போட்டுக்கிட்டு இருட்டுக்கடை அல்வாவ, இருட்டுல வச்சுச் சாப்பிட்டா இவ்வளவு ருசி ஏறுங்கற வெபரம் இப்பந்தான் தெரியுதுங்காம் அண்ணாச்சி.”

“இதச் சொல்ல ஒனக்கு வெக்கமா இல்லியா? பிச்சைக்காரங்ககூட காக்காய்க்கு சோறு வெக்காம். போங்கல! காலைல உயிர எடுக்க வந்திட்டானுவ..”

“சமையல் யாரு அண்ணாச்சி? விசுப்பிள்ளைதானா?”

“ஏல அவரு இல்லாம எப்பிடில இங்கனக்குள்ள கல்யாணம் நடக்கும்?”

“அய்யா!...”

“என்ன ராவன்னா? ரொம்ப லெவல் கூடிட்ட மாரி தெரியுது. போன்லதாம் பேசுதீரு!”

“பாத்தேளா! நீங்கதாம் மாமா கூட இரியும்ன்னு அனுப்பிச்சீய. இப்ப லெவல் பாக்கேளே?”

“சும்மச் சொன்னம்ய்யா என்ன விஷயம்.”

“நீங்க ஒடனே பொறப்பட்டு வரணுமாம். ஒங்க மாமா சொன்னா.”

“மாப்பிள்ள அழைப்பு சாயங்காலந்தானே! நான் வந்திருவேன்ய்யா.”

“வேற ஏதோ முக்கியமான விஷயம் பேசணுமாம். ஒடனே வரச்சொன்னாக.”

“ஒரு கால் மணி நேரத்துக்குள்ள வந்திருதேன்.”

“மாமா எங்க?”

“நீங்க உள்ள வாங்கய்யா, முதல்ல.”

“அவாள் எங்க?”

“புறவாசல்ல இருக்கா! உள்ள வாங்க; எல்லாம் தெரியும்.”

“என்ன மாமா, பச்சப்புள்ள மாரி.. மாப்பிள்ள அழைப்புக்கு, ரெண்டு மூணு மணி நேரம்தான் இருக்கு. நல்ல நாளும் அதுவுமா... கண்ணெத் துடைங்க, சொல்லுதேன். என்ன இப்பம் திடீர்ன்னு? யோவ் ராவன்னா?”

“மாப்ள வீட்டுக்காரனுவ, திடீர்னு கொப்பில ஏறுதானுவய்யா.”

“எந்தக் கொப்பில ஏறினாலும் எறங்கித்தான ஆகணும்?”

“அவனுவ, எறங்கற மாரித் தெரியல.”

“அப்பம், எறக்கிற வேண்டியதுதான! நகை நட்டு ஏதும், கூட வேணும்ங்கானுவளா?”

“அதுன்னாத்தான், கடையத் திறந்து விட்டிருவேனே!”

“பொறவு என்ன வேணும்ங்கானுவ?”

“ஒத்தப் பிள்ள வச்சிருக்கேன், கருவேப்பிலக்கன்னு மாரி! அவளுக்குத்தான மாப்ள, அம்புட்டுச் சொத்தும்?”

“அதுக்கு என்ன மாமா?”

“சொத்தைப் பூராம், மாப்ள அழைப்புக்கு முன்னாலய மாப்ள பேர்ல எழுதணுமாம். ‘அப்பம்தான் கல்யாணம்’ங்காங்க.”

"யாரு"

"அவரு, அப்பன், அம்மை, அண்ணன், மதினிக்காரி எல்லாரும் சேந்துக்கிட்டு."

"என்னய்யா, நாளைக்கு பொண்ணு கழுத்தில்தாலி ஏறினப்புறம்தானய்யா மருமகன்? அதுக்குள்ள சொத்த அவம் பேர்ல எழுதச் சொன்னா...என்ன அசிங்கம்ய்யா இது. மாமா! நீங்க தைரியமா இருங்க. ராவன்னா! வாரும்ய்யா. அவனுவளப் போயி என்னான்னு கேட்டுட்டு வருவோம்."

"நாம் அங்க எதுக்கய்யாபோகணும்?"

"ஒமக்கு சில நேரம் புத்தி சரியா வேல செய்யாது. கௌரவம் பாக்க நேரமாய்யா இது? போம், போயி நாயுடுவப் பாரும்!"

"அய்யா! நாயுடுவக் காணோம்!"

"எங்கய்யா, ஆக்குப்பரைல நிப்பாம். விசுப்பிள்ள கேசரின்னா உயிரு அவனுக்கு."

"மாப்ள! நம்ம வண்டில போங்களேன். ராமய்யா! காந்தி கிட்ட வண்டி சாவி இருக்கு வாங்கிட்டுவா."

"மாமா! அரைமணி நேரத்தில் எல்லாஞ்சரி பண்ணிரலாம். யார்ட்டயும் மூச்சு விட்டிராதீய."

"ஐயா! ஒங்க கொழுந்தியா ஒங்களக் கூப்பிடுதாக. ஏதோ பேசணுமாம்"

"நீரு சொல்ல வேண்டியதுதான, 'நானும் பெரிய வீட்டு அத்தானும் போறோம். எல்லாம் சரியாயிரும்'ன்னு."

"எல்லாஞ் சொல்லாம இருப்பனா? அவோ ஒரே பிடியா, ஒங்கள உள்ள வரச் சொல்லுதாவ."

"மாப்ள! எம்புள்ள மனசொடிஞ்சா, நா ஒரு காசுக்கு பெறுவனா, மாப்ள?"

"அய்யோ, நீங்க ஒரு ஆளு! அவ என்னைய மாரி கெட்டிக்காரி. இரிங்க வாரேன்."

"என்னம்மா?"

"இந்தக் கல்யாணம் வேண்டாம் அத்தான்."

"அட கிறுக்கு ஒரு அரைமணி நேரம் பொறு. அத்தான் பாத்துக்கிடுதேன்."

"அது எனக்குத் தெரியாதா அத்தான்? அதாம், ஒங்கள உள்ள கூப்ட்டேன். ரெண்டு மணி நேரத்தில் மாப்பிள்ளை அழைப்பு. இந்த நேரத்தில் வந்து, சொத்து பூராம் எழுதிக் கேக்காங்களே? அந்த வீட்ல போயி நான் நிம்மதியா வாழ முடியுமா? சொல்லுங்க. நல்லவேள! ஒங்க மாமன் சொத்துக்குத்தாம் வந்திருக்காங்களே ஒழிய, என்னயக் கல்யாணம் பண்ண இல்லங்கத முன்னக் கூட்டிச் சொன்னதுக்கு, அவங்களுக்கு நன்றில்லா சொல்லணும்?"

"எம்மா! எதாவது முட்டாப் பயலுவ, எதையாவது ஒளறிருப்பானுவ. எச்சிப் பயலுவ கேட்டுட்டானுவ! சரி பண்ணிரலாம். என்னா?"

"நீங்க பெரிய வெவரமான ஆளுன்னு, ஊரே சொல்லுது. ஒங்க வெவரம் என்னன்னு இப்பந்தானே தெரியுது. இத்தன மனுஷத் தன்மையில்லாத ஆட்களை ஒங்க சாமர்த்தியத்தில சரிக்கட்டி, நான் கழுத்தை நீட்டி வாழ்நாள் பூராம் ஒங்க பஞ்சாயத்திலயதான் கொழுந்தியா வாழணும்னா, பண்ணுங்க!"

"போடு அப்பிடி! நீ இவ்வளவு ஸ்டிராங்கா இருப்பேன்னு எனக்குத் தெரியாதுல்ல? இப்பம்தான் நீ ஏங்கொழுந்தியா! சரி விடும்மா. தாத்தா சொல்லுவா ஒருத்தன் பொண்டாட்டிய ஒருத்தன் கொண்டு போயிர முடியாதுன்னு."

" அப்பாவ?"

"நான் பாத்துக்கிடுதம்மா."

15

“மூணு நாளா எங்கனயும் போக முடியல்ல அண்ணாச்சி. இந்தக் கட்டப்பயல கொல பண்ணாம, சரி வராது.”

“ஆமா அப்பிடில்லாம் கொல பண்ணிருந்தா, அவன நூறு தடவெயில்லா கொல பண்ணியிருக்கணும்?”

“அண்ணாச்சி! நீங்க செல்லம் குடுத்து, குடுத்து அவனுக்கு ரொம்ப ஏத்தம்.”

“ஏய் ராமா! அவாள் என்ன மடியிலயா வச்சு கொஞ்சுதாவ? மூதிக்கு எத்தன சொன்னாலும் சரி, புத்தி வரமாட்டுக்கின்னா, அவாள் என்ன பண்ணுவாடே?”

“சரி ராவன்னா, சொல்லிட்டுப் போறானுவ, உன்ட்ட என்னடே பண்ணிட்டாம், இப்பம் கொல பண்ணணும்னு நிக்கே?”

“அண்ணாச்சி! திடீர்னு அன்னிக்கு நடுசாமத்தில் வந்து, ‘மதுரையில அண்ணாச்சிக்கு வேண்டிய ரொம்ப பெரிய வீட்டில ஒரு விசேஷம். ஒஞ்சமையலப் பத்தி அங்கன ஏற்கெனவே சொல்லியிருக்காக. அட்ரஸ் தாரேன். வெடியக்காலம் மொத கட்டபொம்மன்ல போயிரு’ன்னு சொல்லி ஒரு இருவத்தி அஞ்சு ரூபாவயும் கொடுத்து ஒரு அட்ரஸையும் கொடுத்திட்டு போயிட்டாண்ணாச்சி.”

“என்ன விசேஷம்ன்னு கேட்டியாடே நீ?”

“கேட்டேனே ராவன்னா. ‘பிள்ளைக்கு பொறந்தநா. அவங்க வீட்டுக்கு மட்டும்தான். அண்ணாச்சிக்கு ரொம்ப வேண்டியவங்க. அதுனாலே தாம் ஒம்ம அனுப்பச் சொன்னா அண்ணாச்சி’ன்னாம்.’ பணம்ல்லாம் அங்கனயே தந்திரு வாங்க’ன்னு வேற சொல்லிட்டாம். ‘காலேல டிபன்ல்லாம் அவங்க வீட்டுப் பொம்பள ஆட்க பண்ணிருவாங்க. மத்தியானம் நம்ம சொதி வெக்கணும்னா, இன்னிக்கு ஒம்ம விட்டா வேற யாரு இருக்கா? அதாம் ஒம்ம அனுப்பச் சொல்லி

அண்ணாச்சி. உத்த்ரவு'ன்ான்."

"நா காலயில குளிச்சிட்டு, நாலரை பஸ்ஸுக்குப் போயிட்டேன் அண்ணாச்சி. அங்க அப்படி ஒரு ஆளே இல்லேன்னா பரவால்ல அண்ணாச்சி. அப்படி ஒரு தெருவே இல்ல! மதுரையில போயி நாறிட்டு வந்ததுதாம் மிச்சம். கைல வேற துட்டு கெடயாது. பஸ் ஸ்டாண்டில யாராவது தெரிஞ்ச ஆள் வரமாட்டாங்களான்னு வந்து காத்துக் கிடந்தேன். நல்லவேள, அவாள் நம்ம பத்தை கண்டக்டரு ராமச்சந்திரன் வந்தாகளா, நா பொழச்சேன். இல்லேன்னா, என் நெலமைய கொஞ்சம் நெனச்சுப் பாருங்க அண்ணாச்சி."

"ஏய் அவம்ல்லாம் ஒரு மனுஷம்ன்னுட்டு அவம் சொன்னாம்ன்னு போயிருக்கியே. ஒன்ன என்னடே பண்ணலாம்?"

"அண்ணாச்சி பேர வேறச் சொல்லிட்டாம்ல்லா ராவன்னா."

"எல! நாஞ்சொல்லி விடறதுன்னா, ராவன்னா தானல வருவாரு?சரி சரி போ. இப்பம் வருவான்; நா கேக்கேன். அவன எங்கனயும் கண்டா, சண்டைக்கு கிண்டைக்கு போகாதே.சொல்லுறத புரியுதுல்லா?"

"நாய அடிப்பானே, மலத்த சுமப்பானே?"

"இதுல்லாம் பேசுடே, ஆனா நாயி சொன்னதுன்னு போயி, நாயா அலஞ்சிட்டு வந்திருக்கிய!"

"எல! செலவுக்கு ரூவா கீவா வேணுமால?"

"இல்லண்ணாச்சி, இருக்கு."

"சரி சரி, போய்ட்டு வா."

"ஏல! இது என்ன வேலேன்னு, இப்படியே ஒவ்வொருத்தன்ட்டயும் சேட்டை பண்ணிட்டேருக்கே. சாகுற வர, மாற மாட்டியா?"

"எல்லாம் உடன் பிறந்தவை, ஒழியாது."

"ஏல! அந்தப் பய கோவில்பட்டிக்கு அந்தப்புரம் போனது கெடயாது. நாயே, அவனப் போயி மதுரைக்கு அனுப்பிச்சிருக்கியே! எம்புட்டு கொழுப்பு இருக்கணும்?"

"அது, ஆறுமுகம் மக சடங்குக்கு மத்தியானம் சாப்பிடப் போயிருந்தேன். ராமன்தாம் பரிமாறுனாரு. சொதி கொஞ்சம் கூடுதலா வாங்கிச் சாப்பிட்டேன். 'ஒரு மாசத்துக்கு ஸ்டாக் பண்ணுதியால கட்டயா?'ங்காரு. 'நம்ம கைப்பக்குவம் அப்படிடே. சொதின்னா, ராமன் வச்சாத்தாம்'ங்காரு. ஒரு தடவையோட நிறுத்திட்டாப் பராவல்ல அண்ணாச்சி. பல தடவெ 'கட்டையா கட்டையா'ங்காரு. 'ஒரு சட்டில வேணா கொண்டு போறியால?"ன்னு வேற கேக்காரு. அங்கன வந்திருந்த பொம்பளப் புள்ளயெல்லாம் சிரிக்கிறாங்க அண்ணாச்சி. அதக்கண்டவொடனே அவாளுக்கு, கூடக் கொஞ்சம் கொண்டாட்டம். அவாளோட தொழில் திமிர அடக்கணும்னு முடிவெடுத்தேன். அதாம் அவாள 'மதுரை ரிட்டனா'க்குனேன்."

"அதுக்கு எதுக்குல அண்ணாச்சி பேரச் சொன்னே?"

"அப்பந்தாம் ஒடனே பொறப்பட்டுப் போவாரு."

"எங்க கவலெ எல்லாம், என்ன தெரியுமால? நீ என்னிக்காவது செத்துக் கெடந்தா, 'எவம் கொன்னான்'ன்னு தெரியாம திண்டாடப் போறோம்ங்கதுதான்!"

"நீங்க பேசாம போலீஸ்ல சேந்திருங்க ராவன்னா?"

"அய்யா! கந்தசாமி வந்திருக்காம்."

"என்னடே, என்ன சுகமா இருக்கியா? வேலையில ஒண்ணும் பிரச்சினையில்லயே? ரொம்ப நாளா காணும்."

"வேல சரியா இருக்கு, அண்ணாச்சி."

"மாமி வீட்டிலதான சாப்பிடுத? அவங்கள பாத்தும் ரொம்ப நாளாச்சு."

"அங்கதாம் அண்ணாச்சி சாப்பிடுதேன். அதப் பத்தித்தாம் ஒங்ககிட்ட பேசணும்ன்னு வந்தேன்."

"அங்க என்னடே பேசுறதுக்கு இருக்கு? மாமி தங்கமானவங்கல்லா!"

"ரொம்ப முக்கியமான வெஷயம் அண்ணாச்சி."

"அப்படியா! கட்டப்பயலே நீ போயிட்டு பொறவு வா."

"என்னடே வெஷயம்?"

"அண்ணாச்சி! மாமி பொண்ணு இருக்குல்லா?"

"மீனாட்சியாடே?"

"ஆமா அண்ணாச்சி. அதனாலதாம் பிரச்சினை."

"அதால என்னடே பிரச்சினை?"

"தாய் தகப்பன் இல்லாத பயல, இந்த அளவுக்கு படிக்க வச்சு ஆளாக்கி, ஒரு வேலயும் வாங்கிக் குடுத்தீய. நீங்க இல்லேன்னா, எங்கியாவது பொறுக்கியாத்தான அண்ணாச்சி திரிஞ்சிசுக் கிட்டிருந்திருப்பேன்."

"ஏய், மடயா! இப்பம் எதுக்குல அதையெல்லாம் சொல்லிக்கிட்ருக்க? நா இல்லேன்னா, வேற யாரோ. ஒவ்வொரு உயிருக்கும் கடவுள் வழி வச்சிருப்பாம்டே. வெஷயத்தைச் சொல்லு."

"அந்தம்மாவுக்கும், புள்ளைக்கும் வேற யாருமே கெடயாது. அவங்களும், ஒன்னய மாரித்தாண்டா. அவங்க வீட்டிலயே சாப்பிட் டுக்கோ. நீ குடுக்கற பணம் அவங்களுக்கு ஒதவியா இருக்கும்'ன்னீய. போதாக்குறைக்கு, மாமி போடற அப்பளத்தையெல்லாம் சாயங்காலம் வேலய விட்டு வந்ததுக்கப்புறம் கடகடயா கொண்டு போட்டு, பணமும் வாங்கிக் குடுத்துக்கிட்டிருக்கேன்."

"அதுல்லாம் நீ சொல்லியாடே தெரியணும்? மாமியே பல தடவே எங்கிட்டச் சொல்லி சொல்லி பெருமப்பட்டிருக்கு. ஒன்னயப் பத்திப் பேசும்போது, அவங்களுக்கு கண்ணில தண்ணியே வந்திரும். 'போன ஜென்மாவில அவன் என் தம்பியா இருந்திருக்கணும்! விட்ட கொற, தொட்ட கொறயா பகவான் ஒங்க மூலமா அவன அனுப்பிச்சு வச்சிருக்கார்'ன்னு பல தடவ சொல்லியிருக்குடா. அங்கன எதும் வெவகாரமா? யாரும் சின்னத்தனமா எதும் பேசுனானுவளா?"

"நீங்க கூப்பிட்டுச் சத்தம் போட்டப் புறம், ஒரு பயலும் பேசினதில்ல அண்ணாச்சி."

"பொறவு என்னடே?"

"வேற யாராலயும் ஒண்ணுமில்ல, அண்ணாச்சி. மீனாட்சியாலதாம் பிரச்சினையே!"

“என்ன, எந்தப்பய கூட யாவது பழக்கமா? காதல் கீதல்ன்னு ஏதும் வம்பில மாட்டிக்கிட்டிருக்கா?”

“யார் கூடயும் கெடயாது அண்ணாச்சி. எங்கிட்டத்தாம், தப்பு தப்பாப் பேசுது. ‘கல்யாணம் பண்ணினா, ஒன்னத்தாம் பண்ணிப்பேன்’ அப்படி, இப்படின்னு ஒளருது. மாமிட்டச் சொல்றதுக்கு எனக்கு சங்கடமா இருக்கு அண்ணாச்சி. எனக்கு கையும் ஓடல, காலும் ஓடல. என்ன செய்யிறதுன்னு தெரியாமத்தாம், ஒங்ககிட்டே ஓடியாந்தேம். நாளைக்கு என்னயக் கூப்பிட்டு நீங்க வெசாரிக்கிற லெவலுக்கு வந்திருமோன்னு, பயமா இருக்கு.”

“சரி..சரி..நீ போயி ஒண்ணும் அவங்ககிட்ட சொல்லிராத என்ன? நான் பாத்துக்கிடுதேன். ஒனக்கு அந்தப் புள்ள பேர்ல ஆசையில்லியே? அதச் சொல்லு.”

“அப்படில்லாம் ஒண்ணும் எம் மனசில கெடயாது அண்ணாச்சி. ஆனா திரும்ப திரும்ப அவ அப்டியே சொல்லிச் சொல்லி மனசு சங்கடப்படுதுல்லா அண்ணாச்சி?”

“உண்மை சொன்ன பாத்தியா அதாம்ல ஒங்கிட்ட புடிச்ச வெஷயம். அந்தப் புள்ளட்டேயும், மொரட்டுத்தனமா என்னத்தையும் பேசிச் தொலைச்சிராதல. நான் பாத்துக்கிடுதேன்.”

“நா வரட்டா, அண்ணாச்சி?”

“போயிட்டு வா! மாமிட்ட மூச்சு விட்டிராத, ஏஞ்சொல்லுதம்னா, ‘நம்ம விட்டா வேற ஆளு கெடயாதுங்கதாலய, இப்படிப் பண்ணுதாங்க’ன்னு அந்த அம்மாளுக்கு ஒரு நெனப்பு வந்திரக்கூடாது பாரு.!”

“ஐயோவ் ராவன்னா! இந்தக் கொடுமையப் பாத்தீராய்யா? அது பிராமணப் புள்ள. வீட்டில ஆம்பளைத் துணை வேற கெடயாதா’ இந்தப் பய ஒருத்தன் தாம். அதாம், வெவரம் புரியாம, ‘காதல், கீதல்’ன்னு பேசியிருக்கும்ன்னு நெனக்கேன். மாமிட்ட எப்படிப் பேசுறது? ஏற்கனவே இந்த டிரைவர் பயலும் சுப்பய்யரும், இந்தப் பயல மாமியோட சேத்துப் பேசுனதுக்குத்தாம் அடி பட்டானுவ. இப்பம்...சரி வரட்டும். பய, எப்படிப் பய பாத்தீரா! வேறொரு பயல்ன்னா, இதுக்குள்ள கூட்டிட்டு ஓடிருப்பாம். என்ன பண்ண?”

“மாமியக் கூட்டிட்டு வாரேன். சொல்லிர வேண்டியது தான்.”

“நன்னா இருக்கேளா?”

“இருக்கேன் மாமி. நீங்க எப்டி இருக்கீங்க? பொண்ணு நல்லா இருக்காளா? கந்தசாமி நல்லா இருக்காம்ல்லா?”

“எல்லாரும் ஈஸ்வர க்ருபைல நன்னா இருக்கோம். ஏதோ ‘கூப்பிட்டேள்’ன்னு ராமையாப் பிள்ளை வந்து சொன்னார்.”

“இல்ல, நானே அங்கன ஒரு நடைவந்திரலாம்ன்னு தாம் நெனச்சேன். முடியல. அதாம் ராவன்னாவ அனுப்பிச்சு வச்சேன்.”

“நீங்க எங்காத்துக்கு வர வேண்டாம்ன்னு சொல்வேனா? குசேலர் அவல்தான் தந்தார். நான் நல்ல அவல் உப்புமாவே கிளறித் தந்திரமாட்டேனா?”

“ஒண்ணும் இல்ல மாமி. மீனாட்சிக்கு என்ன வயசிருக்கும்?”

“இந்த ஆவணில இருபத்திரெண்டாறது. என்ன திடீர்ன்னு கேக்கறேள்?”

16

“இல்ல வயசாயிட்டு இருக்கே, அவளுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி வச்சிரலாமேன்னு தான். நீங்க ஒண்ணும் தப்பா நெனச்சிரக்கூடாது. ‘என்னடா இவரு பாட்டுக்கு கூப்பிட்டு விட்டாரு; பொண்ணுக்கு கல்யாணம் பண்ணிரவேண்டாமான்னு கேக்காரு’ன்னு”

“என்னன்னா இப்படிப் பேசறேள்? எனக்கும் என் கொழந்தைக்கும் ஒங்கள விட்டா ஆரு இருக்கா? அவ கல்யாணம்ங்கறதே, ஒங்களத் தவிர இந்த ஊர்ல வேற யார் நடத்தப் போறா? என்னண்டை போயி இந்தப் பெரிய வார்த்தையெல்லாம் நீங்க பேசாலாமோ?”

“இல்ல கேட்டேன் அம்புட்டுத்தான். சரி மாமி! நான் வரன் பாக்க ஏற்பாட்ட இன்னிக்கே ஆரம்பிச்சிருதேன். செலவுல்லாம் நான் பாத்துக்கிடுதேன்.”

“வரன் எங்க பாக்கப் போறேள்?”

“என்ன மாமி அக்ரகாரத்தில என்ககு எல்லாருமே வேண்டிய ஆளுதானே?”

“யார்ட்ட? இவாள்ட்டயா?

“வேற?”

“நீங்க பெரியவா. ஒங்களுக்கு தெரியாதது ஒண்ணுமில்ல. நாஞ்சொல்றேன்னு வருத்தப்பட்டுக்கக் கூடாது. எங்காத்தில அவர் என்னை விட்டுட்டுப் போறச்சே, மீனாட்சிக்கு வயது அஞ்சு. அதுக்கப்புறம் இவா ஒவ்வொருத்தர் ஆத்திலயும் வேலைக்குப் போயிட்டு நான் பட்ட துன்பமெல்லாம், அந்தப் பகவானுக்கே பொறுக்காது. ஒவ்வொருத்தர் ஆத்திலேயும் நான் வேல பாக்கறச்சே, திண்ணேல ஒக்காந்துண்டு ஊர் வம்பளக்கற இந்தக் கெழட்டு வெடலைகள் என்னை என்னல்லாம் பேசிருக்கா! ஒவ்வொருத்தர் அடுக்களையுள்ளும், இந்தப் பெரியமனுஷா எத்தனை சின்னவளா எம் முன்னால நின்னிருக்கா! ‘ஆம்படையான் இல்லாதவதானே... அதிலும் ஏழப் பொண்ணு. இந்த வயசில என்ன பண்ணுவே’ன்னு அவா இரக்கம் காட்ட வந்தது. நா மசியலேன்னவுடனே எனக்கு தேவடியாப்பட்ட்ம் கட்டினது. ஒங்களுக்குத் தெரியாதா?

எங்கொழந்தையும் நானும் இன்னிக்கு ரெண்டு வேள சாப்டுண்டு. பகவானப் ப்ரார்த்தன பண்ணிண்டு இருக்கோம்ன்னா நீங்க கொடுத்த அந்த வீடும், ஒங்க

பாதுகாப்பும்ன்னா காரணம்? அத்தனைக்கும் மேல, ஒரு வைரத்தைன்னா எங்கிட்ட ஒப்படச்சிருக்கேள்! அதாம் கந்தசாமியத்தான் சொல்றேன்.

அவா என்னயத் 'தேவிடியா'ன்னு சொன்ன போதெல்லாம், நா வருத்தப்பட்டதில்லை. ஆனா, எந்தம்பியா பகவானாப் பாத்து ஒங்க மூலமா கொடுத்த கந்தசாமியோட என்ன சேத்துப் பேசினப்பதாம், நான் ரொம்ப வருத்தப்பட்டேன். 'பகவானே! இது என்ன சோதனை'ன்னு அழுதிருக்கேன். அப்பக்கூட, 'நல்ல வேள, எங்கொழந்தை மீனாட்சியோட சேத்து அவனப் பேசல்லயே!ன்னு சந்தோஷப் பட்டிருக்கேன். இந்த கிராதகாள்ட்ட போயி, என் பொண்ணுக்கு வரன் கேக்கப் போறேளாக்கும்?"

"என்ன மாமி இப்படிப் பேசுதீய? அப்பம் வேற ஊர்ல ஏதாவது பையன் இருந்தா சொல்லுங்க. நான் ராவன்னாவ வச்சு மத்தத பாத்துக்கிடுதேன்."

"அதெல்லாம் நீங்க ஒரு பக்கம் அலைய வேண்டிய தேவையேயில்லை."

"என்ன சொல்லுதீய? கொஞ்சம் வெளங்கற மாரிச்சொல்லுங்க."

"நீங்க அதிர்ச்சி அடெஞ்சிரக்கூடாது."

"இல்ல"

"நம்ம கந்தசாமிக்கே மீனாட்சியத் தர்றதுன்னு நா முடிவு பண்ணி வச்சிருக்கேன்."

"மாமி இது சரிப்பட்டு வருமா? நாளைக்கு எவனாவது 'பெரிய வீட்டுக்காரம் இப்படி பண்ணிப்புட்டாம்'ன்னு பேசிறக்கூடாது பாருங்க."

"ஒங்கள இந்த ஊர்ல யார் பேசுவா? தவிரவும் ஒங்ககிட்ட இன்னொரு உண்மையும் சொல்றேன். மீனாட்சியும் அவனத்தான் விரும்பறா."

"அவ சின்னப்புள்ள. வெவரம் தெரியாத வயசு. வேற யார்ட்டயும் பழகற வாய்ப்பும் இல்லையா, அதாம் இவனையே சொல்லியிருக்கும்ன்னு நெனக்கேன். அது சரி வருமா?"

"அதுதான் சரி வரும். நா ஏன் சொல்றேன்னா, அவளே

அவன்ட்ட பேசிருக்கா. அவ நெனச்சுண்டிருக்கா, 'அம்மாவுக்கு ஒண்ணும் தெரியாது'ன்னு. நான் ஆத்தில ஒறக்கத்திலே இருக்கேன்னு நெனச்சிண்டு அவனண்டை இவ பேசறா. அவன் சொன்னான். என்ன நெனச்சிண்டு என்னண்டை இப்படிப் பேசறே? அம்மா சாதத்திலே வளர்ந்ததாக்கும் இந்த ஒடம்பு. என்ன பாவம் பண்ணினேனோ, இந்த ஜென்மத்திலே தாய் தகப்பன் இல்லாத அநாதையாய் போயிட்டேன். சோறு போட்ட வீட்டில துரோகம் பண்ணிட்டு, அடுத்த ஜென்மத்திலேயும் என்னெ துன்பப்படச் சொல்றியா?ன்னு. அப்பவே முடிவு பண்ணிட்டேன், அவன்தான் இவ ஆம்படையான்னு. என்ன, ஆச்சரியமா இருக்கா? இவளே போயி அவனண்டை நிக்கறச்சே, அவன் நெனச்சிருந்தா அவளக் கூட்டிண்டு எங்கேயாவது கண்காணாத தொலைவிலே ஓடிப் போயிருக்கலாமே? இல்லாம, அவளுக்குப் புத்தி சொன்னானே! அவனண்டைதாம் இவ புத்தியப் பறி கொடுத்திருக்கான்ன பொழுது, நேக்கு மனசெல்லாம் சந்தோஷம். நேக்கு வேண்டியதெல்லாம் வேற ஒண்ணும் இல்ல. கந்தசாமிக்கு இவளக் கல்யாணம் பண்ணி வைக்க ஒங்களுக்கு சம்மதம் தானே?"

"என்ன அப்டிக் கேட்டுப் போட்டீய? 'ஜாம், ஜாம்'ன்னு பண்ணிருவோம்."

"கா லேல வேற வேல ஜோலியில்லயாலே? வந்திட்டான். அவசரியில்ல. இவ சரியில்ல, தெரு....ஒழுக்கம், கற்புன்னுட்டு என்னத்தல பெரிய ஒழுக்கத்த கண்டுட்ட? தெருவச் சுத்தப்படுத்துதாராம். மனசு..மனசச் சுத்தமா வச்சிருக்கேளால? பேசவந்திட்டான்."

"என்னண்ணாச்சி, இவ்வளவு கோபப்படுதீய? நீங்க இருக்க தெருவில இப்டி ஒரு அசிங்கம்ன்னா, அது ஒங்களுக்குத்தானே அண்ணாச்சி அசிங்கம்?"

"ஓ...நீங்க நம்ம பேரப் பத்திக் கவலப்பட்டு ட்டேளா! அப்பம், நீ ஒரு முழு முட்டாப்பயங்கதுக்கு வேற என்னல வேணும்?"

"என்னண்ணாச்சி?"

"எல, நான் இதுவரைக்கும் அதப்பத்திப் பேசலன்னா, அப்பவே புரிஞ்சிருக்கணும்ல்லாடா.?"

"இல்ல, 'ஒரு பயலும் இதப்பத்தி பேசலயே, நாமா ஏன் எதுவும் பண்ணுவானேன்'னு நீங்க சும்மா இருக்கேளோன்னு தான் நான் வந்தேன்."

"சரி,சரி, நீங்க அந்த கணக்கிலே வந்தேளா?"

"ஒங்களுக்கு புத்தி சொல்லுற அளவுக்கு நான்ல்லாம் ஒரு மனுஷனா அண்ணாச்சி? தெருவில இத்தனை குடும்பம் இருக்கே, இந்த அசிங்கத்தெ நாம அனுமதிக்கலாமான்னு கேக்கத்தாம் வந்தேன்."

"எதுல அசிங்கம்? இப்பம், அந்தப் புள்ளய காலி பண்ணினா தெரு சுத்தமாயிருங்கீரு. அவ்வளவுதானே? அவ தப்புப் பண்ணினவ. தப்புப் பண்ணினவ இங்கன இருக்கக்கூடாது. அப்படித்தானடே?"

"என்னண்ணாச்சி, இதுதாம் ஊரறிஞ்ச வெஷயமாச்சே."

"அதாம், ஒம்ம மாரி பெரிய ஆளு

17

சொல்லுதீரு. சரி, ஒரேயொரு கேள்விக்கு மட்டும் நீரு பதில் சொல்லணும். சொல்லுவீராவே? ஏன்னா, சிவகாமிப் புள்ள தனியாத் தப்பு பண்ணியிருக்க முடியாதில்லாவே? கூட எவனாவது ஒரு ஆம்பளப்பய இருந்திருக்கணும். அவனெயெல்லாம் என்ன பண்றதுன்னு ஒரு வார்த்தை சொல்லிட்டீருன்னா, நாம அதுபடியே பண்ணிருவோம். என்ன சொல்லுதீரு?"

"அண்ணாச்சி, நீங்க இப்படில்லாம் கிராஸ் பண்ணா நா என்னத்த சொல்ல?"

"கிராஸ் இல்லவே, நியாயம் கேக்கேன். தப்புன்னா தப்பு'ன்னு சொல்லு, என்னா? அம்மைக்காரி செத்துப் போயிட்டா, அப்பங்காரன் எங்கேயோ ஓடிப் போயிட்டாம், எட்டு வயசிலருந்து, இந்தத் தெருவில் நாயா வேலை செஞ்சிருக்கு. எவளாவது, ஏழப்புள்ள, தாய் தகப்பன் இல்லாத புள்ளன்னு ஒரு பாவாடை, சட்ட எடுத்துக் குடுத்திருப்பீங்களாடே? பழசு கொடுப்பாங்க. எங்க செல்லப்புள்ளல்லான்னு சொல்லிச் சொல்லி வீட்டில் மிஞ்சின மிஞ்சாடியெல்லாம் போட்டு எல்லாரும் வேல வாங்கினாங்களா இல்லியான்னு, ஒங்க அம்மைக்காரிட்டப் போயிக் கேளு! பெரிய புள்ளயாகறதுக்குள்ளேயே அந்தப் புள்ளய சீரழிச்சானே...அவம் இந்த ஊர்லதானல பெரிய மனுஷனா இருக்காம்? அவன ஊர விட்டு ஏம்ல காலி பண்ணல? ஊருக்கு அவளால அசிங்கம்ங்கீரே.. அந்தப்புள்ள பெரிய மனுஷியாச்சே, இத்தனை வீடுகள்ல வேல செஞ்சிருக்கே, எவளாவது அந்தப் புள்ளக்கு ஒரு சேல துணி எடுத்துக் குடுத்தது உண்டா, அந்த பத்தமடைக் கிழவிக்கும் ஒரு துணையும் இல்லைன்னு, ஒண்ணுக்கு ஒண்ணு தொணையா இருக்கட்டுமேன்னு அவளோட குச்சில வச்சுக் கிட ஏற்பாடு பண்ணினேன். திடீர்ன்னு எல்லா பயலுவளும் பத்தமடைக் கிழவி மேல, 'ஆச்சி!ஆச்சி!'ன்னு பாசத்தெப் பொழிய ஆரம்பிச்சானுவ. பாட்டிக்கு காப்பிதான், டிபன் தான். வெத்தில பாக்கு பொகையில தான்னு ஒரே உபசாரம். 'செவகாமி! நல்ல பாவாடை, சட்டையா எடுத்துத் தாரேன்'ன்னு, எத்தன பய போயி இளிச்சிக்கிட்டு நின்னானுவன்னு ஒனக்குத் தெரியுமால? எனக்குத் தெரிஞ்சிரும்ன்னு பாதி பயம். மனசுக்குள்ள இருக்கு அழுக்கு. எப்டியாவது அந்தப்புள்ள மேல கைய வச்சிரணும்ன்னு எத்தன பேர் அலஞ்சான்! கடேசில அந்த வாழக்கா சொமக்க பயமேல இந்தப் புள்ளக்கும் ஒரு பிரியம் இருக்கது தெரிய வந்து

அவனுக்கே, சரி ஏழைக்கு ஏழை தொணைன்னு கட்டிவச்சிட்டேன். அவன், வயித்தில புள்ளயக் குடுத்திட்டு ஓடிட்டாம். நல்லவேள, ஆம்பளப்புள்ள பொறந்தது. நான் கேக்கேம்லே பதில் சொல்லு. அவ தப்பானதில எவனுக்குல்லாம் பங்கிருக்கோ, அவ்வளவு பயலயும் காலி பண்ணனும்ன்னா தெருவில பாதிப்பேரு காலியாகணும். தயாரா இருக்கேளால? ஏல, பெரிய மனுஷனுவ யாரையாவது சேத்துக்கிட்டு வந்தா, அவளுக்கும் சேத்து வரவேற்பு குடுக்கியோ? பெரிய மனுஷனுவ கூடய வாராளுவ, போறாளுவ. பத்திரிக்கை பத்திரிக்கையா எழுதுறாளுவ. கூட்டம்ல்லாம் பேசி, ஒங்க கிட்ட புத்தில்லாம் சொல்லுறாளுவ. அவளுவள, சமுதாயத்திலே யாரு காலி பண்றது? போலே! போயி, பொண்டாட்டிய சந்தோசமா வச்சுக்கிடற வழியப் பாரு."

"நா எதச் சொல்ல வந்தேன். என்னண்ணாச்சி, நீங்க பொண்டாட்டிய சந்தோஷமா வச்சுக்கங்கேளே? எம் பொண்டாட்டிய நான் எவ்வலவு சந்தோஷமா வச்சிருக்கேன்னு ஊருக்கே தெரியுமே!"

"அப்படியா? எப்படி சந்தோஷமா வச்சிருக்கீரு, சொல்லுமே."

"அவளுக்கு என்னண்ணாச்சி கொறவு, டி.வி.தான்.. பிரிஜ்ஜுதான்.. வாஷிங்மெஷின்தான்."

"அப்படியாடே! அதுல்லாந்தான் அவள சந்தோஷமா வச்சிருக்காக்கும்? இந்த வெவரம் புரியாமேல்லா, நான் ஒங்கிட்டப்போயி கேட்டுட்டேன்."

"சந்தோஷமா இல்லாமலா, புள்ள பெத்திருக்கோம்? இப்பம் பிரசவத்துக்கு அனுப்பிச்சிருக்கேன்."

"புள்ள பெத்திட்டா பொம்பள சந்தோஷமா இருக்கான்னு அர்த்தமால?, ஏல, என்னிக்காவது ஒம் பொண்டாட்டி கிட்ட "சந்தோஷமா இருக்கியா? ன்னு கேட்டிருக்கியால?"

"என்ன சொல்லுதீய அண்ணாச்சி. நாங்க சந்தோஷமாகத் தான் இருக்கோம்."

"ஏல, நீ சந்தோஷமாத்தாம் இருந்திருப்பே அது எனக்குத் தெரியாதா என்ன? அவட்ட, என்னைக்காவது நான் சொன்ன மாரி கேட்டுப்பாத்திருக்கியாலே?"

“இதெல்லாம் கேக்கவா செய்யணும்? தெரிஞ்ச விஷயந்தானே!”

“ஏல, கேட்டியான்னா, அதுக்கு பதில் சொல்லுறத விட்டுட்டு, தெரிஞ்ச விஷயம்ன்னா.. பொம்பள ஒங்களுக்கு டி.வி. மாரித்தானல ஸ்விட்ச் போட்டா படம் தெரியணும். நாஞ் சொன்ன மாரி ஒரு நா கேளு. பயங்காட்டாம நல்ல விதமா கேளு. அப்பந்தாம்ல ஒங்க லச்சணம் ஒங்களுக்குத் தெரியும்?”

“எதக் கேட்டதுக்கு, என்னத்தச் சொல்லுதீய அண்ணாச்சி?”

“பொம்பளயப் பத்திச் சரியாத் தெரியாத பய, என்னல பேசுதேன்னு சொல்லத்தான், இதச் சொல்லுதேன். நீ என்ன? பெரிய பெண்ணுரிமை, தாலி நூலுன்னுல்லாம் பேசிட்டு அலயுதானுவளே... அவங்க யாராவது கேட்டிருந்தாத்தானல, நீ கேப்ப? ஊரு பூரா பொம்பளப்புள்ளைகளை பத்தி பம்மாத்துப் பண்ணிட்டு அலயுதானுவ. இந்த ஆம்பளப்பயலுவள மாரித்தான் அவளுக்கும் ஒடம்புன்னு ஒண்ணு இருக்கு. அதுக்கும் பசி இருக்கு, தூக்கம் இருக்கு, எல்லாம் இருக்கு. எத்தன புள்ளக வெளிய தெருவுல சொல்ல முடியாம நெஞ்சுக்குள்ள நொறுங்கிப் போய் கெடக்குன்னு எவனாவது கேட்டுருக்கானால? ஒடனே பண்பாடு, தொன்மையான கலாச்சாரம், கற்புன்னு கத விடுத? எல கல்யாணம் ஆயி அந்தப்புள்ள உண்டாயிட்டுன்னு வச்சுக்கோ...ஒடனே சீமந்தம்ன்னு ஒண்ணு நடத்துதானுவளே, அது என்ன? இவாள் ஆம்பளன்னு நிரூபிச்சிட்டானாம்! அதுக்கு ஒரு பொம்பளல்லா காரணம்ன்னு நெனச்சானுவளா? சொன்னதக் கேளு. வீட்டுல போயி, ஒன்னய மாரி அலயுதானுவளே.. அவனுவளயெல்லாம் கேக்கச் சொல்லு. வீட்டுல சந்தோஷமா இருந்தாளான்னு, அப்பம்தாம்ல ஒங்களுக்கு தெரியும். பெரிசா வந்துட்டான், சிவகாமியக் காலி பண்ணணும்ன்னு...”

“வாழக்காகாரந்தான் ஓடிப் போயிட்டாம். வேற யாரயவாவது கல்யாணம் பண்ணிருக்கலாம்லா?”

“அதத்தாம்ல சொல்ல வாரேன். அப்பிடிச் சொல்லி சொல்லி எத்தனபய அந்தப் புள்ளய நாசம் பண்ணிட்டாம் தெரியுமாலே? நான் சொல்லும் போதெல்லாம் அந்தக் கிறுக்குப் பயபுள்ளயும் கேக்கல. திடீர்னு வந்து நிக்கும் கெழவியக் கூட்டிக்கிட்டு. டீக்கடைக்காரரு ரொம்ப பிரியமா இருக்காரு. நெதம் முப்பது ரூபா சம்பளம் வாங்குதாரு.

அதாம் அண்ணாச்சிகிட்டே கேக்க வந்தேன்னுது. அந்தப் பயல கூப்பிட்டு வெபரம்ல்லாம் சொல்லி கல்யாணம் பண்ணி வச்சேன். ஆறாம் மாசம் ஓடிப் போயிட்டானே. மூணு தடவெ கல்யாணம் பண்ணியும் மூணு மாசம், ஆறு மாசம்ன்னு, ஓடிப்போயிட்டானுவளே."

"அது எப்படி அண்ணாச்சி, ஒங்கள மீறி ஒரு பயலாவது ஓட முடியுமா?"

"அட முட்டாப் பயலே. எனக்குப் பயந்துக்கிட்டிருந்து என்னல பண்ண? அந்தப் புள்ள கூட வாழ வேண்டாமால? அதப் போட்டு தும்பப்படுத்தவா? கிறுக்கன். அந்த மட்டுக்கும் அவனும் ஓடிப்போய் அது என்னத்தையோ வாழ்ந்துக்கிட்டிருக்கு. அத்தனை ஏன்? ஓம் மச்சினனே போய் கல்யாணம் பண்ணினா ஒன்னயத்தாம் கல்யாணம் பண்ணுவேம், இல்லேன்னா உசிர விட்டிருவேம்ன்னு வசனம் விட்டுப்பார்த்திருக்காம். ஆனா, அந்தப்புள்ள வெவரமாயிட்டுது. இந்தக் கல்யாணம்ல்லாம் இருபது நாளைக்கு மேல தாங்காதுன்னு.எத்தனப் பய, அவளுக்கு வாழக்கையைக் குடுத்திரணுமுன்னு அலயோ அலன்னு அலஞ்சிருக்காம்ன்னு நெனக்கீரு."

"அதுக்காக வெபச்சாரம் சரிங்கேளா?"

"ஏல, திரும்ப திரும்ப கூமுட்டத்தனமா பேசக்கூடாது. அவட்ட பட்டியல் வாங்கிருவோம். அதுபடி நடவடிக்கை எடுத்திர வேண்டியது தான். தயாரான்னு சொல்லு. ஓம் மச்சினன் மட்டுமல்ல, ஓங்குடும்பத்திலேயே பல பேர் சிக்கலாயிருவாங்க. தெரியுதாடே! வழி இல்லாத புள்ளல. அவனவன் சமயத்துக்கு தகுந்த மாரி ஏமாத்திருக்காம். கழுத ஏமாந்து போச்சு. பளிச்சின்னு பொம்பளப்புள்ளகள இப்படிப் பேசாதீங்கடே."

"இது யாரு? என்ன 'சுனா! காலேலேய அவாளப் பாக்க வந்திருக்கீரு."

"யோ ராவன்னா, எங்கனய்யா போயித் தொலஞ்சீரு. அவம் தெருவச்சுத்தப்படுத்தணும்ன்னு வந்திருக்காம்."

"அதுதாம் மாநகராட்சி இருக்கே. இவாளுக்கு எதுக்கு இந்த வேல?"

"அது சரி. எங்கன போய்ட்டு வாரீரு?"

"பத்தமடைக் கெழவிக்கு ஒடம்பு சரியில்ல. சிவகாமிப் புள்ள காலேலய வந்து அழுதது. அதாம், நம்ம கம்பவுண்டர் அய்யரக் கூட்டிட்டுப் போயி காம்பிச்சிட்டு வாரேன்."

"கெழவி மண்டயக் கிண்டயப் போட்டுரமாட்டாளே?"

"சேச்சே, சும்மக் காய்ச்சல், அதிலயும் நம்ம கம்பவுண்டர் அய்யர் மருந்தச்சாப்ட்டா காச்சலாவது ஒன்னாவது."

"என்ன 'சு'ன்னா, எதச்சுத்தம் பண்ணணும்ங்கீய?"

"சிவகாமிய தெருவ விட்டுக் காலி பண்ணணுமாம். தெருவுக்கே அசிங்கமாம்"

"அப்ப தெருவில பாதி காலியாயிரும்வே! 'சு'னா, பொம்பளன்னா எளப்பமா நெனக்கக்கூடாது. வீட்டில பிரசவத்துக்கு அனுப்பிச்சிருக்கீயன்னு சொன்னாங்க. ஒரு வாரமாகல்ல, செவகாமியக் காலி பண்ணணும்ன்னுட்டு வந்து துடியா நிக்கேளே."

"ஓ...கத அப்படிப் போகுதா? என்னடா பயலுக்கு திடீர்ன்னு தெருப்பாசம் பொத்துக்கிட்டு வருதுன்னு பாத்தேன்."

"பொறவென்னய்யா, இவாள் போயி இளிச்சிருக்கா. அது 'போவே'ன்னுட்டுது. ஒடனே, ஒழுக்கம், கற்பு, கலாச்சாரம்ன்னு ஆரம்பிச்சிட்டா."

"ராவன்னா!"

"ஏய் குதிக்காத, நாறிப் போயிடும். ஓடு மொதல்ல. அந்தப்புள்ள இப்பம் வெளிய தெருவில போறதில்லய்யா."

"அதுதானே ராவன்னா. நீரு அன்னிக்குத்தானே சொன்னீரு. அதாம் எனக்கு தாங்கல்ல. இன்னும் கொஞ்ச நேரம் கழிச்சி வந்திருந்தேருன்னா, இந்தப்பய எங்கிட்ட அடிபட்டுத்தான் போயிருப்பாம்."

"தப்புப் பண்ணணும்ன்னாய்யா பண்ணுச்சி? பசி ஒரு பக்கம்; வயசு ஒரு பக்கம். இப்பம் வெபரமாயிட்டுது. ரெண்டு வீட்டில வேல பாக்கு; போதும் போதாதக்கு, முறுக்கு சுத்துது. இவனுவ நாயா அலயுதானுவ. பய ஒம்பது படிக்காம் ராமையா மாமா. ஆனா எவ்வளவு பெரிசா இருக்காம் பாத்தேளா? அவன் அப்பாவ மாரியேங்குய்யா. இப்பம், புத்தியாயிட்டேம் மாமாங்கிறா. எனக்கு கண்ணில தண்ணி வந்திருச்சுய்யா."

"முப்பதாண்டு கால அரசியல் வாழ்க்கை (அதுவும் ஒரே கட்சியில்). சில ஆண்டுகள் இலக்கிய வாழ்க்கை... ஆம், எனது வாழ்க்கையை இப்படிப் பிரித்துப் பார்த்துவிட முடியும்போல.

அரசியல் குறித்து எழுதுங்கள்... தரமானதாக இருக்கும். இலக்கியத்தில் நீங்கள் எழுதினால் அது பல்கலைக் கழக மாணவர்களுக்கே பாடமாக இருந்து உதவும்... எத்தனையோ நண்பர்கள், பெரியவர்கள், எத்தனை முறை எடுத்துச் சொல்லியும் முடியாத ஒன்று, சுதாங்கனால் இன்று நிறைவேறியுள்ளது. ஆம், அங்கொன்றும் இங்கொன்றுமாக சில பத்திரிகைகளில் நான் எழுதியிருக்கக்கூடும். ஆனால், முழுமையாக நான் எழுதியது இந்த 'குறுக்குத்துறை ரகசியங்கள்' ஒன்று தான்.

அரசியல்...எழுதலாம்தான். கொள்கைகளை மேடைகளுக்காக மட்டும் வைத்துக் கொண்டு, அறைகளுக்குள்ளே ஜாதீயத் தலைவர்களாக ஆட்டம் போட்டவர்கள்...உழைக்கின்ற கொள்கைச் சிந்தனையாளர்களை விட்டுவிட்டு அடிமைகளை மட்டுமே டில்லி வரை அறிமுகம் செய்கின்ற பெரியவர்கள், அடிமைகளாகவே தலைமைப் பதவியை பெற்று, அறிவுடையவர்களை அவமானப்படுத்தும் அறிவற்றவர்கள்.

இலக்கியம்...இது இன்னும் விசித்திரம். பத்தே பத்துப் பாட்டுக்களை வைத்துக் கொண்டு, தமிழகம் முழுவதும் கம்பனை ஆய்வு செய்யும் அறிஞர்கள்! வள்ளுவன் பெயரிலும், கம்பனின் பெயரிலும், இளங்கோ அடிகல் பெயரிலும், பாரதி பெயரிலும் உண்மையான தமிழறிஞர்கள் துவக்கி வைத்த போலித்தனமில்லாத அமைப்புக்களை தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டு அதன் விளைவாக ஆட்சியில் இருப்போர், அரசியல் வாதிகள் போன்றோரின் தொடர்புகளை வைத்துக் கொண்டு தங்கள் தொழிலைப் பெருக்கிக்க கொள்கின்ற தொழிலதிபர்கள். அரசியலில் வெற்றி

18

பெற்று சட்டப் பேரவைக்கோ, நாடாளுமன்றத்திற்கோ போய்விட்டதனாலேயே அவர்களை அழைத்து கம்பனையும், வள்ளுவனையும் பேசச் சொல்லுகின்ற மிகப் பெரியவர்கள், நல்ல தமிழ் அறிந்தவனை மதிக்கத் தயங்குபவர்கள்.

என் வாழ்க்கையின் ஒவ்வொரு ஏற்றத்தின் போதும், தாழ்வின் போதும் என்னை மேலும் மேலும் பக்குவப்படுத்துகின்ற வள்ளுவனும், என்னுள்ளத்துக் குள்ளே தனக்கென்று ஓர் இடம் பிடித்துக் கொண்ட கம்பனும், என்னை உரத்து சிந்திக்க வைத்த பாரதியும், புதுமைப்பித்தனும், பட்டினத்தடிகளும், காளமேகமும்.. என்று இவர்கள் அனைவரைக் குறித்தும் நான் சொல்லுகின்ற பெரிய சிந்தனைகளை எழுத்தாக்கலாம் தான். அதற்கெல்லாம் வாய்க்காத நேரம் இதற்கு வாய்த்ததற்கு காரணம், போலித்தனமில்லாமல் தமிழன் எக்ஸ்பிரஸிலிருந்து வந்த அழைப்பு!

“திருநெல்வேலி பாஷையிலேயே எழுதிவிட்டீர்களே.. சிலரின் கேள்வி. எனது திரைப்பட நண்பர்கள் திருநெல்வேலி மொழி என்று பல படங்களிலே எனது மொழியை சங்கடப்படுத்தியதைப் பார்க்க சகிக்காமலும், எனது ஊரிலேயே இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற, உண்மையிலேயே குறுக்குத்துறையோடு சம்பந்தப் பட்டிருப்பவர்களைப் பற்றி எனது ஊர் மொழியில் எழுதாமல் வேறு மொழியில் எழுதுவது, என்னை ஆட வைத்து ஓட வைத்து அழகு பார்த்த எனது ஊருக்கு நான் செய்கின்ற துரோகமாகாதா? எல்லாக் காலங்களிலேயும், எல்லாத் துரோகங்களையும் நான் தாங்கிப் பக்குவப் பட்டவனாகவே வாழ வேண்டும் என்பதற்காகவே, என்னிடம் எல்லாவித உதவிகளையும் பெற்றுக் கொண்டு என்னை சகல விதங்களிலும் காயப்படுத்தி பக்குவப் படுத்தியவர்கள் அனைவரும் இங்கேதான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவை அத்தனைக்கும் மேலாக, பள்ளிக்கூட வாசனையே அறியாத, சங்க இலக்கியங்களிலிருந்து கண்ணதாசன் வரை மிகச் சிறந்த ஆய்வு மனப்பான்மையோடு அணுகுவதற்கு என்னை தயார் செய்த எனது தந்தையும் தாயும் பேசிய மொழியில் எழுதாமல் வேறு எதில் எழுதுவது? இதில் வந்த அத்தனை மனிதர்களும் ஆணாயினும், பெண்ணாயினும்... பேசிய, பேசிக் கொண்டிருக்கின்ற மொழி இதுதானே? என்ன செய்வது அண்ணாச்சி?

"அண்ணாச்சி இருக்காகளா?" என்ற தலைப்பிலே எழுதுவதாக முடிவெடுத்து, பிறகு என் தோழன் சுதாங்கன் சொன்ன பத்துப் பன்னிரெண்டு தலைப்புகளுக்குள்ளே 'குறுக்குத்துறை ரகசியங்கள்'ஐ நான் தேர்வு செய்து தந்து விட்டு, நாலைந்து இதழ்களுக்கான சம்பவங்களையும் எழுதித் தந்துவிட்டு ஒராண்டு காலத்துக்குமேல் சென்னையில் புற்று நோய்க்காக சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த எனது மனைவியை அழைத்துக் கொண்டு ஊருக்குப் புறப்படுகின்ற நேரம்...எனது மனைவி காரில் ஏறி அமர்ந்திருக்கின்றார். நான் கார் ஏறப் போகும் நேரம், தொலைபேசி அழைப்பு அடுத்த இதழிலே போட, ஒரு முன்னுரை வேண்டுமென்று வேண்டுகோள்!

எனது மனைவியிடம் சொல்லிவிட்டு, அப்படியே உட்கார்ந்து எழுதுகின்றேன். மருத மரங்கள், நாவல் மரங்கள், இசக்கியம்மன், ஆனைப்பாலம், மின்னடிப் படித்துறை, படித்துறை இசக்கியம்மன், பைரவர் காவடி மண்டபம், நொண்டிப்பாலம், குறுக்குத்துறை முருகன் என்று எனது பேனா ஓடுகின்றது. தானாக ஒரு வரி அதிலே விழுகின்றது. "ஒரு வயதிற்கு மேலே குறுக்குத்துறைக்கு போவதென்பது யாராவது மண்டையைப் போட்டால் தான் என்றாலும்..." என்று. பல்லாண்டுகளாக எனது தாழ்விலும், உயர்விலும் பங்குபெற்ற எனது இனிய மனைவிக்காகத்தான் நான் குறுக்குத்துறைக்குப் போகப் போகின்றேன் என்பது தெரியாமலேயே விழுந்த வரிகள்!

ஆமாம். அந்த ஆரம்ப இதழில் நண்பர் அரஸ் போட்ட படத்தைப் பார்த்துவிட்டு, 'கொஞ்சம் முன் வழுக்கையை அதிகமாகப் போட்டிருக்கின்றாரே' என்று கேட்ட அந்த உயிர் என்னை விட்டுப் பிரிந்தது. அதே பாதை! பல மருத மரங்களைக் காணோம்; சில நாவல் மரங்களையும் காணோம்... ஆனால் மின்னடிப் படித்துறை அப்படியே தான் இருந்தது. நொண்டிப் பாலமும் தான். படித்துறை இசக்கியம்மன், கொடை கண்ட புதுப்பொலிவோடு இருந்தாள். ஆனால் எனது மனைவி மட்டும் இல்லை... அவளது சாம்பலும் தன்னில்தான் கரைக்கப்பட வேண்டும் என்று குறுக்குத்துறை கொண்ட விருப்பம்தானோ என்னவோ, ஒராண்டுக் காலத்திற்கு மேல் சென்னையில் இருந்தவள் 'நெல்லை வரவேண்டும்' என்று பிடிவாதம் செய்தாள்.

வெறும் ஆறாண்டுக்காலமே எனது நண்பனாக வந்து,

எனக்கு உண்மையானவனாக மட்டுமே இருக்கப் பிறந்தவனாகவே வாழ்ந்து, என்னை சேலத்திலே கொண்டு ஒரு அரசியல் கூட்டத்திற்காக விட்டுவிட்டு திரும்பும் வழியில் உயிர்நீத்த 'ராவன்னா'விற்குத்தான் இதனை நூலாக்கும் போது காணிக்கையாக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். 'ராவன்னாவை' எனது மந்திரி என்றழைத்து மகிழ்ந்த எனது மனைவியும், அதிலே முன்னுரிமை கேட்டு நிற்கின்றாள். எத்தனை உயரத்திலே நான் பறந்தாலும் எத்தனை தூரங்களிலே நான் புகழப்பட்டாலும் எனது விருப்பம் எல்லாம் ,எனது இனிய நண்பனும், என் உயிரினும் மேலான மனைவியும், எனது மூதாதையர்களும் கரைந்த இந்த குறுக்குத்துறையிலே தான் எனது சாம்பலும் கரைக்கப்பட வேண்டும்' என்பதுதான்.

- நெல்லை கண்ணன்

கேரளத்தில் நாவலும், நாடகமும் கலந்த ஒரு இலக்கிய வடிவத்தை படைப்பாளிகள் சோதித்தார்கள். அது இதில் சாத்தியமாகியிருக்கிறது. குறிப்பிட்ட பாத்திரங்களை வைத்துக் கொண்டு மக்கள் மொழியிலேயே மக்களைப் பற்றி சொல்கிறீர்கள். இதுதான் சரி, விசயத்தைச் சொல்லும்போது வடிவம் தானாகவே அமைந்துவிடுகிறது. வேண்டியதெல்லாம் ருசியாக இருக்கணும் என்பதுதான். உங்கள் எழுத்தில் இது இருக்கிறது. பலகாரம் செய்து தேர்ந்துவிட்டால் பிறகு விதம்விதமாக செய்யத் தோன்றும். பிறகு அவன் செய்வதெல்லாம் பலகாரந்தான். மக்கள் விசாரித்துத் தேடி வருவார்கள். இருட்டுக்கடை எங்கே இருக்கு என்று!!

- கி. ராஜநாராயணன்